
அதிக பக்கங்கள்!
கல்கி
KALKI
13.4.97
ரூ. 4.00
சித்திரைச்
சிறப்பிதழ்
ரா. கி. ரங்கராஜன்
• வலம்புரி ஜான்
எழுதும்
புதிய தொடர்கள்
ரூ. 50,000/-
— பரிசுப் போட்டி!
அழகு
ஸ்பெஷல்!

சவால் பள்ளத்தாக்கு! (புதிய பகுதி)


காலையிலிருந்து, இரவு வரை அடுத்தடுத்த வேலைகளின் நெருக்கடியில் ஒவ்வொரு தினத்தையும் எதிர்கொள்கிறார்கள், தொழிலதிபர்கள். எந்திரமயமான சவால் பள்ளத்தாக்கில் சிக்கிக் கொண்டால், தங்களின் தனிப்பட்ட ஆசைகள், தேவைகளை அவர்களால் நிறைவேற்றிக் கொள்ள முடிகிறதா...? அல்லது எப்போதுமே பிசினஸ்... டர்ன்ஓவர், ப்ராஃபிட் என்றே மூழ்கி தங்களைத் தொலைத்து விடுகிறார்களா...? முருகப்பா குரூப் நிறுவனங்களில் ஒன்றான பாரி அக்ரோ இண்டஸ்ட்ரீஸின் எக்ஸிகியூட்டிவ் டைரக்டர் எம்.எம். வெங்கடாசலத்தை சந்தித்தோம்.



38 வயதான துடிதுடிப்பான இந்த இளம் தொழிலதிபர், பழுத்த அனுபவம் வாய்ந்தவர்களைப் போன்று 'சுய தேடல்' பற்றி பக்குவமாகப் பேசுகிறார். இந்தப் பக்குவத்தின் பின்னணியில் உள்ள அவரின் கடும் முயற்சி பிரமிக்க வைக்கிறது!

ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில்

"குதிரையும் நானும் பேசிக் கொள்வோம்!"



• வெங்கடாசலம்

எம்.பி.ஏ. முடித்திருக்கும் வெங்கடாசலத்திற்கு, 10 வயதிலிருந்தே குதிரைச் சவாரியில் கொள்ளை ஆசை!

கல்லூரி நாட்கள் முடிந்த கையோடு கொஞ்ச நாள் குதிரையேற்றம் கற்றுக் கொண்டார். பிறகு அமெரிக்காவில் மேற்படிப்பு முடித்து வந்து பிசினஸ் களத்தில் நுழைந்ததும் கடிவாளத்தைக் கைப்பிடித்தார்!

"தினமும் சவாரிக்கு நேரம் கிடைக்கிறதா?"

"அதிகாலை ஐந்தே கால் மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு, பழைய மகாபலிபுரம் சாலையில் சுமார் ஒரு மணி நேரம் ரைடிங் போகிறேன். 7.30 மணிக்கு வீடு திரும்புவேன். மாதத்தில் 10 நாட்கள் டூர் புரோகிராம் இருக்கும். சென்னையில் இருக்கும்போது ஹார்ஸ் ரைடிங்கை மிஸ் பண்ண மாட்டேன்.

"அலுவலகம் முடித்து இரவு 7 மணிக்கு வீடு வந்ததில் இருந்து மனைவி, இரண்டு மகன்களுடன் நேரம் செலவிடுவேன். அலுவலகப் பணிகள் அலுவலகத்தோடு சரி.

"அதிகாலையில் ஹார்ஸ் ரைடிங் இருப்பதால் எனது இந்த ஆசையை எந்தக் குறுக்கீடும் இல்லாமல் நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது. இதில் எந்த ப்ராப்ளமும் இல்லை!"

"ஒரு நல்ல உடற்பயிற்சி என்பது தவிர, ரைடிங் அனுபவத்தை எந்தவிதத்திலாவது உங்கள் பிசினஸ் வெற்றிக்குப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறதா...?"

"நிச்சயமாக... குதிரையும், நானும் 'ஃபீலிங்ஸ்' மூலம் பேசிக் கொள்வோம்! தொடுதல், அங்க அசைவுகள் போன்ற உணர்வுகள் மூலம் எனது மன ஓட்டத்தை குதிரையும், அதன் எண்ணத்தை நானும் உணர்ந்து கொள்ள முடிகிறது. எனது அலுவலகப் பொறுப்பில், மனிதர்களுடன் பேசிப்பழகி, பக்குவமாகக் கையாள வேண்டியிருக்கிறது. குதிரையிடம் கற்றுக் கொண்ட வித்தையால், முகபாவம், உடலசைவுகளைக் கொண்டு ஒருவரின் ஃபீலிங்ஸை என்னால் உணரமுடிகிறது. ஒருவரின் சென்ஸிட்டிவிட்டியைப் புரிந்து கொள்ள முடிகிறது."

"ஒரு வரையறுக்கப்பட்ட அலுவல் அட்டவணையின்படி தொடரும் இந்த பிசினஸ் வாழ்க்கை பற்றி எப்போதாவது சலிப்பு தட்டியதுண்டா?"

"இல்லை. சிறு வயதில் இருந்தே எனக்கு விவசாயத்தில் ஆர்வம் உண்டு. விவசாயத்தில் பட்டப் படிப்பு முடித்தேன். பிசினஸிலும் விவசாயம் சார்ந்த துறையில் நுழைந்தேன். இயற்கையை ரசிக்கும் சுபாவம் உள்ள எனக்கு, எனது தொழிலில் சந்தோஷமாக செயல்பட முடிகிறது. தவிர, தொழில் துறையில் இருப்பதால் வசதிகளும், சௌகரியங்களும் கிடைக்கின்றன. டிரெக்கிங்கில் (மலைப் பிரதேசத்தில் நடைப் பயணம்) ஈடுபாடுள்ள எனக்கு நினைத்த இடத்திற்குச் சென்று வர இந்த வசதிதான் வாய்ப்பைத் தருகிறது."

"பிசினஸ் நெருக்கடிகளுக்கு இடையில் டிரெக்கிங் செல்ல திட்டமிட முடிகிறதா?"

"வருடத்திற்கு ஒருமுறை 10 நாட்கள் டிரக்கிங் ப்ரோக்ராம் இருக்கும். செப்டம்பர் அல்லது அக்டோபரில் செல்ல இப்போதே திட்டமிட்டு விட்டேன்! டிரெக்கிங் பயிற்சியும் எனது பிசினஸ் களத்தில் என்னை உயர்த்திக் கொள்ள உதவுகிறது.

"ஒரு மலையின் முன்னே நிற்கும் போது நான் எவ்வளவு சிறியவன் என்று நினைத்துப் பார்க்கிறேன்! எனது நிறை, குறைகளை எடைபோட்டு என்னை நானே சுயபரிசோதனை செய்து கொள்ள முடிகிறது. நான் யார்? எனது பொறுப்பு என்ன? என்ற உள்முகத் தேடலும், சுயபரிசோதனையும் ஒவ்வொருவரின் வெற்றிக்கும் அவசியம் என்று நினைக்கிறேன்."

– மு. சிவலிங்கம்

வண்ணப் படங்கள் : ஸ்ரீஹரி

"என் மகனுக்குத் தனிக் குடித்தனம் போவணும்னு ஆசை!"

"அதனால?"

"கல்யாணம் பண்ணிவைன்னு சண்டை போடுறான்!"

– பர்வதவர்த்தினி







புதிய கூட்டணி!

கேட்கவே ஆச்சர்யமாக இருக்கிறதா? ஆனால் திரை மறைவில் நடக்கும் சம்பவங்கள், சந்திப்புக்கள், அ.தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் மிகவும் நெருங்கி வந்து விட்டன என்பதையே சொல்லுகின்றன! கலைஞருடன் 'டு' விட்டுள்ள திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி, இந்தக் கூட்டுக்குப் பெவிகாலாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்! ம.தி.மு.க.வின் முக்கியப் புள்ளிகள் பலர் ம.தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டு சேர வேண்டுமென்று விறு விறுப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஜெ.யும் இந்த கூட்டணி மலர்வதற்கு ஓ.கே. சொல்லி விட்டார்ராம்!

சமீப காலங்களில் அ.தி.மு.க. பொதுக் கூட்டங்களில் நாவலர், காளிமுத்து, சத்தியமூர்த்தி போன்றோர் பேசும்போது 'ம.தி.மு.க.வோடு கூட்டணி அமைத்தாவது தி.மு.க.வைத் தோற்கடிப்போம்' என்று பலமுறை பேசியுள்ளனர். 'அம்மா'வின் 'தற்போதைய' மனச்சாட்சியான சேடப்பட்டியாரும் அரசல் புரசலாக இதைச் சொல்லி விட்டார். சமீபத்தில் நடந்த ஒரு புத்தகத் திறனாய்வுக் கூட்டத்தில் வை.கோவும், நாவலரும் ஒரே மேடையில் உரையாற்றியுள்ளனர்!

ஆனால், ஜெ. ஆட்சியிலிருந்தபோது அவரது ஊழலாட்சியை எதிர்த்து 1500 கி.மீ. நடைப் பயணம், மறியல், போராட்டம், தர்ணா ஆகியவைகளை நடத்தி, கைதாகியும் உள்ளார் வை.கோ. இது தவிர, 'ஜெ. ஊழல் செய்ததன் மூலம் சேர்த்துள்ள சொத்துக்களை கைப்பற்ற வேண்டும்' என்றும் சொல்லியிருக்கிறார்.

இந்த நிலையில், கோடிக்கணக்கில் ஊழல் செய்து மக்களால் ஒதுக்கப்பட்டுள்ள ஜெ. யுடன் சேரும்போது ம.தி.மு.க.வின் 'இமேஜ்' பாதிக்காதா? தொண்டர்கள் ஒப்புக் கொள்வார்களா? ம.தி.மு.க.வின் மூன்று முக்கிய கோஷங்களில் ஒன்றான 'பொது வாழ்வில் நேர்மை' என்ற கோஷத்துக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுமே!

இந்தக் கேள்விக்கு யாரும் பதில் சொல்லத் தயாராக இல்லை.

ஆனால், "நாங்கள் என்னதான் மக்கள் பிரச்னைகளை எழுப்பி, போராடினாலும், சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் குரல் கொடுத்தால்தான் அரசியல் கட்சிகளை மக்கள் மதிக்கிறார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள். எங்களுக்கு ஸ்தாபன பலமும் தொண்டர் பலமும் இருக்கின்றன. ஆனால் தேர்தல் என்று வரும்போது மூன்றாவது, நான்காவது அணியாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும், மற்றவர்கள் வெற்றியை பாதிக்கக்கூடிய அளவுக்கு வோட்டு வாங்க முடிகிறதே தவிர, தனியாக ஜெயிக்கும் அளவுக்கு வோட்டு வாங்க முடியவில்லை. தேர்தல் அரசியலில் இதுபோன்ற சூழ்நிலையில் கட்சி நடத்திக் கொண்டிருக்க முடியாது. தொண்டர்கள் விரக்தியடைந்து போவார்கள். ஆகவே, என்ன வியூகம் வகுத்தால், வரும் தேர்தலில் வோட்டுக்கள் சிதறாமல் சட்டமன்ற, பாராளுமன்றத்தில் இடம் பிடிக்கலாம் என்பதைப் பார்க்கும் போது அ.தி.மு.க. பார்வைக்கு வருகிறது" என்று நம்மிடம் மனம் விட்டுப் பேசினார் சேலத்தைச் சேர்ந்த ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர். 'புதிய வியூகம் வகுப்போம்' என்று மதுராந்தகம் ஆறுமுகம் ஏற்கெனவே பேசியிருக்கிறார்.

ம.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்வது வெற்றியைக் கொடுக்கும் என்று அ.தி.மு.க.வினரும் நம்புகிறார்கள். இனி கேசரி காங்கிரஸுடன் உறவு கிடையாதாம்.

- ப்ரியன்



• பன்னீர் செல்வம் • பிரவீண்குமார்

சாதாரண பார்வை வேறு;
காமெராவின் பார்வையே வேறு...
சில காமெரா கலைஞர்கள்,
தங்களை பிரமிக்க வைத்த அழகை
இங்கே விவரிக்கிறார்கள்.

காமெரா வழியே பார்த்த கவிதைகள்!



எம்.வி.பன்னீர்செல்வம்
(ஒளிப்பதிவாளர்) :

ஒரு போட்டோங்கறது பாதிப்பை ஏற்படுத்தனும். மனகல நிக்கனும். டில்லி அமர்ஜவான் இடத்துல இருக்கற துப்பாக்கியும், அதும் மேல கவிழ்த்து வைக்கப்பட்ட தொப்பியும்தான், என்ன ஒரு உணர்ச்சிகரமான விஷயம்! நாட்டையே காவல் செஞ்சவங்களோட வீரமரணம், எவ்வளவு அற்புதமானது! அந்தத் துப்பாக்கியும், தொப்பியும், நம்மகிட்ட இருக்க வேண்டிய தேசிய உணர்வு பற்றி சொல்லுதுன்னுதான் நான் நெனைக்கிறேன். இன்னிக்கு மதம், சாதி, இனம்னு நாடே பிரிஞ்சிருக்கிறபோது, இந்தக் காட்சி ரொம்ப உத்தமமானது. தேசிய உணர்வு இன்னிக்கு ரொம்பப் பெரிய தேவை.



• நிலக்கரிச் சுரங்கத்தில்...

"ஒவ்வொரு வீட்டிலேயும் என்னென்னவோ படமெல்லாம் மாட்றாங்க. கூடவே இந்தப் படத்தையும் மாட்டணும்னு நெனைக்கறேன். இது நாளைக்கு வரப்போற ஜெனரேஷனுக்கும் தேவையான விஷயம்.

• ரத்னவேலு



கிட்டத்தட்ட அஞ்சு நாள் இப்படி கொளுத்தற வெயில்ல ஷூட் பண்ண வேண்டியதா இருந்தது. ஆறாவது நாள் காலை... வழக்கம் போல ஸ்பாட்டுக்குப் போன போது, எதிர்பாராவிதமாக பலமான மழை.

கொஞ்ச நேரம் கழிச்சி மழை விட்டு லேசா வெயில் வர ஆரம்பிச்சது. அப்பத்தான் அந்த அழகைப் பார்த்தேன்!

புழுதி கிளப்பிட்டிருந்த கறுப்பு நிற மண்ணெல்லாம் தரையோட அடங்கி, ஈர மினுமினுப்போடு ஜொலிக்க, லேசா அந்த மஞ்சள் வெயில் - முழு சுரங்கத்துக்கும் வெள்ளிக் குடைபிடிச்சாப்பல ஒரு எஃபெக்ட் கொடுக்க, ஒரு செகண்ட் என்னை மறந்து நின்னுட்டேன்!

சட்டுனு சுதாரிச்சிட்டு அந்த அட்மாஸ்ஃபியர்ல ஒண்ணு ரெண்டு ஷாட் எடுத்துடணும்னு வேகமா காரியத்துல இறங்கினோம்.

நம்ம ஆசைக்கு இயற்கை ஒத்துழைக்கணுமே? நான் ரசிச்ச அந்த மொத்த அழகையும் கொண்டு வர முடியலை. ஓரளவுக்குத்தான் அது சாத்தியமாச்சு.

பிரவீண்குமார் (போட்டோகிராபர்) :

எத்தனையோ முகங்களை கேமரா வழியா பார்க்கறேன். கவித்துவமான அழகுன்னு சொல்லக்கூடியவை சிலதுதான். லேசா மேக்-அப் போட்டாலே, சாதாரண முகங்களைக் கூடப் [illegible]ரமாகுமா காட்டிட முடியும். ஆனா இயல்பாகவே [illegible]ன்னைக் கவர்ந்த முகங்கள்னு சிலரைச் ச[illegible] உதாரணமா ரஞ்சிதா..,

ஐஸ்வர்யாராய், பானுப்ரியா.

சமீபத்துல அப்படி என்னைக் கவர்ந்தவர் ஈஸ்வரிராவ். பாலு மகேந்திராவோட 'ராமன் அப்துல்லா' படத்துல நடிச்சிட்டிருக்கார். ஹைதராபாத் பொண்ணு. இவங்ககிட்ட என்ன விசேஷம்னா, படு மாடர்னா காட்டணும்னாலும் சரி; ஹோம்லியா மிடில் கிளாஸ் பொண்ணா காட்டணும்னாலும் சரி; கிராமத்து கெட்அப்னாலும் சரி - எல்லாத்துக்கும் இவங்க ஃபேஸ் பொருந்தி வரும்! இது ஆச்சர்யமான விஷயம். எல்லாருக்கும் சாத்தியமில்லை.

இன்னொண்ணு, இவங்க கண்கள்! இவர் முகத்துக்கே அதுதான் விலாசம். ஒரு துடிப்பு இருக்கு அதுல! எந்த மாதிரி எக்ஸ்பிரஷனையும் சுலபமா கொண்டு வரக்கூடிய கண்கள்.

சமீபத்துல நான் பார்த்த ரொம்ப அழகான முகம்னா அது இவரோடதுதான்!

ஆர். ரத்னவேலு (ஒளிப்பதிவாளர்) :

'அரவிந்தன்' பட ஷூட்டிங்குக்காக நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்துக்குப் போயிருந்தோம். சுரங்கப் பகுதியிலே சாதாரணமாகவே ரொம்ப வெப்பமா இருக்கும். நாங்க போன சமயம் சரியான வெயில்! சுட்டுப் பொசுக்கிட்டிருந்தது.


- நமது நிருபர்கள்

அட்டையில் : **ஈஸ்வரிராவ்**

வண்ணப்படம் : **பிரவீண்குமார்**

பத்தாயிர ரூபாய் பட்டுப் புடவை

இறுக்கமும் சவால்களும் மிகுந்த இன்றைய வாழ்க்கைச் சூழலில் மனத்துக்கு வைட்டமின் இஞ்சக்ஷன் போடும் கதைகளை வாரம் ஒன்றாக பிரபல எழுத்தாளர்கள் வழங்குகிறார்கள்.



மௌனம் உறைக்க ஆரம்பித்தது.

"மானேஜர் உங்கள வரச் சொன்னாரு" என்று பியூன் வந்து சொன்னபோது கூட வித்தியாசமாய்ப்படவில்லை. ஆனால், கையில், 'பேட்', பால்பாயிண்ட் சகிதம் அவள் பத்து நிமிடங்களாய் எதிரே உட்கார்ந்திருந்தும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கோத்த கைவிரல் களை மோவாய்க்கடியில் அண்டை கொடுத்து வசதியாய் சுழல் நாற்காலியில் சாய்ந்து லேசாக அசைந்தபடி கார்த்திகேயன் புன்னகையோடு அவளையே பார்த்தவாறு அமர்ந்திருந்த நிலையில் மௌனம் அர்த்தம் பெறலாயிற்று.

"டிக்டேஷன் ஆரம்பிக்கலையா சார்?" என்றாள் பானு. மௌனத்தில் கல் எறிந்ததே சிறு ஆறுதலாயிருந்தது.

"ஓ, கட்டாயம்."

"அப்ப, ஆரம்பிக்கறீங்களா?" பால் பாயிண்டை நிமிர்த்திக் கொண்டாள்.

"அதான் எப்படி ஆரம்பிக்கலாம்னு யோசிச்சுகிட்டிருக்கேன்!" மானேஜர் புன்னகையை காட்சி தரும் வாட்டசாட்டமான அதிகாரிக்கு. இளமையின் உச்சம்தான் என்று தோன்றியது. அவர் பார்வை அவள் உடலைத் துளைத்தது.

"அப்போ, இன்னிக்கு யோசிச்சிட்டு நாளைக்கு டிக்டேட் செய்யறீங்களா?"

"நோ நோ, மிஸ் பானு. இன்னிக்கே முடிச்சிடலாம்... நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க."

பானு ஒரு லேசான கலவரத்தை உணர்ந்தாள். அதற்கு இடம்கொடுப்பது ஆபத்து என்று உள்ளுணர்வு எச்சரித்தது.

அகலமாக்கினார். நாடு தழுவிய நிதி நிறுவனத்தின் சென்னை அலுவலகத்தில் மேலாளர். ஐம்பதை நெருங்கும் வயது. ஐம்பது என்பது கதைகளில்தான் கிழத்தனமே தவிர நிஜ வாழ்க்கையில். அதுவும் ஓர் ஆணுக்கு. அதுவும் வளமான வாழ்வு நிலையில் சூட்டும் டையுமாய்க்

எளிய, அடக்கமான அலங்காரத்திலும் அவள் முகத்தின் ஒளியோ உடலமைப்பின் நேர்த்தியோ குறைப்படவில்லை. இருபத்தெட்டு வயதுப் பெண்மையின் அநாயாச அழகு. வியந்து போற்றலாம். அல்லது இச்சித்து இளிக்கலாம். கார்த்திகேயன் இரண்டாம் ரகம்.

சொல்லிக் கொண்டே என் அருகில் வந்தார்.

என் உடலின் கிட்டத்தட்ட எல்லாப் பாகங்களும் பல்வேறு கருவிகளுடன் இணைக்கப்பட்டன.

மானிட்டர்களில் கோடு கோடுகளாக வளைந்தும் நெளிந்தும் ஓடிக் கொண்டிருந்தன. என்னால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லையே தவிர நடப்பவற்றைப் பார்க்க முடிந்தது.

திடீரென அனைத்துக் கருவிகளுடன் இணைக்கப்பட்டிருந்த மானிட்டர்களில் ஓடிக் கொண்டிருந்த கோடுகள் நிலைத்து நின்று விட்டன. 'மிஸ்டர் ராஜாராம் ஈஸ் டெட்' என்று டாக்டர்கள் மானிட்டரைப் பார்த்து பேசிக் கொண்டது எனக்கு ஈனஸ்வரத்தில் கேட்டது.

இருதயம் நின்று போன அந்த விநாடியில் பக்கத்துப் படுக்கை நோயாளிக்கு கண் கேஸ் சம்பந்தமாய் அழைக்கப்பட்டிருந்த சங்கர நேத் ராலயா டாக்டர் பத்ரிநாத் அங்கே வரவும் அவர் என்



• பை-பாஸுக்குப்பின்... (கண்ணில் ஒன்றுமில்லை வெறும் அலர்ஜிக்காகத்தான் திரை.)

சூழ்நிலையை விநாடியில் உணர்ந்து கொண்டு, 'ஹலோ ராஜாராம்' என்று சொன்னது எனக்குக் கேட்க, எனக்கு அந்தக்கணம் எங்கிருந்துதான் பலம் வந்ததோ தெரியவில்லை, என் கையை உயர்த்திக் காட்டினேன்!

'ராஜாராம் ஈஸ் ஸ்டில் அலைவ்' என்று அவர் உரக்கச் சொல்ல, டாக்டர்கள் மீண்டும் இருதயத்தை இயக்க முயன்றார்கள். டாக்டர் விஜய் சங்கர் என் நெஞ்சில் குத்தி என்னவெல்லாமோ பண்ணினார். மானிட்டரில் கோடுகள் மீண்டும் இயங்கின.

பிறகு பல மணி நேரம் விதம்விதமான சோதனைகள். இருதயத்தில் ஐந்து இடங்களில் அடைப்பு இருப்பதாக உறுதிசெய்யப்பட்டது.

பைபாஸ் சர்ஜரிக்கு என்னைத் தயார்ப்படுத்தினார்கள். டாக்டர் கிரிநாத், டாக்டர்கள் சி. சுப்பிரமணியம், கிருஷ்ணகுமார் என்று ஒரு பட்டாளமே தயாரானது.

எல்லாம் தெரிகிறது. ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. அப்படியும் ஒரு காகிதம் பேனா வாங்கி, "நமது துணை ஜனாதிபதியிடம், நீங்கள் டாக்டர் கிரிநாத் கையால்தான் ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்தேன். அதே போல் அவரைக் காப்பாற்றி அனுப்பினீர்கள். இப்போது உங்கள் பாதுகாப்பான கரங்களில் என்னை ஒப்படைக்கிறேன். என்னையும் காப்பாற்றுவீர்கள் என்று நம்புகிறேன்' என்று ஆங்கிலத்தில் கிறுக்கி டாக்டர் கிரிநாத்திடம் காட்டினேன்.

வெற்றிகரமாக பைபாஸ் முடிந்து இப்போது வீட்டில் முழு ஓய்வில் இருக்கிறேன். என்னைக் காப்பாற்றிய டாக்டர் குழுவுக்கு நன்றி சொல்ல வார்த்தையில்லை.

இந்த இடத்தில் டாக்டர் விஜய் சங்கரைப் பற்றி ஒரு குறிப்பு. பேரறிஞர் அண்ணாவுக்கு வைத்தியம் பார்த்த டாக்டர் சதாசிவத்தின் மகன்தான் விஜய் சங்கர். சதாசிவம் எனக்கு மிக நெருங்கிய நண்பர். ரத்தப் புற்று நோயால் அவர் இறந்து போவதற்கு மூன்று நாட்கள் முன்பா ‹ என்னிடம், 'நான் பிழைக்க மாட்டேன். எனக்குப் பின் என் மகன் விஜய்யை நீங்கதான் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். அன்று முதல் விஜய்யை நான் மிகவும் நேசித்து வந்தேன்.

அப்போலோவில் நான் இருந்த போது டெல்லியில் அப்போது இருந்த டாக்டர் பி.சி. ரெட்டிக்குத் தகவல் போக, அவர் 'ராஜாராமுக்கு எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்ற அந்த அறையை ஒதுக்குங்கள்' என்று அங்கிருந்து உத்தரவிட, நான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். படுத்திருந்த அதே அறை - அதே படுக்கையில் சிகிச்சை பெற்றேன்.

அன்று டாக்டர் விஜய் சங்கரை அந்தத் தருணத்தில் தெய்வமே கொண்டு வந்து என் முன் நிறுத்தியதாகத்தான் கருதுகிறேன். அன்று மட்டும் விஜய் அங்கு இல்லையென்றால் இன்று நான் இல்லை.

பேட்டி : **ராணிமைந்தன்**

படம் : **யோகா**



1. அவனும் அவளும்

வலம்புரி ஜான்

அது ஆறாவது நாள். மழையின் ஆலிங்கனத்தை மண்மகள் அதுவரை அறிந்திருக்கவில்லை. வெதுவெதுப்பிற்காக பூமி, பனிப்போர் வைக்



பைபிள் கதைகள்


வெளிச்சத்தின் விலாசம்



குள் பக்குவம் பார்த்துக் கொண்டிருந்தது!

காலவெளியில் அதுவரை இல்லாத நேற்று, இன்று, நாளை என்கிற மனமாயம் எழுப்பிய கடிகாரச் சுவர்களுக்கு அன்றைக்கோடு ஆறாவது நாள்.

• தான் படைத்த சூரிய, சந்திரர், நட்சத்திரங்களின் தானகதி தப்பாத சுழற்சியிலும், கட்டு



மீறாத கடலின் நிலவை நனைக்கிற நித்திய முயற்சியிலும், இருளும் ஒளியும் கைகுலுக்கிக் கொள்ளுகிற வானவிதானத்தின் மத்தாப்பு மகிழ்ச்சியிலும் கடவுள் நிலைத்திருந்தார்.

அப்போது, பூமியானது நாலாவிதமான ஊர்வன, நடப்பன ஆகிய விலங்குகளை உயிரூட்டும் என்கிற வசியச் சொற்கள் இறைவனின் உதட்டுத்துறைமுகத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டன. கணநேரத்தில், மண்புழு முதற்கொண்டு, மதயானை வரை தங்கள் ராகராஜாங்கத்திற்கு ஒத்திகை பார்த்தன. கோடைகாலம் வரைக்கும் மண்ணுக்குள் மறைந்திருந்துவிட்டு, மழைக்காலத்தில் பச்சைக் குடை பிடித்து பருவ நாட்டியமாடுகிற தாவரங்களைப் பார்த்துப் பூரிப்பால் நிலமகள் இடதுபுறமாகத் திரும்பிப் படுத்தாள்.

ஒரு காட்டுமரத்தின் தொப்புளில் குடை விரித்த காளான் ஒன்றை ஆடைகளால் போர்த்திய பெருமிதத்தில் ஒரு சிலந்திப் பூச்சி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கடவுள் தனது பிரம்மரேகைகளை அந்த எட்டுக்கால் எச்சிலின் சின்னமுகத்தில் பார்த்துச் சிரித்துக் கொண்டார். அந்நேரம் கடலோரத்தில் நிமிர்ந்திருந்த செங்குத்தான பாறையிலிருந்து ஒரு குஞ்சுப்பறவை பசி தாளாமல் கடலில் விழுந்தது; பயந்துகொண்டே விழுந்த சிறகுகளால் ஆன அந்தச் சின்னக்கவிதை, கடலின் பரப்பில் விழுந்த பிறகே தான் மூழ்க முடியாது என்பதைக் கண்டுகொண்டது.

அப்போது கடவுளுக்குத் தனது சாயலாக ஒரு மனிதனைப் படைக்க வேண்டுமென்கிற எண்ணம் அரும்பியது. உடனே அவர் மண்ணை எடுத்துப் பிசைந்தார். வானத்து அழகெல்லாம் வில்லையாய் இறுகியதுபோல் கொள்ளை வனப்பின் குதூகலமான ஒரு மனிதன் தோன்றினான். அவனது நாசித்துவாரங்களில் ஆண்டவர் தமது உயிர்க்காற்றை ஊதினார். பனிங்கு நதி ஒன்று பனிச்சென்று திரும்புவதுபோல அவன் தனது பார்வையைப் பரமபிதாவோடு பரிமாறினான். அவனது பெயர் ஆதாம்.

கடவுள் கிழக்குத் திசையில் கிளர்ச்சியோடு தெரிந்த ஏதேன் என்கிற இடத்தில் ஒரு தோட்டத்தை உருவாக்கினார். கண்களுக்கு அழகும், குளிர்ச்சியும் அள்ளித் தருகிற பூஞ்செடிகளும், உண்பதற்கு ஏற்ற கனிகளின் பாரத்தால் தரையைத் தொடுகிற மரங்களும், கடவுளின் கையிலிருந்து நழுவிய பச்சைக் கைக்குட்டைகளைப் போன்ற பசும்புல் பகுதிகளும் அங்கு காணப்பட்டன. நன்மை தீமையை அறிவிக்கிற ஒரு மரத்தையும் அழிவில்லாத வாழ்வை அருளுகிற கற்பகத்தரு ஒன்றையும் கடவுள் அங்கே வளரச் செய்தார்.

படைத்தான் படைப்பெல்லாம் மனுவிற்காக; மனுவைப் படைத்தான் தன்னை



வணங்க என்கிற பழமொழிக்கு அன்றுவரை அர்த்தமில்லாமலிருந்தது. ஆளில்லாக் காட்டுக்குள் ஆயிரமாய்ப் பூ மலரும்; ஆருமில்லை பார்ப்பதற்கு; அப்புறம் ஏன் பூக்கிறது என்று ஒரு மரக்கொத்தி பாடிக் கொண்டிருந்தது. பூக்கள் பூக்களைப் பார்த்து மகிழ்ந்தன; குருவிகள் குருவிகளைப் பார்த்து நிறைவடைந்தன. செடிகொடிகள் குளம் குட்டைகளில் முகம் பார்த்துப் பொட்டு வைத்துக் கொண்டன. வழங்குவதிலும், பெறுவதிலும் இயற்கை தன்னளவில் தான் மகிழ்ந்து கொண்டுதானிருக்கிறது என்பதை ஆதிமனிதன்கூட அதுவரை அறிந்திருக்கவில்லை.

செறிந்தும், இறைந்தும் கிடந்த செடி, கொடி, மரங்களை வளர்ப்பதற்காக - ஏதேன் தோட்டத்தில் ஒரு நதி சலசலத்துக் கொண்டிருந்தது. இது போகிற போக்கில் பீசோன், கீசோன், திக்ரீசு, யூப்ரத்தீசு ஆகிய கிளை நதிகளாகப் பிரிந்து பயணித்தது. நாடு கடத்தப்பட்ட இந்த நதிகள் அசீரியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளிலெல்லாம் பாய்ந்து பச்சை நிலத்திற்குப் பரவசம் ஊட்டின.

ஏதேன் தோட்டத்து மண்ணை மலர்விக்கவும், தோட்டத்தின் உறுப்புகளைக் காப்பாற்றவும் கடவுள் ஆதாமை அந்தத் தோட்டத்தில் குடியமர்த்தினார். அப்போது ஆண்டவர் ஆதாமை நோக்கி, "தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம்போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மாத்திரம் உண்ணாதே. அதிலிருந்து நீ உண்ணும்நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளை பிறப்பித்தார்.

பிறகு கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றையும் ஆதாமின் முன்பு ஆண்டவர் அணிவகுக்க வைத்தார். முதல் மனிதன் அவற்றில் ஒவ்வொன்றிற்கும் என்ன பெயரிட்டு அழைத்தானோ அதுவே அவைகளின் பெயர்களாய் நிலைத்தன. அப்போது தங்களில் சிலவற்றை மனிதன் வீட்டு விலங்குகளாக மாற்றிப் போடுவான் என்று விலங்கினங்கள் அறியாதிருந்தன. விதைகளும், செடிகளும், பழமரங்களும்

''எங்க ஆபீஸ் குமாஸ்தா ஆட லரசன் ஐயாயிரம் ரூபா அபேஸ் பண்ணிட்டார்!''

''அப்ப கையாடலரசன்னு சொல்லு!''

—பொன்மலை ஆர். பிரபாகரன்

மாத்திரமே மனிதனுக்கு உணவாகலாம் என்ற இறைவனின் விதி அப்போது அமுலில் இருந்த தால் பயமறியாத வெள்ளாடுகளும், குழி முயல்களும், காட்டுக் கோழிகளும் ஆடிப்பாடி மகிழ்ந்தன. பறவைகளுக்கென்று மொழி இருந் தது. கிளிதான் அப்போதும் சிறந்த பேச்சாளன் என்றும், குயில் சிறந்த பாடகி என்றும் பெயர் பெற்றிருந்தன. புலியும், மானும் புரண்டு விளையாடின.

அப்போது ஆண்டவர், மனிதன் தனியாக இருப்பது சரியல்ல என்று முடிவு செய்தார். ஆகவே ஆதாமிற்குத் தூக்கத்தை வரவழைத் தார். அது முதல் மனிதனின் முதல் தூக்கம். ரோஜா இதழ்கள் பசிய புல்வெளிகளில் ஓசை யின்றி விழுவதைப்போல ஆதாமின் களைத் துப்போன கண்ணிமைகள் ஒன்றையொன்று தழுவின. தூங்கிய ஆதாமின் விலா எலும்பை எடுத்து இறைவன் ஒரு பெண்ணைச் சிருஷ் டித்தார். ஆரண்ய அழகுக்கெல்லாம் வியப்பு வியர்வையை வரவழைத்த உலக மாதாவைப் பார்த்து உயிரினங்கள் ஒரு நிமிடம் ஒடுங்கின. அப்போது ஆதாம், ''இவளே என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆவாள்'' என் றான்.

ஆண்டவர் உருவாக்கிய காட்டுவிலங்கு களிலெல்லாம் பாம்பு சூழ்ச்சியே உருவான நிலத்து மின்னலாக நிலைத்தது. தனது தற்பெரு மையாலும், அகங்காரத்தாலும், நரகத்தில் வீழ்ந்துபட்ட சாத்தான் பாம்புருவை எடுத் தான். நல்லது கெட்டது அறியாத பேதைப் பெண்ணான ஏவாள் ஒருநாள் படிக விரிப்புப் போன்ற குளத்து நீரில் தன் முகத்தைப் பார்த்து இது என்ன புது உருவம் என்று புளகித்து நின் றாள். அப்போது மரக்கிளையில் தொங்கிய பாம்பானவன் பேசினான். ''பெண்ணே, இந்தத் தோட்டத்தில் உள்ள எல்லா மரங்களின் பழங் களையும் நீங்கள் உண்ணலாமா?'' என்று கேட் டான். ''அதோ நடுவில் உள்ள மரத்தின் கனி யைத் தவிர, மற்ற எல்லா மரங்களின் பழங் களையும் சுவைக்கலாம் என்பது கடவுளின் கட்டளை'' என்றாள். உடனே பாம்பானவன், ''நீங்கள் கடவுளைப் போல ஆகிவிடுவீர்கள் என்பதற்காகத்தான் உங்களுக்கு இந்த ஒரு மரத் தின் கனி மாத்திரம் விலக்கப்பட்டிருக்கிறது'' என்றான். பாவை மறுத்தாள்; பளிங்குப் பாம்பு விடவில்லை. கடவுள் ஆகவேண்டும் என்கிற ஆசை மனிதப் பிறவிகளைப் படுத்த ஆரம் பித்துவிட்டது.

பெண்ணானவள் அந்தப் பழத்தைப் பறித்து உண்டாள். மீதத்தைத் தனது கண வனுக்கும் தந்தாள். அந்த அளவிலேயே அவர் களது கண்கள் திறந்தன. சருகிலைகளில் சல சலப்புச் சத்தம் கேட்டது. பாம்பு கொடுமனக் கூனியாய் வளைந்தது. ''மனிதா! நீ எங்கே இருக் கிறாய்?'' என்று கடவுளின் குரல் கால வெளி யெல்லாம் எதிரொலித்தது. ''தோட்டத்தில் உம் குரலைக் கேட்டேன். நான் நிர்வாணமாக இருந்ததால் ஒளிந்து கொண்டேன்'' என்றவன் சொன்னான். ''நிர்வாணத்தை அறியாத நீங்கள் அத்தி இலைகளுக்குள் அடைக்கலம் தேடியது எப்படி? நான் உண்ணாதே என்று தடுத்த மரத்தின் கனியை ஏன் உண்டாய்'' என்று ஆண்டவர் கேட்டார். மனிதன் ஏவாளைக் காட்டினான். ஏவாளோ, பாம்பைக் காட்டி னாள்.

அப்போது கோபத்தின் கொதிநிலைக்குப் போன கடவுள், ''பாம்பே ஊர்வனவற்றில் நீதான் சபிக்கப்பட்டவன்'' என்றார். பெண் ணைப் பார்த்து ''நீ வேதனையில் உன் குழந்தை களைப் பெறுவாய்'' என்றார். மனிதனைப் பார்த்து ''மண்ணிலிருந்து வந்தவனே. நீ மண் ணுக்கே திரும்புவாய்'' என்றார்.

பிறகு ஆதாம் தனது மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டான். ஆண்டவர் அவர்கள் இருவரையும் தோலாடைகளால் போர்த்தினார். கடவுள் அப்போது மனிதன் நம்மைப் போல நன்மை தீமை அறிகிறவனாக ஆகி விட்டான். என்றென்றும் சாகாமல் வைத்திருக்கிற மரத்தின் பழத்தை அவன் உண்டுவிடக் கூடாது என்று அவனையும், அவளையும் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார். இருவரும் தாங்கள் மகிழ்ந் திருந்த சிங்கார வனத்தைத் திரும்பிப் பார்த் துக்கொண்டே நடந்தார்கள். அவர்களது கண்களின் காவிநிறத்தில் ஒரு சாம்ராஜ்யத்தின் சரிவு சன்னமாகத் திரும்பியது.

மீண்டும் அவர்கள் உள்ளே நுழைந்து விடாதபடி நெருப்பு வாட்களோடு தேவதூதர் களைக் காவலாளிகளாகக் கடவுள் நியமித்தார்.


மண்ணாக இருந்தோம்; மீண்டும் மண் ணாகப் போகிறோம் என்கிற பூதவிளை யாட்டை முதன் முதலாகப் புரிந்து கொண்ட அவன் தன்னையும், தன் சந்ததியினரையும் உள்வாங்கிக் கொள்ளப் போகிற மண்ணை வளப்படுத்த, வியர்வை சிந்த ஆரம்பித்தான்; அவளோ, அவனது வியர்வை நதியில் மீன் பிடிக்கத் தொடங்கினாள்!

(வளரும்...)

வாசக வள்ளல்களே! ஜோக் எழுதுங்கள்! ஜோராக ஒரு திருமணத்தை நடத்தி வையுங்கள்!

அன்புள்ள வாசக, நகைச்சுவைத் தென்றல்களே, புயல்களே, அருவிகளே!

பேனாவைத் தீட்டிக் கொண்டு உடனே தயாராகுங்கள்.



கல்கி – பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து நடத்தும் பன்னிரண்டு வார ஜோக் போட்டிக்கு உங்களிடமிருந்து குபீர் சிரிப்பு அம்புகள் பெருமளவில் எதிர் பார்க்கப்படுகின்றன.

இந்த வாரம் தொடங்கி, வாரம் ஒரு தலைப்பு நாங்கள் தந்து விடுவோம். வைத்துக் கொண்டு வயிறு வெடிக்க சிரிக்கச் செய்யும் படியான ஜோக்ஸ் அனுப்ப வேண்டியது உங்கள் பொறுப்பு!


வாரம் தோறும் சிறந்த ஜோக்குகள் தேர்வாகி, பிரசுரமாகி, ஒவ் வொன்றும் ரூ. 100 சன்மானம் பெறும்.

பன்னிரண்டு வாரங்களில் அதிகமுறை ஜோக் பிரசுரம் காணும் ஒரு நகைச்சுவைச் சக்கரவர்த்திக்கு **பாலு ஜுவல்லர்ஸ்** நிறுவனம் ஓர் அற்புதமான வாய்ப்பை வழங்கக் காத்திருக்கிறது.

அந்தத் திறமைசாலி சுட்டிக் காட்டும் ஒரு வசதியற்ற குடும் பத்துப் பெண்ணுக்குத் (அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 3000க்குள் இருக்க வேண்டும்.) திருமணம் நடக்க

ரூ. 50,000





மதிப்புள்ள தங்க நகைகளைத் தம் தந்தையார் **பாலசுப்ரமணியன்** நினைவாக **பாலு ஜுவல்லர்ஸ்** அதிபர் **பாலு ஐயப்பன்** வழங்குவார்! (வெற்றி பெறும் வாசகரே அவ்வாறு வசதியற்றவராக இருந்தால், அவரே பரிசைப் பெறலாம்! கவனிக்க! திருமண வயதில் மகளோ, சகோதரியோ இருக்க வேண்டும்!)

ரூ. 50,000 பெருமானமுள்ள தங்கநகைப் பரிசை ஒரு பிரபல திரையுலகப் பிரமுகர் வெற்றிபெற்ற வாசகருக்கு வழங்குவார். அவர் சுட்டிக் காட்டும் ஏழைக் குடும்பத்தின் தலைவர் உடன் இருப்பார்.

சிரிக்க வையுங்கள்! ஓர் ஏழைக் குடும்பம் சிறக்க வையுங்கள்!

விதிமுறைகள் :

1. வாரம் தோறும் ஒருவரே எத்தனை ஜோக்குகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
2. ஜோக்குகளைக் கூப்பனில் மட்டுமே எழுத வேண்டும். (ஜெராக்ஸ் கூப்பன் ஏற்கப்பட மாட்டாது).
3. போட்டி தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து கிடையாது. 'கல்யாண ஜோக் போட்டி', கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு கூப்பன்களை அனுப்பி வையுங்கள்.
4. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முதல் வாரப் போட்டிக்கான தலைப்பு :

பெண் பார்க்கும் ஜோக்ஸ்

கடைசித் தேதி : 21.4.97

ஜோக் போட்டி - 1

பெயர் :..

முகவரி :..

....

....

கல்கி - பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும்
வாரம் ஒரு சவரன்; போட்டி - 11; முடிவு

முதல் முதலாகப்

● என் கணவர் நன்கு படித்தவர். நானோ சாதாரண அஞ்சாங்கிளாஸ்! மனத்தில் இனம்புரியாத கவலை; பயம். அழுகை, அழுகையாக வந்தது. எப்படி இருப்பாரோ, எப்படி நடந்து கொள்வாரோ என்று தவித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் முதல் முதலாக அவர் என்னைச் சந்தித்தபோதே கூறிய வார்த்தைகள்... "இதோ பார்! வாழ்க்கை என்பது கோவில் மாதிரி! நான் கடவுள் என்றால் நீ கலசமாக இருக்க வேண்டும். அல்லது, நீ கடவுளென்றால் நான் கலசம்! நான் படித்தவன் என்று மிரளாமல் பாசமுள்ள கணவனாக இருப்பேன் என்று நம்பு. அது போதும்!" என்றார். என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்ட சொற்கள் அவை!

பி. சாந்தி, காளியாகுடி.

● முதல் முறையாகப் பெண் பார்க்க ஓர் ஊருக்குப் போயிருந்தேன். வழியிலேயே மடக்கிய பெண்ணின் மாமா (அக்காவின் கணவர்) என்னிடம், "வாருங்கள்! பெண் ரேஷன் கடைக்குப் போயிருக்கிறாள்; அங்கேயே போய்ப் பார்க்கலாம்!" என்று கூட்டிப் போய் விட்டார்!

ரேஷன் கடையில் வரிசையில் நின்று கொண்டிருந்தவளைக் காட்டி, "இவள்தான் பெண். பார்த்துக் கொள்ளுங்கள். நீயும் பார்த்துக் கொள்ளம்மா! இவர்தான் மாப்பிள்ளை!" என்று காட்ட, அந்தப் பெண் பயந்து, அலறிக் கொண்டு ஓடியே விட்டாள்.



விஷயம் கேள்விப் பட்ட அவளது அக்கா, ஓடி வந்து தம் கணவரைக் கண்டபடி திட்டி, என்னிடம் "தயவுசெய்து வீட்டுக்கு வந்து பாருங்கள்!" என்று கேட்க, நானும் சிரித்தபடி அவள் வீட்டுக்குப் போய்ப் பார்த்து, முறைப்படி நடக்க வேண்டியவைகளை முடித்து, அந்தப் பெண்ணையே மணந்தேன்!

இருப்பினும் ரேஷன் கடையில் பெண் பார்த்த அந்தச் சம்பவம் ஆயுசுக்கும் மறக்காது!

நா. அய்யாசாமி, மேட்டுப்பாளையம்.

● என்னைப் பெண் பார்க்க வந்திருந்த மாப்பிள்ளை வீட்டாரில் மூன்று பேர் ஏறக்குறைய ஒரே வயதில் இருந்தார்கள். யார் மாப்பிள்ளை என்று தெரியாமல் பதற்றம் பற்றிக்கொண்டது!

கேட்கவும் கூச்சப்பட்டுக் கொண்டு, நானே ஒருவரை யூகம் செய்திருந்தேன்.

அனைவரும் டிபன் சாப்பிட அமர்ந்தபோது, என் அத்தை 'எல்லாருக்கும் ஸ்வீட் வெச்சிட்டு வாம்மா' என்று என்னை அனுப்பினாள்.

ஸ்வீட் வைக்கும்போது பதற்றத்தில் ஓர் இலையில் மட்டும் இரண்டாக விழுந்து விட, "என்னம்மா வீட்டுக்காரரை இப்பவே கவனிக்க ஆரம்பிச்சுட்டியா?" என்று பக்கத்திலிருந்தவர் கிண்டலடிக்க, என் மனப் புதிருக்கு விடை கிடைத்தது!

சட்டென்று அவரை நிமிர்ந்து பார்க்க, கண்கள் கலந்தன! என் யூகம் சரியாக அமைந்த திருப்தியும் சந்தோஷமுமாக அந்த முதல் சந்திப்பு அமைந்தது!

ம. விஜயலட்சுமி, நெய்வேலி.

● காதலித்துப் பார்க்க வேண்டும் என்ற என் ஆசை கைகூடாமல், ஃபோட்டோவைப் பார்த்தே திருமணமும் நிச்சயமாகி விட்டது! வருங்கால மனைவியையாவது ஒருநாள் பீச்சுக்குக் கூட்டிப் போய் காதல் பேச வேண்டும் என்று தீர்மானித்து, அவள்



ஆபீஸுக்கு போன் செய்தேன். அரை மனதுடன் வரச் சம்மதித்தாள்.

ஆவலுடன் கடற்கரையில் காத்திருந்தேன். வந்தாளே பார்க்கலாம், அவள் பாட்டியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு! (என்னை அடையாளம் காட்டவாம்) நாங்கள் தேமே என்று உட்கார்ந்திருக்க, ஒரு மணி நேரம் பாட்டியின் உபதேசங்கள்தான்! காதல் க்ஷேமம் விசாரிக்கப் போய்,

பார்த்தபோது....

காலக்ஷேபம் கேட்டு வந்தேன்!

ராஜா, சென்னை - 78.

● திருமணத்துக்கு 20 நாட்கள் இருந்த நிலையில், மணமகளான நான், பெண் வீட்டுக்குச் சென்று, அழைப்பிதழ்கள் கொடுத்து வர வேண்டிய நிலை. முதலில் தயங்கி, பின் சென்றேன்.

வீடு மூடியிருந்தது. அழைப்பு மணியை அழுத்திவிட்டுக் காத்திருந்தேன். கதவைத் திறந்து, வெளியே வந்த 'அவன்', என்னைப் பார்த்ததும் கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். "அப்பா, அம்மா வெளியே சென்றிருக்கிறார்கள்" என்று குரல் மட்டும் வந்தது.

நான் அழைப்பிதழ்களை, நீட்டிய அவன் கரங்களில் வைத்துவிட்டு, "அப்பா வந்தா குடுத்துடுங்க; நீங்களும் கல்யாணத்துக்கு அவசியம் வந்துடுங்க. நீங்க வராட்டா என் கல்யாணமே நடக்காது!" என்றேன்.

மறக்க முடியாத சந்திப்பு அது!

த. நாகூர், இராஜபாளையம்.

● ஆபீஸ் பாயாக வேலைக்குச் சேர்ந்த புதிது. எங்கள் அலுவலகத்தில் அப்போது போன் கனெக்ஷன் வரவில்லை. ஏதாவது மேட்டர் என்றால் என்னிடம்தான் நம்பர் கொடுத்து வெளியே பப்ளிக் பூத்துக்கு அனுப்புவார்கள். எங்கள் அலுவலகத்துக்கு அருகிலிருந்த பூத்தில் அமர்ந்திருந்த பார்வையற்ற ஒரு பெண் (ஏறக்குறைய என் வயதுதான் இருக்கும்) என் மனதைக் கவர்ந்தாள். பார்வை இல்லாதது தவிர அவளிடம் வேறு குறை இல்லை. மனசுக்குள் அவளைக் காதலிக்கத் தொடங்கி விட்டேன்!

பின் அடிக்கடி போன் பேசச் சென்று, அவளுடன் பேசி, பழக்கமாகி, காதலாகி, திருமணத்திலும் முடிந்தது! இருப்பினும் இப்போதைய என் மகிழ்ச்சியான வாழ்வுக்கு அடித்தளமாக அமைந்த அந்த போன் சந்திப்புகளை மறக்கவே முடியாது, என்னால்!

ஜி. செல்லதுரை, மதுரை - 14.

● புதிய சுருக்கெழுத்தாளரான அவள், குறிப்பெடுக்க வந்தாள். நான் டிக்டேட் செய்துவர, அவள் சும்மா இருப்பதாகவே தோன்றியது. வேகவேகமாகச் சொல்லும் பழக்கம் எனக்கு. அதனால் சிரமப்படு



இந்த வாரம் ஒரு சவரன் பெறும் வாசகர் :

பி. சாந்தி,
மைனர் இல்லம்,
சத்திரம், காளியாகுடி (போஸ்ட்),
கொல்லுமாங்குடி (வழி)
நன்னிலம் தாலுகா – 609 403.

கிறாளோ என்று நினைத்து, 'எழுதவில்லையா' என்றேன். "முடித்து விட்டேன் சார்!" என்றாள். எனக்கு நம்பிக்கை இல்லை. ''படி'' என்றேன். சரியாகவே படித்தாள். பாராட்டி விட்டு, ''இந்த வேலை பிடித்திருக்கிறதா?'' என்றேன்.

''டிக்டேட் செய்யும் உங்கள் நடை பிடித்திருக்கிறது'' என்றாள். என்னையே அவளுக்குப் பிடித்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தேன்.

அதுவும் உண்மைதான் என்பது பின்னால் நாங்கள் வாழ்க்கையில் இணைந்தபோது புரிந்தது. 22 வயசு வித்தியாசம் என்றபோதும் அந்த முதல் சந்திப்பிலேயே ஒருவரால் ஒருவர் ஈர்க்கப்பட்டோம் என்பது எத்தகைய அனுபவம்!

சி. பி. சம்பத், சென்னை - 63.

● என் பெற்றோர், மாப்பிள்ளையையும், அவர்கள் வீட்டார் என்னையும் பார்த்து, நிச்சயமாகி விட்டது. நான் அவரைப் பார்க்கவில்லை. அவரும்!

பின் ஒருநாள், ஒரு நபர் என் அலுவலகத்துக்கு வந்தார். 'மாப்பிள்ளையின் நண்பர்' என்று சொல்லிக் கொண்டு! அவரது கல்லூரிப் படிப்பு, வேலை பிற விஷயங்களைச் சொல்லிவிட்டு, "மாப்பிள்ளையின் போட்டோ கொண்டு வந்திருக்கிறேன். பார்க்கறீங்களா?'' என்றார்.

வாங்கிப் பார்க்கவும், அதிர்ச்சி!

சாட்சாத் அவரேதான்! சிரித்தபடி, "நான் தான் அந்த மாப்பிள்ளை!" என்றார்.

மறக்க முடியுமா இந்தச் சந்திப்பை?

கு. ஞானகிமுத்து, திருநெல்வேலி டவுன்.

● என் நிச்சயதார்த்தம் அன்று மணப்பெண் வீட்டில், தனியாக ஓர் அறையில் அமர்ந்திருந்தேன். ஒரு குழந்தை தவழ்ந்தபடி வந்தது. அன்புடன் அதை வாரி எடுத்ததுதான் தாமதம்! அது என் மேல் மலம் கழித்து விட்டது! அந்த நேரத்தில் எட்டிப் பார்த்த ஒரு பெண், நாணியபடி உள்ளே வந்து குழந்தையை எடுத்துக் கொண்டு ஓடி விட்டாள்.



ஆறு மாதம் கழித்து என் திருமணம் நடந்தது. பிறகு முதல் முதலாக என் மனைவியின் முகத்தைப் பார்த்தவனுக்கு அதிர்ச்சி!

அன்று பார்த்த அதே பெண்! திருமணத்துக்கு முன் கோஷா இல்லாமல் எங்கள் பெண்கள் ஆண்கள் எதிரே வரவே மாட்டார்கள்! ஆனால் ஓர் அவசர சந்தர்ப்பத்தில், வேறு வழியில்லாமல் அப்படி வர நேர்ந்தபோதும் தயங்காமல் செயல்பட்ட அவளது மனிதநேயத்தைத்தான் அந்தச் சம்பவம் எனக்கு உணர்த்தியது.

எஸ். அன்வர் பாஷா, திருப்பத்தூர்.


● சூரியனார் கோவிலை தரிசிக்க என் பெற்றோருடன் ஆடுதுறை சென்றிருந்தேன்.



ஸ்டேஷனில் இறங்கியபோது, அங்கிருந்த இளம் ஸ்டேஷன் மாஸ்டர், என்னை உற்றுப் பார்த்து விட்டு, அருகே அழைத்தார். தன்னிடமிருந்த புகைப்படத்தைக் காட்டி, ''இது நீங்கள்தானே?'' என்றார். அது நானேதான்!

தரகர் மூலம் என் போட்டோ அவரிடம் சென்று இருக்கிறது. அதுதான் எங்கள் முதல் சந்திப்பு. திருமணம் சில நாட்களிலேயே நிச்சயம் ஆகிவிட்டது.

எம். மகேஸ்வரி, தஞ்சாவூர்.





1997 ஏப்ரல் 13
தாது பங்குனி 31
மலர் : 55
இதழ் : 37

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




கேசரியின் மோசடி!

'கவிழும் அபாயத்தில் கௌடா அரசு' என நாம் தலையங்கம் எழுதியபோது (கல்கி 2.3.97) 'ஏதேனும் சிறிய காரணம் காட்டி காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளக்கூடும்' எனக் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இப்படி முற்றிலும் சிறுபிள்ளைத்தனமான காரணங்களைக் காங்கிரஸ் அடுக்கும் என யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது!

'மதத்துவேஷங்களைக் கட்டுப்படுத்த ஐக்கிய முன்னணி தவறிவிட்டது, காங்கிரஸை ஓரங்கட்டி விட்டு காரியங்கள் செய்து வருகிறது; நாட்டில் சட்டம் ஒழுங்கு அடியோடு வீழ்ந்து விட்டது; உத்திரப்பிரதேச நிலைமை அராஜகம், குழப்பம், அழிவு நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது; அரசுப் பணித்துறை சீர்குலைந்து விட்டது; நாட்டின் பாதுகாப்புத் தேவைகள் கவனிக்கப்படவில்லை; மதவாத பிரிவினைவாத சக்திகள் தலைவிரித்தாடுகின்றன; நிர்வாகம் திசையறியாமல் கெட்டுப் போய்க் கிடக்கிறது...'

- குடியரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேசரி குவித்திருக்கும் இந்தக் காரணங்களைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. இந்தக் குறைகள் அத்தனையும் ஐ.மு. ஆட்சிக் காலத்தில் புதிதாக முளைத்தவை அல்ல. கேசரி குறிப்பிடுவது போல் அவை எதுவும் கட்டு மீறிப் போய்விடவும் இல்லை.

உ.பி. சட்ட ஒழுங்கு விவகாரத்தில் ஆளுனருக்கும் உள்துறை அமைச்சருக்கும் நடந்த வாக்குவாதங்கள் வெறும் வாயை மெல்லும் காங்கிரஸுக்கு அவல் கிடைத்தது போலாயிற்று.



மற்றபடி, காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளும் அளவுக்கு எதுவும் நடந்து விடவில்லை.

கேசரியின் இந்த முடிவுக்குக் காரணம், பல காங்கிரஸ் தலைவர்கள் பேரில் எடுக்கப்பட்டு வரும் சட்டரீதியான நடவடிக்கைகள்தாம் என்பதை நாட்டு மக்கள் மிக எளிதில் யூகித்து விடுவார்கள். காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் கல்பநாத் ராய் கடும் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். நரசிம்மராவைச் சுற்றிப் பிடி இறுகுகிறது; கேசரியே கூட ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் விசாரிக்கப்படவுள்ளார்.


இந்த அபாயங்களையெல்லாம் தவிர்த்து விடலாம் என்கிற நோக்கில்தான், ஐக்கிய முன்னணிக்கு அளித்துவந்த ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டுள்ளது. ஆட்சி அமைக்கவும் வாய்ப்புக் கேட்டிருக்கிறது.

ஆனால், காங்கிரஸின் கணக்கு தப்பப் போவது உறுதி! குடியரசுத் தலைவர் சிக்கலான சூழலில் சரியான முடிவெடுத்து, பிரதமரை நம்பிக்கை வாக்கெடுப்பு கோரச் சொல்லியிருக்கிறார். அந்த வாக்கெடுப்பில் ஐ.மு. தோற்றுவிட, காங்கிரஸுக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்பு தரப்படுகிறது என்றே வைத்துக் கொள்வோம். இல்லாத பெரும்பான்மையை அந்தக் கட்சி எவ்வாறு நிரூபிக்கும்?

இதெல்லாம் தெரியாமல், ஏதோ அசட்டுத்தனமாக கேசரி செயல்பட்டு விட்டார் என்று நாம் ஒதுக்கி விடமுடியாது. தாற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ளலாம் என்ற முடிவுடன் பதவியாசை என்னும் பலமான உந்துதலும் சேர்ந்தே அவரை இயக்கியிருக்கிறது.

கேசரியின் இந்தக் காரியம் உலக அரங்கில் நம்மைத் தலைகுனியச் செய்து விட்டது.

அனைத்து தரப்பினரும் வரவேற்ற புதிய பட்ஜெட் நாடாளுமன்றத்தில் நிறைவேற வேண்டிய ஒரு முக்கிய காலகட்டத்தில், இந்தியா - பாகிஸ்தான் நல்லுறவுக்கான பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்ற தருணத்தில், கேசரி செய்துள்ள காரியம் வடிகட்டின சுயநலத்தின் வெளிப்பாடு என்பதை உலகப் பார்வையாளர்கள் உள்பட அனைவரும் உணர்வார்கள்.




நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் பி.ஜே.பி.க்குத்தான் மிகுந்த சந்தோஷத்தைத் தருகின்றன. ஆதரவு வாபஸ் அறிவிக்கப்பட்ட தினத்தில் மகிழ்ச்சியையும் பூரிப்பையும் மறைத்துக் கொள்ள முடியாமல் திளைத்த சுஷ்மா ஸ்வராஜை தொலைக்காட்சியில் பார்க்க வேதனையாகவே இருந்தது. காங்கிரஸின் சந்தர்ப்பவாதத்தைக் கண்டிக்கவோ எதிர்க்கவோ அந்தக் கட்சி தயாராயில்லை.

மீண்டும் பொதுத் தேர்தல் வரும் நேரத்தில் சோனியா காந்தியை எப்படியாவது கட்சியில் சேர்த்துக் கொண்டு ஜெயித்து விடலாம் என்று கேசரி மனப்பால் குடிக்கிறார். இந்திரா, ராஜீவுக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கு சோனியாவுக்கு இல்லை; கேசரிக்கு நிச்சயமாக இல்லை.

எனவே, மீண்டும் தேர்தல் வந்தால், மக்கள் ஐக்கிய முன்னணி பேரில் கொண்டிருக்கும் அவநம்பிக்கையும் காங்கிரஸ் பேரில் கொண்டிருக்கும் வெறுப்பும் பி.ஜே.பிக்குத்தான் சாதகமாக முடியும். எந்த வகுப்புவாதத்தை ஐ.மு. அரசு கட்டுப்படுத்தவில்லை என்று கேசரி காரணம் காட்டி ஆதரவை விலக்கிக் கொண்டாரோ, அதே வகுப்புவாதத்தை நம்பும் ஒரு கட்சியின் கைக்கு ஆட்சிப் பொறுப்பு போய்ச் சேரும்.

ஒருவேளை பி.ஜே.பி. ஆட்சி என்பது வகுப்புவாதமற்ற நல்லாட்சியாக அமைந்து பாரதத்துக்கு நன்மையாகக் கூட முடியலாம். ஆனால் இந்திய சுதந்தரத்துக்காகப் பாடுபட்டு, அரசியல் கலாசாரத்தின் அஸ்திவாரமாக அமைந்த காங்கிரஸின் சீரழிவு, இந்தப் பொன் விழா ஆண்டில் பூர்த்தி அடைவதுதான் வேதனை! இப்படிக் காலம் தாழ்த்தி கூடை கூடையாகக் குறை கூறுவதற்குப் பதிலாக, ஆரம்பத்திலேயே ஆட்சியில் பங்கேற்று, ஐ.மு.வுடன் ஒத் துழைத்து, நிலையான அரசு அமைய காங்கிரஸ் உதவியிருக்கலாம். தவறிவிட்டது!

உட்கட்சி ஜனநாயகத்தை உடைப்பில் போட்டதுமல்லாமல், மாநில இடைத் தேர்தல்களில் படுதோல்வி கண்ட காங்கிரஸ் கட்சிக்கு வருமான வரித்துறை 24 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது என்பது சமீபத்திய செய்தி. இத்தகைய ஒரு கட்சிக்கு, 'மத்தியில் ஆட்சி அமைக்க வாய்ப்பு வேண்டும்' என்று கேட்க என்ன யோக்கியதை இருக்கிறது?



‘வேஷம்’ போட வேண்டுமா...?



• தபீதா

விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் — மாலா மணியன் — செவன்த் சானலின் சீஃப் எக்ஸிக்யூடிவ், தென்கச்சி சுவாமிநாதன் — சென்னை வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பாளர், டாக்டர் ஜெயராமன் — தோல் நோய் மருத்துவர், தபீதா சுந்தர்ராஜ் — மலர் அலங்கார நிறுவனமொன்றை நடத்துபவர்.

தென்கச்சி சுவாமிநாதன் : உலகிலேயே ரொம்ப அழகான பொருள் எது? நாம கண்ணாடியில் அடிக்கடி பார்ப்பதுதான் — நம்ம முகம். அதன் அழகை மேம்படுத்திக் காட்டுவதுதான் மேக்-அப். ஆனா முகத்தையே மறைக்கிற அளவுக்கு இருந்தால் அது மேக்-அப் இல்லே. வேஷம்.

மாலா மணியன் : இறைவன் நூறு சதவீத லட்சணத்தோடு யாரையும் படைக்கல்லே. கண், முடி, மூக்கு இப்படி ஏதாவது ஒண்ணிலேயாவது குறைபாடு இருக்கும். அது பளிச்சென்று தெரியாதபடி மேக்-அப் செய்வதுதான் மேக்-அப். உலக அழகி ஐஸ்வர்யா ராய் கூட மேக்-அப் இல்லாமல் தோன்றுவதில்லையே.

தபீதா சுந்தர்ராஜ் : ஆனா இடம் பொருள் ஏவல்னு இருக்குங்க. மருத்துவமனையிலே அட்மிட் ஆனவரைப் பார்க்கப் போகும்போது மேக்-அப் செய்துக்கிட்டுப் போனா நல்லாவா இருக்கும்? அது ஒருவகை இன்டீசன்ஸி இல்லையா?

மாலா : அதை இப்படியும் பார்க்கலாமே. நாமாவது ஸ்மார்ட்டாகப் போனா, அதனாலே நோயாளிக்கு ஒரு உற்சாகம் வர வாய்ப்பிருக்கும்.

டாக்டர் ஜெயராமன் : நோயாளிக்குப் புத்துணர்வு வரும். ஆனா அவரோட உறவுக்காரங்க தான் சங்கடமாக ஃபீல் பண்ணுவாங்க.

சுவாமிநாதன் : என்னிக்காவது இருக்கிற தலைமுடியையும் சரியாக சீவிக்காம ஆபீஸ் போனேன்னு வச்சுக்குங்க. "என்ன உடம்பு சரியில்லையா?"ன்னு எல்லோரும் கேப்பாங்க. நாம நார்மலாக இருப்பதைக் காட்டிக்கவாவது ஒரு குறைந்தபட்ச மேக்-அப் அவசியம். ஒருமுறை விவசாய ஒலிபரப்பு நிகழ்ச்சியை நடத்த

ஒரு கிராமத்துக்குப் போயிருந்தேன். வேட்டி, பச்சைத் துண்டு உடுத்திக்கிட்டுப் போன என்னை "வாங்க நிகழ்ச்சியிலே பங்கெடுத்துக்க வந்தவர்தானே?"ன்னு மற்ற விவசாயிகளோட உட்கார வச்சுட்டாங்க!

மாலா : எனக்கு ஆறாம் வகுப்பிலிருந்தே ஐ-லைனர் யூஸ் பண்ணிப் பழக்கம். என்னிக்காவது அதைப் பயன்படுத்தல் லேன்னா "அழுதியா?"ன்னு கேப்பாங்க. தவிர மேக்-அப் என்பதில் உடைகளுக்கும் பங்கு உண்டு. 'ஆள் பாதி ஆடை பாதி'ன்னு சொல்லுவாங்க இல்லையா? இந்த அவசர யுகத்திலே ஒருவரைப் பற்றி ஒரு ஃப்ளாஷிலே முடி வெடுக்க வேண்டிய



• மாலா

கட்டாயம் ஏற்படுது. அதனாலே மேக்-அப்பின் பங்கு அதிகமாகிவிட்டது. இன்றைய சூழலில் 'ஆள் கால், ஆடை முக்கால்' ஆயிடுச்சு!

தபீதா : ஒரு இடத்துக்குப் போகும் போது பளிச்சுனு தோற்றமளிக்கிறது முக்கியம். 'பல்க் ஆர்டர்'களுக்காக நான் நிறுவனங்களை அணுகும்போது தோற்றத்திலே கவனம் செலுத்துவேன். அதற்கான ரிசல்ட்டும் கிடைக்கும். ஆனால் ஒண்ணு. ஒருத்தரின் பர்சனாலிடிக்கு அப்புறம்தான் மேக்-அப்.

மாலா : ஒரு இமேஜை உண்டாக்குவதிலும் மேக்-அப்பிற்குப் பங்கு உண்டு. ஆட்டோவில் போகும்போது டிரைவர்கள் "நீங்க ஹார்லிக்ஸ் லேடிதானே?"ன்னு கேட்பதுண்டு. ஒருமுறை தலைவலி காரணமாக லைமுடியைப் பின் பக்கமாக இழுத்து விட்டுக்கிட்டேன். அன்றைக்கு நான் சென்ற ஆட்டோவின் டிரைவர் என்னைத் தயங்கித் பயங்கிப் பார்த்துட்டு, நான்தான்றதை உறு செய்துக்கிட்ட பிறகு, "நீங்க முன்பக்கம் முடிகளை விட்டு வச்சிருப்பீங்களே" என்றாரு! அந்த அளவுக்கு மக்கள் மேக்-அப்பை மனத்தில் பதிய வச்சுக்கறாங்க.

ஜெயராம் : டாக்டர்கள் கூட ஜம்மென்று தோற்றமளித்தால்தான் நோயாளியின் மனத்தில் நம்பிக்கை வளரும். ஆனால் ஒண்ணு. பலவித மேக்-அப் பொருள்களால் தோலுக்கு ஆபத்து உண்டாக வாய்ப்பு உண்டு.

தபீதா : அப்படிச் சொல்ல முடியுமா? ஃபேஷியல் பண்ணிக்கறதாலே சருமத்துக்கு நல்லதுதானே?

ஜெயராம் : ஓக்கே. அதனால் சருமத்தின் உலர்வு குறைவது உண்மைதான். ஆனால் தொடர்ந்து ரசாயனப் பொருள்களை முகத்தில் பயன்படுத்தினால் நாளாவட்டத்தில் தோல் கரடுமுரடாகி சுருங்கிப் போக வாய்ப்பு

• ஜெயராம்



உண்டு. தவிர என்றாவது ஒருநாள் மேக்அப் இல்லையென்றாலும் முகம் பயங்கரமாகக் காட்சி தரும். மறுநாள் கல்யாணம் எனும் நிலையில் ஒரு பெண்ணை அழகு நிலையத்துக்கு அழைச்சிக்கிட்டுப் போயிருக்காங்க. அவளுக்கு ஏதோ அலர்ஜி. அல்லது கொஞ்சம் ஸ்ட்ராங்கான ஸொல்யூஷனால் முகத்தை சுத்தம் செய்துட்டாங்க போல. முகத்தில் நிறைய பள்ளங்கள் உண்டாயிடுச்சு. அலறி அடிச்சுக்கிட்டு என்கிட்டே அழைச்சிக்கிட்டு வந்தாங்க. இதெல்லாம் உடனடியாகச் சரிப்படுத்தும் விஷயமில்லையே. முகப் பள்ளங்களை மறைக்க ஓரளவு மேக்-அப்தான் உதவிச்சு.

தபீதா : ஆனா மாய்ச்சரைஸர் உபயோகிப்பது நல்லதுங்கிறாங்களே?

ஜெயராம் : அது உண்மைதான்.

மாலா : கொஞ்சம் ஆழமாக யோசிச்சா சினிமா நட்சத்திரங்கள் போட்டுக்கொள்வது தான் மேக்-அப். ஃபவுண்டேஷன், ரூஜ் இப்படி எல்லாம் பக்காவாகச் செய்துப்பாங்க.



• தென்கச்சி சுவாமிநாதன்

டீவி.யில் தோன்றுவதால் நான் அதிகபட்சம் லிப்ஸ்டிக், ஐ-லைனர், பிந்தி இவற்றைத்தான் பயன்படுத்துவேன்.

தபீதா : எனக்கு பாத்திமா பாபுவின் மேக்-அப் பிடிக்கும். ஏதோ வேஷம் போட்டுக் கொள்வது போல் இல்லாமல் நீட்டாகத் தெரியும்.

சுவாமிநாதன் : அந்த விதத்திலே கமலஹாசனின் மேக்-அப் உணர்வு எனக்குப் பிடிக்கும்.

மாலா : கௌதமி, சுஹாசினி ரெண்டு பேரும் பொருத்தமாக மேக்-அப் செய்திருப் பாங்க. அவங்க மேக்-அப் செய்துக்கிட்டாங் களா இல்லையான்னு ஒரு சின்ன சந்தேகம் இருந்துக்கிட்டே இருக்கும். அந்த அளவு பெர்ஃபெக்ஷன்.

தபீதா : மேக்-அப் மட்டுமே ஒரு இம்ப்ரஷனை உருவாக்கிடும்னு சொல்லிட முடியாது. அழகான மேக்-அப், ஆனா சிடு சிடுன்ற குணம்னா அவங்களைப் பற்றி என்ன நல்ல கருத்து உருவாயிடப் போகுது?

சுவாமிநாதன் : மாறுவேடப் போட்டியிலே அனுமார் வேடத்தில் தோன்றி முதல் பரிசைப் பெற்ற ஒருத்தர் "இந்தப் பரிசு எனக்குக் கிடைத்ததற்கு மேக்-அப் மேனின் திறமைதான் காரணம்" என்றாராம் தன்னடக்கத்துடன். அடுத்துப் பேசிய மேக்-அப்காரர் அதைவிடத் தன்னடக்கத்துடன் "நான் ஒண்ணுமே செய்யலிங்க. ஒரு வாலை அவருக்கு ஒட்ட வச்சதோட சரி" என்றாராம்!

மாலா : நம் நாட்டில் பெண்கள் கல்யாணமாகிற வரைக்கும் நல்லா ஒப்பனை செய்துக்குவாங்க. அதற்குப் பிறகு "இனிமே எப்படியிருந்தா என்ன!"ன்னு மேக்-அப் பற்றிக் கவலையேபடாம விட்டுடுவாங்க. அப்படின்னா அவங்க கணவனை ஏமாத்தற மாதிரியில்லே ஆயிடுது! 'ஆண்களைக் கவரத்தான் என் மேக்-அப். கணவன் வந்துட்டதாலே இனி அது பற்றிக் கவலையில்லே"ன்னு கொடுக்கிற வாக்குமூலம் மாதிரி அது ஆயிடுதே.

தபீதா : வீட்டிலே இருக்கும் பெண்களும் பளிச்சுனு இருக்குமாறு அலங்காரம் செய்துக்குறது நியாயம்.

மாலா : ஆம்பிளைங்க பாவம். நாம் பயன்படுத்தும் பல அழகு சாதனங்களை உபயோகப்படுத்த முடியாது. உடையிலும் அவங்களுக்கு நிறைய ரெஸ்ட்ரிக்ஷன்ஸ். ஒரு சிவப்புச் சட்டையை அவங்க நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது.

தபீதா : கிளிப் பச்சையைக் கூடத்தான். அதெல்லாம் தெலுங்கு ஹீரோக்கள்தான் போட்டுக்க முடியும்.

ஜெயராம் : சினிமாவிலே ஓக்கே. மற்றபடி அது அகந்தையோட தன்னைப் பறை சாற்றிக்கற மாதிரிதான் இருக்கும்...

தபீதா : பத்து பேர் நல்ல உடைகளோடும், பொருத்தமான மேக்-அப்போடும் இருக்கும்போது, பதினோராவது ஆள் ஏனோதானோன்னு காட்சியளித்தால் அவருக்கே ஒருவித காம்ப்ளெக்ஸ் வந்துடும். அதனாலே, தான் சொல்ல வந்ததைக் கூட அவராலே சொல்ல முடியாமல் போயிடலாம்.

சுவாமிநாதன் : 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சியைக் கேட்டு கிராமங்களிலிருந்து சென்னைக்கு வருபவர்களில் சிலர், நான் நேரில் எப்படியிருக்கிறேன் என்பதைப் பார்க்க வானொலி நிலையத்துக்கு வருவார்கள். ஒருமுறை அப்படி வந்து பார்த்தவர்கள் ஏனோ மறுமுறை வந்து என்னைச் சந்திப்பதேயில்லை.

தபீதா : அதெல்லாம் சும்மா. உங்க இயற்கையான குரலுக்கு வரவேற்பு இருக்கத்தான் செய்யுது.

மாலா : ஒருவிதத்தில் நீங்க சொல்வதை நான் ஒத்துக்கிறேன். என் மேக்-அப்பையோ, உடைகளையோ பாராட்டிக் கடிதங்கள் வந்தாலும், பலரும் ரசிப்பதாகக் குறிப்பிடுவது என் இயற்கையான புன்னகையைத்தான். அந்தவிதத்தில் பார்த்தால் மனப்பூர்வமான, இயல்பான புன்னகைதான் மற்ற எந்தவித மேக்-அப் அளிப்பதை விட அதிகப் பொலிவைக் கொடுக்கும்.

– ஏற்பாடு, தொகுப்பு: **அருண்சரண்யா**

படங்கள்: **யோகா**

வர்த்தமானன் பதிப்பகம்

ஏ.ஆர்.ஆர். காம்ளெக்ஸ், 141, உஸ்மான் சாலை,

பனகல் பார்க், தி. நகர், சென்னை - 600 017

தொலைபேசி - 8257995

முக்கிய அறிவிப்பு

படிப்படியாகச் சலுகை குறைக்கப்பட்டுள்ளது

ரூ. 200 வரை சலுகை இல்லை!

ரூ. 201க்கு மேல் எவ்வளவு வாங்கினாலும் 25% தள்ளுபடி உண்டு. இந்தச் சலுகையும் இம்மாதம் (ஏப்ரல் 21 வரைதான்!)

இதுவரை புத்தகம் வாங்கியவர்க்குத் தள்ளுபடி என்றும் இலவச நூல்கள் என்றும் யாரும் கற்பனை செய்ய முடியாத அளவு சலுகைகள் அளித்து வந்தோம். (ஏன்? ரூ. 200 விலையுள்ள Dictionary வாங்கியவர்க்குச் சில நாட்கள் மற்றொரு Dictionaryயை இலவசமாகக் கூடக் கொடுத்தோம்.

இனி இந்தச் சலுகைகள் இல்லை. (ஏப்ரல் 21க்குப் பின் இப்போது அறிவித்துள்ள ரூ. 200க்கு மேல் வாங்குவோர்க்கு 25% தள்ளுபடி என்னும் சலுகையும் நிறுத்தப்படும்.

திடீரெனச் சலுகைகளை நிறுத்தக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக இதனை ஒரு கடைசி வாய்ப்பாகத் தருகிறோம்.
எனவே இந்தக் கடைசி வாய்ப்பையாவது பயன்படுத்துக.

நாளுக்கு நாள் புத்தக வியாபாரச் செலவு கூடுதலாகிறது. எனவே சலுகைகள் நிறுத்தப்படுகின்றன.

மறுபடியும் நினைவுபடுத்துகிறோம்.


ரூ.201க்குமேல் எவ்வளவு வாங்கினாலும் 25% தள்ளுபடி உண்டு. இந்தச் சலுகை இம்மாதம் ஏப்ரல் 21 வரைதான் என்பதனை நினைவில் கொள்க.

புத்தக விவரம் அடுத்த பக்கங்களில் காண்க.

பதினெண் புராணங்கள்

இரு தொகுதிகள் விலை ரூ. 180

புராணங்கள் 18 என்ற எண்ணிக்கையுடன் இப்பொழுது இருந்தாலும் இந்தப் பதினெட்டும் ஒன்றிலிருந்தே கிளைத்தன என்று மச்ச புராணம் குறிப்பிடுகிறது. தொடக்கத்தில் நூறுகோடி பாடல்களுடன் கூடிய மச்சபுராணம் மட்டுமே இருந்தது. நாளாவட்டத்தில் அறிஞர்களும், பௌராணிகர்களும் குறிப்பிட்ட ஒரு தெய்வத்திற்குத் தலைமைத் தன்மை தருவதற்காக இப் புராணங்களை இயற்றினர். உதாரணமாக விஷ்ணு புராணம், பாகவத புராணம் போன்றவை விஷ்ணுவைச் சிறப்பித்தும், வாயு புராணம், இலிங்க புராணம் என்பவை சிவனைச் சிறப்பித்தும், பிரம புராணம் பிரமனைச் சிறப்பித்தும், மார்கண்டேய புராணம் துர்க்கையைச் சிறப்பித்தும், ஸ்காந்த புராணம் கார்த்திகேயனைச் சிறப்பித்தும் பாடப் பெற்றன. இப் புராணங்கள் அனைத்திலும் அறுபது சதவிகிதம் கதைகள் சிறுசிறு மாற்றங்களுடன் ஒவ்வொரு புராணத்திலும் இடம்பெற்றுள்ளன. பூமியின் உற்பத்தி பற்றியும் ஏறத்தாழ ஒரே மாதிரியான கதைகள் இப் புராணங்களில் பேசப்பட்டுள்ளன. ஒரு பொதுவான மூல நூலிலிருந்து பெரும்பகுதி விஷயங்களை எடுத்துக் கொண்டு ஓரளவு தத்தமக்குத் தேவையான புதியனவற்றைச் சேர்த்து ஒவ்வொரு புராணமும் படைக்கப் பெற்றது. இவ்வாறு ஒரு மூலத்திலிருந்து புதிய வடிவுடன் வேறு நூல்கள் தோன்றுவது இயல்பே என்பது வேதங்களிலிருந்தே அறியலாம். யஜுர் வேதத்தின் பெரும்பகுதி ரிக் வேதத்தில் உள்ளவையே ஆகும். இதனால் ஒரே ஒரு மூலப் புராணத்திலிருந்து இவை தோன்றின என்று நினைப்பதில் தவறில்லை.



இப் புராணங்கள் அனைத்துமே இவ்வுலகிடைப் பிறந்த மனிதன் பல்வேறு சிக்கல்கள் நிறைந்திருக்கும் வாழ்க்கையில் எவ்வாறு அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதையும், தர்ம, அர்த்த, காமம் ஆகிய மூன்றையும் எப்படி அளவறிந்து வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் கதைகளுள் புகுத்தி நமக்கு அறிவுறுத்துகின்றன.

சமயக் களஞ்சியம் ரூ. 85


இந்நூலின் சிறப்பினை அறிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களின் ஆசியுடன் கூடிய முன்னுரையைக் கீழே தந்துள்ளோம்.

"உலகில் உள்ள சமயங்களுள் இந்து சமயம் மிகப் பழமையானது. இந்து சமயத்தின் தத்துவங்களை மூன்று வகையாக அறிந்து கொள்ள வேண்டும். அவை (1) பக்தி (2) ஞானம் (3) கர்மா என்பன. நம் இந்து சமயத்தின் மூல நூலான வேதங்களுள் கர்மாவைப் பற்றி நிறையச் சொல்லப் பட்டிருக்கின்றன. வேதத்தின் முடிவான உபநிஷதங்களுள் ஞானத்தைப் பற்றி நிரம்பச் சொல்லப்பட்டுள்ளன. பக்தியைப் பற்றிப் புராண இதிகாசங்கள் வாயிலாக நன்கு விளக்கப் பட்டுள்ளன.



ஒரு மனிதன், தன் வாழ்நாளில் வேறு வேலையில்லாமல் முழு நேரத்தையும் செலவிட்டு இந்து சமயத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றாலுங்கூட, அப்போதும் ஒரு பகுதியைத்தான் அறிந்து கொள்ள முடியும்.

நம்முடைய புராணங்களிலும் தத்துவ உபதேசங்கள், கேள்வி, பதில் மூலமாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதிசங்கரரும் கேள்வி பதில் என்ற தலைப்பிலேயே 'பிரச்னேத்ர மாலிகா' என்று எழுதியுள்ளார். ஒரு விஷயத்தை வசனத்தில் சொல்வதைக் காட்டிலும் கவிதையில் நயத்துடன் சொல்ல முடியும். அதையே கேள்வி பதில் ரூபமாகக் குழந்தைகளுக்கும் புரியும்படியாக இன்னும் எளிமையாகத் தெளிவாகச் சொல்ல முடியும். இந்த வகையில், இந்து சமயத்தின் பல்வேறு விஷயங்களைச் 'சமயக் களஞ்சியம்' என்னும் தலைப்பில் நம் ஸ்ரீமடத்து ஆஸ்தானத் தமிழ்ப் புலவர் பு.மா. ஜயசெந்தில் நாதன் தொகுத்து எழுதியுள்ள நூல் அருமையான ஆயிரம் செய்திகளைக் கொண்டு இரண்டாம் பதிப்பாக வெளிவருவது அறிந்து மிகவும் சந்தோஷமடைகின்றோம். அன்றாட வாழ்க்கையில் அமையக் கூடிய செய்திகளிலிருந்து ஆன்மீக வாழ்க்கையில் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் வரை, பயனுள்ள பல செய்திகள், கேள்விபதில் ரூபமாக இந்நூலில் தரப்பட்டிருப்பது தற்கால மக்களுக்கு எளிமையாகச் சமயச் செய்திகளைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் உபயோகமாக உள்ளது.





மிகவும் முயன்று சேகரித்து, எளிய நடையில் வினாவிடைகளாக அழகுற அமைத்துத் தந்துள்ள புலவரின் உழைப்பைப் பாராட்டி, எல்லா அன்பர்களும் இச்சிறந்த நூலைப் பெற்றும், படித்தும், அதன்படி கடைப்பிடித்தும் மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெறுமாறும், இதுபோன்று மேலும் பல நல்ல நூல்கள் அவர் மூலமாக வெளிவரவும் ஆசீர்வதிக்கின்றோம்."

நாராயண ஸ்ருமிருதி.

கௌடல்யரின்

அர்த்த சாஸ்திரம் ரூ. 150

பேரா. அ. மாணிக்கம் M.A.



கௌடல்யர் விரிந்த கல்வி அறிவும், ஆழ்ந்த அனுபவ அறிவும் பெற்ற ஓர் அரசியல் நிபுணர் ஆவார். இவரது காலம் சந்திரகுப்தர் காலம் ஆகும். அதாவது கி.மு. நான்காம் நூற்றாண்டு. வடநாட்டின் வடகோடியில் இருந்த தட்சசீலத்தில் பிறந்தவர். இவரது குடிப்பெயர் கௌடல்யர் என்றும், தந்தை இட்ட பெயர் விஷ்ணு குப்தர் என்றும் கூறுவர். பாரத சமுதாயத்தில் தொன்றுதொட்டு வழங்கி வந்த கோட்பாடுகளை அடிப் படையாகக் கொண்டே அர்த்த சாஸ்திரம் இயற்றப்பெற்றது. இதில் பல்வேறு தலைப்புகளில் செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இக்காரணம் பற்றி அர்த்தசாஸ்திரம் ஓர் அறிவுரைக் களஞ்சியம் என்பர். அர்த்த சாஸ்திரத்தில் உள்ள தத்துவங்களும் தொடர்களும் சொற்களும் இலக்கியங்கள் பலவற்றுள் எடுத்து ஆளப்பட்டுள்ளன. கௌடல்யர் தமக்கு முன் இருந்த பல நீதி நூல்களையும், அவற்றின் ஆசிரியர்களான மனு, உசனஸ், பிருகஸ்பதி, பாரத்துவாசர், விசாலாட்சர், காத்தியாயனார், பராசரர் முதலியவர்களைப் பற்றியும் தம் நூலில் குறித்துள்ளார். அறிவுக் களஞ்சியமான இந்த அர்த்தசாஸ்திரம் திருக்குறள் போல் தமிழர் இல்லந்தோறும் இருக்க வேண்டிய ஒப்பற்ற நூலாகும்.



கம்பன் கண்ட மாந்தர் ரூ. 75

பேராசிரியர் ஜெ.ஸ்ரீசந்திரன். M.A.

உலக மகா காவியங்களுள் ஒப்பற்று விளங்குவது கம்பராமாயணம். இந்தியத் திருநாட்டின் மூல நூலான வான்மீகி ராமாயணத்தைத் தழுவி எண்ணற்ற இராமாயணங்கள் பல மொழிகளில் தோன்றியுள்ளன. எனினும் கம்பராமாயணத்துக்கு நிகராக வேறெதனையும் கூறமுடியாது. பாத்திரப் படைப்பிலும், வருணனையிலும், உவமைகளைக் கையாள்வதிலும், உருவகங்களை அமைத்துக் காட்டுவதிலும், போர் வருணனையிலும் கம்பர் நிகரற்று விளங்குகிறார். வளமார்ந்த தமிழ் மொழி, கம்பரது கற்பனைக்கு ஏற்பப் பொலிவு பெறுகிறது. இம்மாபெரும் காப்பியத்தில் வரும் சிறந்த மாந்தர் அனைவரும் தனித்தனிக் காப்பியத் தலைவராகும் தகுதி படைத்தவர் ஆவர். இந்த வகையில் இராமன், பரதன், இலக்குவன், அனுமன், இராவணன், கும்பகருணன், இந்திரசித்து, வாலி, சீதை ஆகிய காப்பிய மாந்தரின் இயல்புகள் பற்றி - காப்பியத்தில் அவர்கள் பங்கு பற்றி விளக்குகிறது, கம்பன் கண்ட மாந்தர் என்னும் . ஒப்பற்ற இந்நூல். கம்பராமாயணத்தின் மீது முழுப்பார்வை செலுத்திய மனநிறைவு, இதன்னைப் படித்து முடிக்கும்போது தோன்றும் என்பது உறுதி.



இராமன் பன்முக நோக்கில்

ரூ. 95 *பேரா. அ.ச. ஞானசம்பந்தன் M.A.*

இந்நூல் இராமபிரானின் பெருமையை விளக்கும் தனிச் சிறப்புடையது. கம்பனும் பல்வேறு இராமாயணங்களும், கம்பனின் காப்பிய நோக்கம், மக்களும் இராமனும், தந்தையும் இராமனும், தாயரும் இராமனும், தம்பியரும் இராமனும், உடன்பிறவாத் தம்பியரும் இராமனும், பிராட்டியும் இராமனும், அனுமனும் இராமனும், முனிவர்களும் இராமனும், அரக்கர்களும் இராமனும், பரம் பொருளும் இராமனும் எனப் பல தலைப்புகளில் இராமனின் பெருமையைக் கூறுகிறார், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள்.

இராமபிரானைப் பற்றித் தெரிந்து கொள்ள இதுவரை இதைவிடச்சிறந்த நூல் எதுவும் தமிழில் வரவில்லை.

இராமன் காப்பியத்தில் இருநிலைகளில் காட்சி தருகிறான். ஒன்று, அவன் பரம்பொருள், மற்றொன்று, அவன் மனிதன்; இவ்விரு நிலைகளிலும் அவன் செயல்கள் எவ்வாறு சிறப்புற்று விளங்குகின்றன என்பதைக் காட்டுவதே நூலின் உயிர்த் துடிப்பாக அமைந்துள்ளது. பேராசிரியர். அ.ச.ஞா. பரம்பொருளை 'மூல இராமன்' என்றும் அவன் மனிதனாக உலவும் கோலத்தினைத் 'தசரத இராமன்' என்றும் குறிப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுகிறார். ஒரே நேரத்தில் ஒருவனைக் கடவுளாகவும் மனிதனாகவும் படைப்பது மிக அரிய செயல். இந்த அரியமுயற்சியில் கவிச்சக்கரவர்த்தி முழு வெற்றி பெற்றுள்ளார்.

இதுவே நூல் உரத்த குரலில் முழங்கும் ஆய்வு முடிவு.

கம்பன் எடுத்த முத்துக்கள் ரூ. 75

பேரா. அ.ச. ஞானசம்பந்தன். M.A.



இந்நூலில் பேராசிரியர். அ.ச.ஞா. அவர்கள் காண்டங்களின் அமைப்பை எடுத்துச் சொல்கிறார். சில காண்டங்களைப் பற்றிச் சொல்லும்போது வடிவ அமைப்புக்கு (Structure) முதன்மை கொடுக்கிறார். வேறு சில காண்டங்களில் சில பாத்திரங்களை விதந்து கூறி விளக்குகிறார். மற்றுள்ள காண்டங்களில் நுவலும் பொருளுக்கு முக்கியத்துவம் தருகிறார். எந்தெந்தக் காண்டத்தில் எந்தெந்தக் கூறுகள் கவனத்துக்கு உரியனவோ அந்தந்தப் பாங்கில் நூல் அமைந்துள்ளது. பத சாரம் காட்டுதல் பேராசிரியர் அ.ச.ஞா அவர்களின் தனிச்சிறப்பு. இந்நூலில் பல இடங்களில் பத சார நயம் உண்டு. ஒரே ஓர் இடத்தை மட்டும் சுட்டுவோம். உயிர் பிரியும் நிலையில் அறிவு பெற்றுத் தெளிந்ததாக வாலி பேசுகிறான். இதனைக் குறிப்பாகத்தான் வாலி காட்டுகிறான். இந் நுட்பத்தைப் பேராசிரியர் அற்புதமாக விளக்குகிறார்.

> 'ஏவுகூர் வாளியால் எய்து நாய் அடியனேன்
> ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளினாய்'

என்கிறான் வாலி. வாளி எய்தவன் தானே கொன்றவன் - ஆவி போக்கியனவன் ; ஆவி போக்கும் வேளையில் அறிவு தந்தருளினாய் என்றுதானே சொல்லியிருக்க வேண்டும் ?

அம்புதான் கொன்றது என்று நினைத்திருந்தால் ஆவி போக்கும் வேலைவாய் என்று சொல்லியிருக்க வேண்டும். அதற்கு மாறாக ஆவி போம் வேலை என்று கூறியதால், 'இவ்வுலகை விட்டுப் போக வேண்டிய நேரம் வந்து விட்ட காரணத்தால் என் ஆவி போகின்றது. இதற்கு இராமன் எய்த அம்பு காரணம் அன்று' என்பதை

'ஆவி போம் வேலைவாய்' என்பதன் மூலம் தெரியப்படுத்தி விடுகிறான். இந்த விளக்கத்திற்கு முன்னும் பின்னும் உளவியல், ஆன்மீகம் சார்ந்த விளக்கங்களையும் ஆசிரியர் வரைந்துள்ளார். இதுபோன்ற இடங்கள் இந்நூலிலே பல உள.


அபிராமி பட்டர் இயற்றிய

அபிராமி அந்தாதி

உரையாசிரியர். பருத்தியூர் சந்தானராமன்

தேவாரம், பிரபந்தம், குமரகுருபரர் பாடல்கள் ஆகியவற்றில் 'சக்தி' இடம் பெற்றிருப்பினும் அவள் பரசிவத்தில் இணைந்தவளாக ஸ்ரீமன் நாராயணனின் இதயத்தில் தங்கியவளாக மதுரையை ஆண்ட மீனாட்சியாகப் பாடப் பெற்றாளே தவிர சக்திக்குத் தனித்துவம், எதுவும் தரப் பெறவில்லை என்பதை அறிதல் வேண்டும்.

இந்நிலையில் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்த அபிராமி பட்டர் இயற்றிய அபிராமி அந்தாதி ஈடு இணையற்ற சிறப்புடன் விளங்கு வதைக் காணலாம். அபிராமி அந்தாதியின் 101 பாடல்களும் இன்றும் பலரால் பாராயணம் செய்யப்படும் சிறப்புடையன. மேலோட்ட மாகப் பார்ப்பதற்கு இப்பாடல்களின் பொருள் விளங்கி விடுவதால் ஆழமாக இதனுள் சென்று இப்பாடல்கள் அறிவுறுத்தும் தத்துவத்தை, என்ன காரணத்தாலோ யாரும் எழுதவில்லை.



இந்நிலையில், திரு.பருத்தியூர் சந்தானராமன் அவர்கள் மிக அற்புதமாக விளக்க உரை எழுதித் தருமபுர ஆதீனம் வெளியிடும் 'ஞானசம்பந்தம்' என்ற மாத இதழில் ஒவ்வொரு பாடலாக வெளியிட்டிருந்தார். திரு.பருத்தியூர் சந்தானராமன் அவர்கள் எவ்வளவு ஆழமாக எத்தனை ஆண்டுகளாக இந்நூலைப் பயின்று, எவ்வளவு தீவிரமாகச் சிந்தித்துள்ளார் என்பதை இந்நூலின் முதற் பாடலையும் அதன் உரையையும் கற்பவர்கள் அறிந்து கொள்ள முடியும். லலிதா சகஸ்ரத்திற்குப் பல உரைகள் உண்டேனும் அன்னையின் அருள் பெற்ற பாஸ்கரராயர் உரை ஈடுஇணையற்றது என்பது உலகப் பிரசித்தம். பல சமயங்களில் சொற்களுக்கு மட்டும் பொருள் கூறாமல் அதனால் பெறப்படும் குறிப்புப் பொருளையும் தருவதில் பாஸ்கரராயர் வல்லவர் என்பதை உணர்ந்த திரு.சந்தானராமன் 'மதிக்கின்ற மாணிக்கம்' என்ற சொற்பொருள், பாஸ்கர ராயரின் குறிப்புப் பொருளோடு ஒத்துள்ளது என்று எடுத்துக் காட்டுவது இவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்று.

முதற்பாடலைப் போலவே பின்வரும் எல்லாப் பாடல்களுக்கும் பொருள்தருவதுடன் அந்தந்தப் பாடல்களில் மறைந்து கிடக்கும் மந்திரங்களை எடுத்துக் காட்டுவது இவ்வுரையின் தனிச் சிறப்பாகும்.

நூல்கள் விவரம்

மூலமும் உரையும் அடங்கிய நூல்கள்:

சமயக் களஞ்சியம்	85.00
இந்து சமய இணைப்பு விளக்கம்	30.00
சிவத்திரு மேனிகள்	30.00
நாலடியார்	40.00,
தேம்பாவணி (3 தொகுதிகள்)	250.00
முத்தொள்ளாயிரம்	14,00
யாப்பருங்கலக் காரிகை	30.00
திருக்குறள்	37.00
உத்தர காண்டம் (2 தொகுதிகள்)	200.00
திருப்புகழ் திரட்டு	140.00
வில்லி பாரதம்(6 தொகுதிகள்)	300.00
திருவருட்பா திரட்டு	100.00
தாயுமானவர் பாடல்கள் (2 தொகுதிகள்)	120.00
சீவக சிந்தாமணி (3 தொகுதிகள்)	350.00
மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி	150.00
சிலப்பதிகாரம்	100.00
பட்டினத்தார் பாடல்கள்	100.00
நடராசர் சதகம்	40.00
அண்ணாமலை சதகம்	40.00
அருணாசல சதகம்	40.00
அறப்பளீசுர சதகம்	40.00
கயிலாய நாதர்	40.00
தண்டலையார் சதகம்	40.00
விவேக சிந்தாமணி	50.00
நீதிநூல் திரட்டு	30.00
அறநெறிச் சாரம்	30.00
நீதி வெண்பா	30.00
உலகநாதரின் உலகநீதி அதிவீரராம பாண்டியரின் வெற்றி வேற்கை சிவப்பிரகாசரின் நன்னெறி (மூன்றும் சேர்ந்தது)	30.00
நீதிநெறி விளக்கம்	30.00
தனிப்பாடல் திரட்டு (கதைப் பாடல்கள், வசைப் பாடல்கள், சிலேடைப் பாடல்கள், வித்தாரப் பாடல்கள், விடுகதைப் பாடல்கள்)	80.00
அபிராமி அந்தாதி (மூலம் உரை விளக்கம் மேற்கோள் அனைத்தும் அடங்கிய விரிவான பெரிய நூல்)	150.00

உரைநடை நூல்கள்:

இராமன் - பன்முக நோக்கில்	95.00
கம்பன் எடுத்த முத்துக்கள்	75.00
கம்பன் கண்ட மாந்தர்	75.00
வானோற நீண்ட புகழான் (சீவக சிந்தாமணியில் சீவகன் பிறப்பும் சிறப்பும்)	50.00
ஓஷோவின் (ரஜினீஷ்) சிந்தனைகள்	70.00
தமிழில் க்ச்த்ப் பிழையின்றி எழுதுவது எப்படி?	25.00
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அறிவியல்	15.00
பஞ்சபரமேஷ்டிகளும் ஜைன தத்துவமும்	22.00
ஜாதகமும் அதிர்ஷ்ட யோகங்களும்	25.00
மொழித்திறன்	16.00
சீவக சிந்தாமணி - கதைப் போக்கில் வினைக் கொள்கை	26.00
ஸ்ரீபுராணம்	95.00
வியாசபாரதம் (3 தொகுதிகள்)	300.00
ஸ்ரீமத் பாகவதம் (2 தொகுதிகள்)	150.00
வாழவா முடியாது?	20.00
பதினெண் புராணம் (2 தொகுதிகள்)	180.00

அகராதிகள்:

English - English - Tamil Dictionary	200.00
Tamil - Tamil Dictionary	140.00
Dictionary of Idioms and Phrases with Tamil Translation	95.00
Dictionary of Quotations with Tamil Translation	65.00
Dictionary of Synonyms and Antonyms with Tamil Meaning	45.00
Dictionary of Proverbs with Tamil Translation	45.00

ஆங்கிலம் கற்கத் தேவையான நூல்கள்

ஆங்கிலம் கற்க அடிப்படைச் சொற்கள்	65.00
ஆங்கில இலக்கணம் - விளக்கம் தமிழில்	115.00
Checkup your English in a Week	60.00
Varthamanan English Speaking Course	85.00
Important Sentences Structure	25.00
Standard English Grammar	200.00

பணம் வந்த உடனே நூல்களை அனுப்புகிறோம். வழக்கம் போல் தபால் செலவினைத் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்க.

M.O.(அ) D.D. அனுப்ப வேண்டிய முகவரி

VARTHAMANAN PATHIPPAGAM,
ARR Complex, 141. Usman Road,
T.Nagar, Chennai 17
(Near Panagal Park) Phone: 8257995

கலைஞர் அறியாததா?

✉ வி.என்.எஸ். காதலர்களுக்கு கலங்கரை விளக்கம் மட்டுமல்ல! கடவுளும் கூட!
காப்பரத்தாம்பட்டி, கே. ராஜாதிருவேங்கடம்.

✉ எல்லோருமே மறந்து விட்டிருந்த (பணம் போட்டு ஏமாந்தவர்களைத் தவிர) மோசடி நிதி நிறுவனங்கள் சம்பந்தமான விஷயத்தை "என்ன செய்கிறது அசோசியேஷன்?" என்ற கட்டுரை மூலம் தூசி தட்டித் தந்த கல்கிக்கு மனமார்ந்த நன்றி.
சென்னை - 1, கே.ஆர். உதயகுமார்.

✉ தி.மு.க. ஆட்சிக்கு கறை சேர்க்கும் திருப்பத்தூர் சந்தனக் கிடங்கின் தீ விபத்துப் பற்றித் தாங்கள் மனம் நொந்து தீட்டிய தலையங்கக் கருத்துக்களில் சத்தியம் ஒளிரக் கண்டேன்! 'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' எனும் குறள் கலைஞர் அறியாததா என்ன? கிடங்கில் ஏற்பட்ட தாங்கொணா நஷ்டத்தினைப் பற்றிச் சாக்குப் போக்குச் சொல்லிக் கிடப்பில் போடாமல் சரியான தீர்வொன்றைத் தமிழக அரசு கண்டெடுக்க வேண்டும்!
இனாம் மணியாச்சி, • ச.ஆ. கேசவன்

✉ கல்பநாத்ராய் செய்த குற்றத்திற்கு, அவர் பெற்ற தண்டனை கடுமையானது என்றாலும் தகுந்த தண்டனைதான். இந்த விஷயத்தை நரசிம்மராவ் மறைத்தது அதைவிடப் பெரிய குற்றம்! தேச துரோகம் என்றால் அது மிகையில்லை.
தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

✉ பார்க்க வேண்டிய படங்கள் அப்படின்னு சொல்லிட்டு, படங்கள் இன்னும் திரையிடப்படவில்லை எனக் கூறி 'பொசுக்' கெனச் செய்து விட்டீரே!
பொன்மலை, ஆர்.பிரகாஷ்.

✉ 'சூப்பர் ஸ்டாருக்கு சுடலையின் மடல்' வாசித்து நேசித்தேன்... செம்பியனுக்கு ரசிகர் மன்றம் ஆரம்பிக்க எண்ணியுள்ளேன்.
மதுரை - 10, சேதாமகன்.

✉ 'தொட்டாலே நோய்கள் குணமாகும்' எனும் கட்டுரை வியப்பில் ஆழ்த்தியது! விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும் இயற்கை இயற்கைதான்!
பு.புளியம்பட்டி, அ. அருள்பிரகாஷ்.

✉ என்னதான் 'வெயிட்' போடாமல் இருப்பதற்காக ப்ரீதா 'ஜிம்'முக்கெல்லாம் போய் எக்ஸர்சைஸ் செய்தாலும் கூட... அவர் தாயார் மஞ்சுளாவின் மரபியல் 'ஜீன்' அவரை 'குண்டக்கா மண்டக்கா' செய்து விடும் ஆபத்து இருக்கிறதேயம்மா...!
சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

✉ 'காதல் என்பது', 'மயக்கம்'- இரண்டு சிறுகதைகளும் மிகவும் அருமை. நல்ல கருத்துள்ள கதைகளாக மின்னின.
நாகூர், நிலா காதலன்.

✉ 'தேய்ந்த சிலம்பு' கவிதை, ஆண்களால் காயப்பட்டிருக்கும் பெண்மையின் ஆழ்மன உணர்வை அழகாய் படம் பிடித்துக் காட்டியது. கடைசி வரிகள் பஞ்ச்!
திருப்பூர், ப. சங்கர்.

ஒரு திருத்தம்

கல்கி, 30.3.97 இதழ் தேரோட்டம் தொடரில் (பக்கம் 20) lead மேட்டரில் ஒரு வரி விட்டுப் போயிருக்கிறது. பின்வருமாறு திருத்தி வாசித்துக் கொள்ளவும்:

"நாம் இருவரில் என் கிழவேஷத்தைப் பார்த்துவிட்டு, எனக்கு சுமார் அறுபது வயது இருக்கும் என்று டி.ஆர்.சுந்தரம் நினைத்தாராம். **வேணுவும் அவ்வண்ணமே நினைத்திருக்கிறார்.** என்னை நேரில் பார்த்ததும் ஆச்சர்யப்பட்டவர், அப்போதும் என்னை 'அண்ணே, அண்ணே' என்றுதான் கூப்பிட்டார்! வேடிக்கை என்னவென்றால், என்னை விட, வயதில் மூத்தவரான டி.ஆர். ராமச்சந்திரனை அவர் 'தம்பீ' என்று கூப்பிட்டதுதான்!"

வட்டமேஜை


TOP ANGLE
-புதிய பகுதி
கோலம் சரி; பூ ஏன் ஓரத்தில்?
• வண்ணப்படம் : கோபிநாத்

புதிய பகுதி

திருப்பதிக்கே லட்டு!

அழகு நிலையங்கள் நாட்டில் எக்கச்சக்கமாய் பெருகிவிட்டன. வண்ணச் சிட்டுக்களாக, பெண்களையெல்லாம் கண்ணைக் கவரும்படிக்கு 'ஃபேஷியல்', 'மேக்-அப்' என்று அசத்தி அனுப்புகிறார்கள் இந்த அழகு நிலைய அம்மணிகள். (ரேட்டைக் கேட்காதீர்கள்.) அவர்கள் தம் திருமுகத்தை யாரிடம் போய் மேலும் பொலியச் செய்து கொள்கிறார்கள்?



• ரமாவுக்குத் தலையலங்காரம் செய்பவர் சுபாஷிணி

சென்னையில் 'Special Effect' என்ற பெயரில் அழகு நிலையம் நடத்திவரும் ரமா ராம்பிரசாத்திடம் கேட்டோம்.

"சரிதான். நானே அழகு நிலையம் நடத்திக் கொண்டு, வெளியில் போய் நான் அழகு படுத்திக் கொண்டால், என் கடைக்கு யார் வருவார்கள்?" என்று அவர் வெளிப்படையாகக் கேட்கவில்லைதான்.

வந்த பதில் : "என் பாரிலேயே, சுபாஷிணி, சுஜாதா, ரெபக்கா என்று மூன்று பெண்கள் வேலை பார்க்கிறார்கள். இதில் சுபாஷிணி, 'ஃபேஷியல்' எக்ஸ்பர்ட். அவளிடம்தான் நான் பண்ணிக் கொள்வது. சுஜாதாவும் ரெபக்காவும் 'வாக்ஸிங்' பண்ணி விடுவார்கள்" என்கிறார்.

ரமா பிரசாத், லண்டன் சென்று ஹேர்-கட்டிங் கற்று வந்தவர். (ஹூம்!) நான்கு வருடங்கள் சவுதியில் பார்லர் வைத்து நடத்திய பின் (ஷேக் பெண்கள் வருவாங்களா?) சென்னைக்கு வந்து செட்டில் ஆனவர்.

தொழில்முறையில் அழகுக் கலை நிபுணராக இருந்தாலும் ரமாவின் சில கருத்துக்கள் அவருக்கே அல்வா கொடுக்கக் கூடியவையாக இருப்பது, பேசிக் கொண்டிருந்தபோது தெரியவந்தது.

யாராவது நடுத்தரப் பெண்மணி வந்து தலைக்கு டை போட்டு விடச் சொல்லிக் கேட்டால், 'முதுமைக்கு நரை அழகு' என்பதைச் சொல்லாமல் சொல்லி மனம் மாற்றப் பார்க்கிறாராம்!

அப்புறம் பதினெட்டு வயசுக்குக் கீழே உள்ள பெண்கள் ஒப்பனை செய்து கொள்ள வருவது கூடாது என்கிறார்.

காரணம்?

"தோலில் அலர்ஜி ஏற்பட்டு, நிறம் மாறும். உதட்டுச் சாயம் பூசினால் உதடு கறுக்கும்... சிறிய வயசுப் பெண்கள் இவற்றைத் தவிர்க்க வேணும்!"

அப்புறம், ஆண்களும் அழகு சாதனங்களை உபயோகிப்பதில் தவறில்லை என்கிறார் இவர். ஆண்களுக்கென்று தனியாகச் சில கிரீம் ஐட்டங்கள் சந்தைக்கு வருகின்றன என்கிறார். ஆனாலும் பெண்கள் உபயோகிக்கும் முகப் பொலிவு க்ரீம்களை ஆண்கள் உபயோகித்தாலும் பாதகமில்லையாம்.

"ஐயே, அதுல மஞ்சள் கலந்திருக்கும். பூசிக்கிட்டா மீசை முளைக்காது" என்று யாராவது சொன்னால் இனி நம்பாதீர்கள்!

— மாலதி சந்திரசேகரன்

படம் : ஸ்ரீஹரி

மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம் | கௌரவமான வருமானம் | மரியாதையான சேவை

வங்கியல்லாத கம்பெனிகள் (ரிசர்வ் பேங்க்) வழிமுறைகள் 1977,
பகுதி - 1 விதி - 3 உபவிதி - Xiஇன் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

REGISTERED EDUCATIONAL TRUST NO. 1488.

In Education from 1979

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர்.
150 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள்.

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, MCA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, GRE, TOEFL, Business Technology, etc

வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)

30 தினம் 18% PA, 45 தினம் 19% P.A.
60 தினம் 20% PA, 90 தினம் 21% P.A.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம். புதுப்பிப்பதற்காக வர வேண்டிய அவசியமில்லை.

மாதப் பென்ஷன் திட்டம் (TM)

டெபாசிட்	காலம்	மாதவட்டி ரூ.
5000	1 வருடம்	125
10000	1 வருடம்	250
10000	3 வருடம்	300
10000	5 வருடம்	320

வருமானவரி இல்லை * வருமானவரி இல்லை * வருமானவரி இல்லை

சேமிப்பு கணக்கு: 15%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.

சட்ட ஆலோசகர்

ஸ்ரீ V.S. சந்திரசேகரன், B.A;B.L.
அட்வகேட், உச்சநீதி மன்றம்,
26, ரங்கநாதன் தெரு, சென்னை - 17.

ஆடிட்டர்

M/S. வேல் முருகன் அண்ட் கோ
சார்ட்டர்ட் அக்கவுண்ட்டன்ட்ஸ்
30/A 2 பர்கிட் ரோடு, சென்னை - 17.

ஆல் வேல்டு அக்கவுண்டிங்க் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)

All-World Accounting Administrative and Technological Academy.

தலைமை காரியாலயம்: "வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம், Next to DAV School, T. நகர், சென்னை - 17.
கிளை: 7, முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.
கிளை: 5, 2வது மெயின் ரோடு, நியு காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.
கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

Sunday Working Day

MUMBAI : 1, Deepal Apartments, Jain Hind Colony, Gupte Road, Dombivli West - 421 202.


உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.
AAAAA — பாதுகாப்பின் சின்னம்.

Prof. V. விவேகானந்த்
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB
(All India First), EKSAMD (Germany)
(Distn), B.L.
Managing Trustee.

Dr. பரமேஸ்வரி, MBBS,
Managing Trustee.

சொத்து பாதுகாப்பு, மாத வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.

(TM) Trade Mark



11:29

டேனியல் ஸ்டீல்

1

ஒரே ராத்திரியில் தன் வாழ்க்கை தலைகீழாக மாறப் போகிறது என்பதை அறியாதவளாக, சான்பிரான்ஸிஸ்கோவில், கோல்டன் கேட் பாலத்தைத் தாண்டிக் காரை ஓட்டிக் கொண்டிருந்தாள் பேஜ். பாலத்தின் கீழே ஓடும் தண்ணீர் பார்க்கப் பார்க்கப் பிரமிப்புக் கொடுத்தது.

அது ஓர் இனிமையான மாலை நேரம். ஏப்ரல் மாதத்துச் சனிக்கிழமை. பட்டுப் போன்ற காற்று கன்னங்களை வருடிக் கொண்டிருந்தது. நாள் பூரா வெளியிலேயே சுற்றிக் கொண்டிருக்கலாம் போல ஆசை ஏற்படுத்தக் கூடிய உல்லாசமான பருவ நிலை.

பக்கத்தில் இருக்கும் மகன் ஆண்ட்ருவை ஓரக் கண்ணால் கவனித்தாள். போன வாரம் தான் அவனுக்கு ஏழு வயதாகியிருந்தது. அவளைப் போலவே அவனுக்கும் கருத்த முடி. தலையில் அணிந்திருந்த பேஸ்பால் குல்லாவை எடுத்ததும் முடி சிலிர்த்துக் கொண்டு நின்றது. முகம் பூரா திப்பி திப்பியாகப் புழுதி. விளையாடி விட்டு வந்த களைப்புத் தீர வீட்டில் ஹாய்யாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். அவனுக்கும் அவன் அம்மாவுக்குமிடையே உள்ள பாசமும் பந்தமும் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தன.

"இன்று உன் ஆட்டம் பிரமாதம், ஆண்டி! அந்தப் பந்தை என்ன அருமையாகக் காட்ச் பிடித்தாய்!" என்று மகனைப் பாராட்டினாள் பேஜ். அவனுடைய விளையாட்டுகளுக்கும் சரி, பள்ளிக்கூட நாடகங்களுக்கும் சரி, அவளும் கூடவே போய் இருப்பது வழக்கம். அவளுக்கு அது ரொம்பப் பிடிக்கும். ஆண்ட்ருவுக்கும் தான்.

"அந்தப் பந்தை அநேகமாய்க் கோட்டை விட்டு விட்டோம் என்றே நான் நினைத்தேன் அம்மா," என்று கூறிச் சிரித்தான் ஆண்டி.


அவனுடன் சேர்ந்து பேஜும் சிரித்தாள். கணவன் பிராட்டும் இப்போது இங்கே இருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும் என்ற ஏக்கமும் மனசின் ஆழத்தில் ஏற்பட்டது.

இப்போதெல்லாம் சனிக்கிழமை சாயங்காலங்களில் பிராட் வீட்டில் இருப்பது கிடையாது. எப்போதும் வேலை வேலை என்று வெளியூர் போய்விடுகிறான். அல்லது சிநேகிதர்களுடன் கால்ஃப் விளையாடக் கிளம்பி விடுகிறான்.

சனி, ஞாயிறுகளில் பேஜுக்கு ஓழிவே கிடையாது. ஆண்டியுடன் விளையாட்டு மைதானத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும். அல்லது பெண் ஆலிஸன் எங்கெங்கோ மூலை முடுக்குகளில் நடக்கும் நீச்சல் போட்டிகளுக்குப் போகும்போது துணையாகப் பேஜும் போக வேண்டும். அல்லது அவர்களுடைய செல்ல நாய் லிஸ்ஸிக்கு ஏதாவது காயம்பட்டு அதை டாக்டரிடம் காட்ட வேண்டியிருக்கும். அல்லது குழாயில் தண்ணீர் வராது. கூரையில் ஒழுகும்.

இதையெல்லாம் சரி செய்வதிலேயே பேஜுக்கு நேரம் சரியாகி விடுகிறது. கணவன் ஊரில் இருக்கும் நாட்களில் கூட, அவனுடன் சிறிது நேரம் அந்தரங்கமாக இருப்பதென்பது, ராத்திரியில் குழந்தைகள் தூங்கிய பிறகுதான்.

கல்யாணமாகிப் பதினைந்து வருடமாகிறது. இன்றைக்கும் பிராடிடம் அவளுக்குக் கொள்ளைக் காதல். முன்பு அவள் நியூயார்க் நிறுவனமொன்றில் கலைப் பிரிவில் பணியாற்றி வந்தாள். இப்போது எந்த வேலையிலும் இல்லை. ஆனால் ஓவியங்கள் வரைவதை விடவில்லை. ஆண்டியும் ஆலிஸனும் படிக்கும் பள்ளிக்



தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

கூடங்களில் அவன் வரைந்த ஓவியங்களைச் சிறப்பாக மாட்டி வைத்திருக்கிறார்கள். ஆலிஸ னின் அறையில் கூட ஒரு நீச்சல் குளத்தைச் சுவரோவியமாக வரைந்து தந்திருக்கிறாள்.

காரை ஓட்டிக் கொண்டிருந்தவள், "ஐஸ் கிரீம் சாப்பிடறியா ஆண்டி?'' என்றாள் மகனிடம்.

"ஓ எஸ்!" என்று வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான் ஆண்டி. வாயெல்லாம் பல்லாக என்று சொல்வது தப்பு. வாயில் பல்லைக் காட்டிலும் ஈறுதான் அதிகம் தெரிந்தது!

"சாக்லேட் சாப்பிட்டுச் சாப்பிட்டு உன் பல்லெல்லாம் கெட்டுவிட்டது. பல் டாக்டரி டம் அழைத்துப் போய்ப் பொய்ப் பல் மாட் டப் போகிறேன்" என்றாள் பேஜ்.

''ஐயையோ, வேண்டாம்மா!'' என்று மறுபடியும் சிரித்தான் அவன்.

காரை நிறுத்தி அவனுக்கு ஐஸ் கிரீம் வாங்கிக் கொடுத்தாள் பேஜ். அவன் ஆனந்த மாகச் சாப்பிடுவதைப் பார்க்க அவளுக்கும் ஆனந்தமாக இருந்தது. மகனை முத்தமிட்டாள். ஐஸ்கிரீம் அவன் முகம் பூரா ஒட்டிக் கொண்டது.

"வந்து... அம்மா...." என்று ஏதோ பேச முயன்று நிறுத்திக் கொண்டான் ஆண்டி.

"என்ன, கண்ணா?"

"உனக்கு இன்னொரு பாப்பா பிறக்குமா அம்மா?"

சிரிப்பை அடக்கிக் கொண்டாள் பேஜ். "ஊஹூம்" என்றாள். நிறையக் குழந்தைகள் பெற்றுக் கொள்ளத்தான் அவளுக்கு ஆசை. ஆனால் இரண்டே போதும் என்று பிராட் சொல்லி விட்டான்.

"எதற்கு இப்படித் திடீரென்று கேட்கிறாய் ஆண்டி?"

"என் சிநேகிதன் டாம்மியோட அம்மா வுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. ரெட்டைக் குழந்தை. அவன் வீட்டுக்குப் போயிருந்தேன். ரெண்டு குழந்தையும் நல்ல குண்டு. ஏம்மா, நான் பிறக்கிறப்ப குண்டா இருந்தேனா?"

"ரொம்பக் குண்டாக இல்லை. ஆனால் பரவாயில்லை" என்றாள் பேஜ். உண்மையில் ஆண்டி எட்டு மாதத்திலேயே பிறந்து விட்ட தால் மூன்று பவுண்ட் எடை கூட இருக்க வில்லை. இரண்டு மாத காலம் இன்கு

பேட்டரில் வைத்திருந்தார்கள். பிறகு நன்றாய் வளர ஆரம்பித்து விட்டான்.....

வீட்டை அடைந்த போது, வாசலில் பிராட்டின் கார் நிற்பதைக் கண்டாள். அவளுக்கு முன்பே வந்து விட்டான்.

"இன்று நீ அசத்தலாய் விளையாடியதை அப்பாவிடம் போய்ச் சொல்லு," என்று ஆண்ட்ருவை அனுப்பிவிட்டுக் காரைப் பூட்டிவிட்டுப் பின்னாலேயே போனாள் பேஜ்.

வாசல்புறம் புல்வெளியில் ஆலிஸனின் சைக்கிள் மல்லாக்கக் கிடந்தது. சமையலறைக்கு வெளியே இருந்த நாற்காலியில் டென்னிஸ் மட்டையும் பந்துகளும் கிடந்தன. உள்ளே ஆலிஸன் யாருடனோ டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தாள்.

பதினைந்து வயதான பெண்ணைப் பார்க்கும் போதெல்லாம் பேஜுக்குப் பெருமையாயும் இருக்கும். சங்கடமாகவும் இருக்கும். ஆலிஸன் நல்ல அழகு. உருவத்தைப் பார்த்தால் வாளிப்பாக வளர்ந்த யுவதி. ஆனால் உள்ளத்தால் சிறுமிதான். எப்போதும் அவளிடம் ஒரு பரபரப்பு. ஏதாவது பேச்சு, ஏதாவது காரியம், அதற்கு லேட்டாகி விட்டது, இதற்கு நேரமாகி விட்டது, இன்னேரம் நான் அங்கே இருந்திருக்க வேண்டும், இங்கே போயிருக்க வேண்டும் - இப்படியே ஓட்டம், ஓட்டம், ஓட்டம்தான். சுறுசுறுப்பான புத்திசாலிப் பெண். நடு நடுவே குழந்தைத்தனமான காரியங்கள் செய்துவிட்டு, அம்மாவிடம் செமர்த்தியாகத் திட்டு வாங்கிக் கொள்வாள். இரண்டு பேரும், காச்சு மூச் சென்று சண்டை போட்டுக் கொள்வது சகஜம். ஆனால் ஆலிஸன் அறிவுள்ள பெண். கொஞ்ச நேரத்தில் மனம் மாறி அம்மாவின் பேச்சுக்குக் கட்டுப்படுவாள். தம்பி ஆண்டியிடம் உயிர். அவளுக்கு எட்டு வயதாயிருந்த போது ஆண்டி பிறந்தான். குழந்தை பிழைக்குமோ பிழைக்காதோ என்று அப்பா அம்மாவைப் போலவே அவளும் தவித்திருந்தாள். ஆஸ்பத்திரியிலிருந்து குழந்தை வீட்டுக்கு வந்ததுமே ஆசையுடன் ஓடி வந்து அதைத் தூக்கிக் கொண்டாள். கீழே விடவேயில்லை. அன்று முழுதும் அதை எடுத்துக் கொண்டு வீடு பூரா சுற்றினாள். பிறகு கூடப் பல நாட்கள் தன் படுக்கையிலேயே தம்பிப் பாப்பாவை வைத்துக் கொண்டிருப்பது அவள் வழக்கமாக இருந்தது. ஆண்டியும் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு நிம்மதியாகத் தூங்குவான். அம்மாவுக்குத் தெரியாமல் சாக்லேட், விளையாட்டுப் பொருள்களை வாங்கி வந்து தம்பிக்குக் கொடுப்பாள் ஆலிஸன்...

வீட்டுக்குள் நுழைந்தாள் பேஜ்.

இரவுச் சாப்பாட்டுக்காக அடுப்பில் ஏதாவது வைத்துவிட்டுக் கணவனின் அறைக்குப் போக வேண்டுமென்று நினைத்தவளாகச் சமையலறைக்குள் அவள் நுழையவும் ஆலிஸன் டெலிபோனை வைத்துவிட்டு அம்மாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்யவும் சரியாயிருந்தது.

"என்னென்ன பண்ணினாய் இன்று?" என்றாள் பேஜ்.

"என் சிநேகிதி க்ளோவும் நானும் டென்னிஸ் ஆடினோம். இன்னும் சில பேர் வந்திருந்தார்கள். டபிள்ஸ் ஆடினோம். அப்புறம் ஸ்விம்மிங்கிற்குப் போய்விட்டு வந்தேன்" என்றாள் ஆலிஸன்.

இப்படியெல்லாம் வசதியான வாழ்க்கை கிடைத்திருப்பதைப் பற்றி ஆலிஸன் பெரிதாக நினைப்பது கிடையாது. சகஜமான விஷயம் மாதிரி பேசுவாள்.

பேஜும் பிராடும் அமெரிக்காவின் வெவ்வேறு பகுதிகளில் பிறந்து, ஓரளவு கஷ்டத்துடன் வளர்ந்து முன்னேறியவர்கள். ஆனால் ஆலிஸனும், ஆண்டியும் பிறக்கும் போதே தங்க மாநிலம் என்று புகழ்பெற்ற கலிபோர்னியாவில் வசதியாகப் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள். சில சமயம் பேஜுக்குப் பொறாமையாகக் கூட இருப்பதுண்டு, குழந்தைகளை எண்ணி!

ஆனால் அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதியான வாழ்க்கை கிடைக்க வேண்டுமென்றுதான் அவள் ஆசைப்பட்டாள். பத்திரமான, சௌகரியமான, ஆரோக்கியமான வாழ்க்கை வாழ வேண்டும்... அவர்கள் மனசுக்கு வருத்தமோ, உடலுக்குத் தீங்கோ ஏற்படாமல் பாதுகாப்புத் தரும் வாழ்க்கை... அதுதான் பேஜ் விரும்பியது.

"ராத்திரி எங்கேயாவது வெளியே போகப் போகிறாயா ஆலி?" என்று மகளைக் கேட்டாள். ஆலிஸன் எங்கும் போவதாக இல்லையென்றால், ஆண்ட்ருவைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, கணவனுடன் கொஞ்சம் வெளியே போய் வரலாமே என்று அவளுக்கு ஆசை.

"ஆமாம்மா. க்ளோவின் வீட்டுக்குப் போகப் போகிறேன். அவள் அப்பா என்னையும் க்ளோவையும் டின்னருக்கு அழைத்துப் போகிறேன் என்றார். சாப்பிட்ட பிறகு சினிமாவுக்குப் போகப் போகிறோம்," என்றாள் ஆலிஸன்.

சற்று ஏமாற்றமாக இருந்தாலும், "சரி" என்றாள் பேஜ்.

"அம்மா, உன் காஷ்மீர் வெல்வெட் ஸ்வெட்டரை இன்று போட்டுக் கொண்டு போகட்டுமா?"

"அந்தக் கறுப்பு ஸ்வெட்டர்தானே? தாராளமாய் எடுத்துக் கொள்," என்றவள், "எத்தனை மணிக்கு நீ புறப்பட வேண்டும்?" என்றாள்.

"ஏழு மணிக்கு வருகிறேன் என்று சொல்லி

யிருக்கிறேன்."

மகளின் கரிய பெரிய கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தான் பேஜ். அந்தக் கண்களில் இன்னதென்று சொல்ல முடியாத ரகசியம் ஒளிந்திருப்பது போல் தோன்றியது. தாயிடம் பகிர்ந்து கொள்ள முடியாத ஏதோ ஓர் எண்ணம்... என்னவோ மர்மம்....

மறு வினாடியே அது மறைந்து விட்டது.

"பதினொரு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிட வேண்டும்," என்றான் பேஜ். வழக்கமான கட்டளைதான் அது.

"அம்மாம்மா... என்னம்மா... நீ... படம் முடிய லேட்டானால்?"

"சரி, பதினொன்றரை. அதற்கு மேல் ஆகுமென்று தோன்றினால் சினிமாவுக்கே போக வேண்டாம். வீட்டுக்கு வந்துவிடு."

"தாங்க்ஸ்மா," என்றாள் ஆலிஸன்.

"காரில் நான் கொண்டு போய் விடட்டுமா?"

"வேண்டாம்மா. க்ளோவி... வீடு பக்கத்தில்தானே? நான் நடந்தே போய்க் கொள்கிறேன்."

தோளின் இருபுறமும் சுருள் சுருளாகக் கூந்தல் பொங்கி வழிய, வெள்ளை ஸ்கர்ட்டும் அதன் மீது இறுக்கமான கறுப்பு ஸ்வெட்டரும் அணிந்து புறப்படத் தயாரானாள் ஆலிஸன்.

மணி ஆறு.

அழகுத் தேவதையாகத் திகழும் பெண்ணையே கண் கொட்டாமல் பார்த்தான் பேஜ்.

அழகான பெண், அழகான பையன், அழகான கணவன், இனிமையான குடும்பம். நினைக்கையிலேயே பேஜின் மனத்தில் ஒரு பரவசம் படர்ந்தது.

ஆனால் ஒரே ஒரு கொடிய இரவில் இந்த ஆனந்தம் அத்தனையும் நாசமாகப் போகிறது என்று அவளுக்கு அப்போது தெரியாது.

(தொடரும்)

புதிய பகுதி

யாரைப் போலப் பிறக்க ஆசை?

மாநில தேர்தல் ஆணையர் கே. மலைச்சாமி



"இப்போது நான் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக மட்டும் பணியாற்றி, நல்ல நிர்வாகி என்று பெயரெடுத்திருப்பது உண்மைதான். ஆனால் மறுபடி பிறந்தால், ஒருமுக மனிதராக அல்லாமல், பன்முகம் கொண்டவராய்ப் பிறக்க விரும்புகிறேன். அந்த விதத்தில் பார்த்தால், எனக்கு இன்ஸ்பிரேஷனாக இருப்பவர் : பத்திரிகையாளர்; இன்டலக்சுவல், நடிகர், அரசியல்வாதி, இலக்கிய ஆர்வலர் என்று பல துறைகளில் சிறந்து விளங்குகிற நண்பர் 'சோ'தான்."

பேட்டி : மௌலி

பேரழகி

பா. ராகவன்

ஒல்லியான கனவான்கள், ஏஸி அறையில் ஒடுங்கிக் கிடந்தார்கள். மாபெரும் சிந்தனைச் சிற்பிகள். பெரியபாளையம் மெயின்ரோடு ஓரத்தில் ஓலைக் குடிசை வேய்ந்து, செக்கிழுத்துக் கொண்டிருந்த செம்மல்களைக் கட்டாய ஓய்வு பெறச் செய்துவிட்டு, எண்ணெய் தயாரிப்பை முழுவதும் இயந்திரமயமாக்கி, மூன்றே மாதத்தில் லட்சங்களில் டேர்ன்-ஓவர் காட்டிய வித்தகர்கள்.

சுகம், சுகம், சுகம். அகம் குளிர சுகம் சமையல் எண்ணெய். கொள்ளு இல்லை. கொலஸ்ட்ரால் இல்லை. கூடுதல் விலை இல்லை. கசப்பில்லை. பிசுக்கில்லை. கண்கவர் பேக்கிலே. கன்னியர் கையிலே.

வைரமுத்துக்களும் வாலிகளும் வேறு குடித்தனம் பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதான். அறுபத்து மூன்று வயதுக் கிழவர், ஒற்றை ஸ்ரீசூர்ணமும் மங்களவிலாஸ் ஸ்பெஷல் பன்னீர்ப் புகையிலையுமாக விளம்பர வரிகளை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார்.

"ஓய் அனந்தாச்சாரி, பின்னிட்டீரய்யா! சரஸ்வதி கடாட்சம் உமக்குப் பரிபூரணமா இருக்கு. எங்கேயோ போக வேண்டியவர்... உம்... சொல்லுப்பா, கிருஷ்ணா, கிருஷ்ணபரமாத்மா! யாரைப் போட்டு ஷூட் பண்ணப் போறே? இந்த தபு, மனிஷா கொய்ராலா, உமா மகேசுவரி, உள்ளூர் உருப்படிகள் எதுவும் வேணாம். டீவியிலே நம்ம மகாஜனங்கள் பார்க்காத மூஞ்சி வேணும். ஃப்ரெஷ்ஷா... கார்த்தால பூத்த ரோஜாப்பூ மாதிரி. பளீர்னு மின்னலாட்டம் சிரிக்கணும். மூஞ்சிதான் மூலதனம்..."

"எண்ணெய் வழியாத மூஞ்சி..."

யாரோ உரக்கச் சிரித்தார்கள்.

நான், என் ஹர்ஷத்மேத்தா சூட்கேஸைத் திறந்தேன். முகங்கள், மூக்குகள், கண்கள், இடுப்புகள், முழங்கால்கள், முதுகுகள் எல்லாம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பத்துக்கு எட்டு அளவில் படுத்துக் கிடந்ததை அள்ளி, மேசையில் போட்டேன்.

"பாருங்கள் மிஸ்டர் ஆனந்த தீர்த்தன்... அத்தனையும் பதினெட்டிலிருந்து இருபத்தி மூன்று வயசுக்குள்ளான இளம்பெண்கள். மாடலிங்கில் மையல் கொண்ட ஸ்டெல்லா, குயின், செல்லம்மாக்கள். இது புதுதில்லி. இவள் கோவாக்காரி. கண்களைப் பாருங்கள். குளம் மாதிரி, ஒரு டைவ் அடித்து நீந்தி வரலாம் போல இல்லை? அப்புறம் இந்த..."

எண்ணெய்க் கம்பெனி முதலாளிகள் எப்போது மூட்அவுட் ஆவார்கள் என்று சொல்ல முடியாது போலும்.... வீட்டில் பெண்டாட்டியுடன் என்ன ரகளையோ.

"ஹரே கிருஷ்ணா, நான் சொன்னது காலையில் பூத்த ரோஜா போல் ஒரு முகம்... நீ காட்டுகிறவையெல்லாம் செக்கில் இட்டு ஆட்டுவதற்குத்தான் லாயக்கு."


நூற்றுப் பதினோரு படங்கள். பட்டாம் பூச்சிகள். ஒரு ரவுண்ட் பார்த்து விட்டால் ஒரு வாரம் பசிக்காது. ரசனைகெட்ட எண்ணெய்க்காரா, என்று பல்லுக்குள் சபித்தேன். படங்களை பத்திரப்படுத்திப் பூட்டி, வருகிறேன் என்று கிளம்பினேன்.

"இதோ பார், உனக்குப் பத்து நாள் அவகாசம். ஏப்ரல் ஐந்தாம் தேதி தொடங்கி, மூன்று நாட்களில் ஷூட்டிங் முடித்தாக வேண்டும். தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் சன், ஸ்டார், தூர்தர்ஷனிலெல்லாம் விளம்பரம் அரைமணிக்கொருதரம் போடுகிற பிளான் இருக்கிறது. அப்புறம் பரிசுத் திட்டம், மண்ணாங்கட்டி, தெருப்புழுதி. நீ என்ன செய்வாயோ தெரியாது. பத்தே நாட்கள். சொன்னேனல்லவா..."

"ஓயெஸ். காலையில் பூத்த ரோஜாப்பூ."

மகான்களெல்லாரும் பேசிக் களைத்த அலுப்புத் தீர, கார திரவங்களைக் கையில் ஏந்திக் கொள்ள, நான் வெளியே வந்து, பெட்டிக் கடை தேடி, "ஒரு காளிமார்க் எடுப்பா" என்றேன்.

வாழ்க்கை, வாய்ப்புக்களால்



ஆனது. எப்போதும் ஒளிந்து கொண்டு, 'என்னைக் கண்டுபிடி பார்க்கலாம்' என்று ஆட்டம் காட்டுகிற வாய்ப்புக்கள். ஆறு வருடங்கள். விளம்பர உலகில் பட்டொளி வீசிப் பறக்கிற டைரக்டர் ராஜீவ் சோலங்கி யிடம் பயின்று விட்டு, தனியாக இயங்க வந்த போது, எட்டு மாச அலைச்சலுக்குப் பின் கிடைத்தது இந்த சுகம் சமையல் எண்ணெய். கசப்பில்லை. பிசுக்கில்லை. கண்கவர் பேக்கிலே. கன்னியர் கையிலே.

எந்தக் கன்னி மாட்டப் போகிறாள்? காட்டிய கன்னியர் எவரும் என் ணெய்க் கம்பெனி எஜமானனுக் குப் பிடிக்கவில்லை. ஆபீஸுக்குப் போய்ச் சேர்ந்ததும் அவருக்கே போன் செய்து கேட்டேன். "பணத் தைப் பார்க்காதே. இந்த வருஷத்து மிஸ் யூனிவர்ஸ் கிடைத்தாலும் சரி..."

உலக அழகிகள் சமையல் எண்ணெயுடன் உறவாடு வதுண்டோ? "நான் எப்பவும் சுகம் சமையல் எண்ணெயில் தான் உருளைக்கிழங்கு வறு வல் செய்வேன். என் கிரேக்க நாட்டு மக்கள் எல்லாருமே அப்படித்தான்..."

அன்றைய தினக் கனவில், கறுப்பழகி ஸ்கெலீவா வந்து கண் சிமிட்டி விட்டுப் போனாள்.

உலகே மாயம் என்று நான் அவள் மேனியில் அணு அணுவாகக் கேமராவை நகர்த்திக் கொண்டிருக்க, கட் டாயமாகக் கனவைப் பிடுங்கி எறிகிறவாறு டெலிபோன் அடித் தது.

"அல்லோவ், கிருஷ்ணா? நான்தான், ஆனந்ததீர்த்தன். தூங்கி வழியாதேய்யா. எழுந்து, ஓடிப் போய் கிணத்துல குதிச்சுட்டு, மீண்டு வா. பக்கத்துல டீவி இருக்கா? சட்டுனு ஆன் பண்ணு. ஈயெஸ்பியென்னுக் குப் போ. ஓடு. போட்டியா? என்ன



''மார்ச் மாத க்ளியரன்ஸ் சேல்ஸ்'னு அறிவிப்பு செஞ்சும் கொஞ்சம் கூட விற்பனையே ஆகலையா? என்ன பிஸினஸ் பண்ணறீங்க, நீங்க?''

''ஓட்டல் வைச்சிருக்கேன்!''

– வெ. ராஜாராமன்

தெரியறது!''

சுயயோசனையே இல்லாமல், கீ கொடுத்தாற்போல அவர் சொன்னதைச் செய்தபோது, வெஸ்ட் இண்டீஸ், நூற்று நாற்பதுக்கு மூன்று விக்கெட். சிவநாராயண சந்திரபாலன், அபயகுருவில்லாவை அநியாயத்துக்குத் தண்டித்துக் கொண்டிருந்தான்.

''இவனை அவுட் பண்ணவே முடியாது சார். ரொம்ப அழுகுணி. மூணு ஸ்டம்பையும் முழுசா மறைச்சிட்டு ஆடறான்!'' என்றேன் கொட்டாவி விட்டபடி.

''மடையா, அவன் எக்கேடு கெடட்டும். பெவிலியன் காலரி பக்கம் கேமரா போகும். பொறுத்திருந்து பார்!'' என்றார்.

எனக்கு எதுவும் புரியவில்லை. இப்படியெல்லாம் நடுராத்திரி கண்விழித்து, கிரிக்கெட் பார்க்கிற வழக்கம் எங்கள் வம்சத்திலேயே கிடையாது... சுகம் சமையல் எண்ணெய்க்காரன் ரொம்பத்தான் வாட்டுகிறான்...

காதில் போனும் டீவியில் கண்ணுமாகக் காத்திருந்தேன்.

ஓவர் முடிந்து, மைதானத்துக்குள் குளிர்பான வண்டி ஊர்ந்து வர, கேமராவை நோக்கர்களிடம் கொண்டு போனார்கள்.

இந்தியன் இங்கில் குளித்தெழுந்த மேற்கிந்தியர்கள். உருட்டை முகமும் சுருட்டை முடியும். வரிசை வரிசையாக வீற்றிருந்து, காகிதக் கோப்பைகளில் சாயாவோ, சாராயமோ பருகியபடி அவ்வப்போது கேமராவுக்குக் கையாட்டிக்கொண்டிருந்தார்கள்.

''பார், பார்'' என்று அலறினார் ஆனந்ததீர்த்தன்.

''என்னது? என்னது?'' என்று நான் பேய் விழி விழிக்க,

''மடையா, அதோ பார்! அந்த பல்ப் விளம்பரத்துக்கு நேர் பின்னால் நாலாவது வரிசை, வலதுகோடியில்...''

தோராயமாக அவர் சொன்ன இடத்தைக் கண்டுபிடித்துப் பார்க்க,

''பார்த்துட்டியா? அந்தப் பொண்ணு எப்படி?'' என்றார் ஆர்வம் தாங்கமாட்டாதவராக.

''எதுக்கு சார் கேட்கறீங்க?''

''சரிதான். கல்யாணம் பண்ணி, குடும்பம் நடத்த! அறிவிலியே! அவள்தான் நம் மாடல்! இனி நீயாச்சு, அவளாச்சு. ஏதாவது செய். எப்படியாவது பிடி. வெஸ்ட் இண்டீஸ் போகணுமென்றால் டிக்கெட் வாங்கச் சொல்கிறேன். முடி.. முடித்து விடு!''

ஆனந்ததீர்த்தன் பட்டென்று போனை வைத்து விட்டார். இந்த ஆள் ஒரு அரை லூஸ் என்கிற முடிவுக்கு வந்தேன்.

சுகம் சமையல் எண்ணெய் பாக்கெட்டைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்க ஒரு பெண் வேண்டும். கொஞ்சம் போல் சிரித்து, தலையைச் சாய்த்துச் சாய்த்து அனந்தாச்சாரியின் அபார வசனங்களை அரை விநாடி பேசி, க்ளோசப்பில் இரண்டுதரம் கண் சிமிட்டினால் போதும்.


இதற்கு, பார்படாஸில் நடக்கிற கிரிக்கெட் மாட்சைப் பார்க்க வந்திருக்கிற யாரோ ஒரு கறுப்பழகியைப் போய்க் கூட்டிவா என்கிறான் கிழவன்.

யார் அவள்? ஆனந்ததீர்த்தன் சொன்னாரே என்பதற்காக மீண்டும் அவள் தெரிகிறாளா என்று கொட்டாவி விட்டபடி பார்க்க ஆரம்பித்தேன்.

என் அதிர்ஷ்டம், மீண்டும் கேமரா பெவிலியனுக்குப் போய், மெள்ள நகர்ந்து, மொட்டைத் தலை, குள்ளப் பிசாசு, டான்ஸ் ஆடும் குண்டன், வாயில் கைவிட்டு நுளப்பும் கறுப்புப் பாப்பா, தூங்கும் தடியன்... இதோ, இதோ அவள்! அட, க்ளோஸப் போகிறான்...

இப்போது தெளிவாகப் பார்க்க முடிந்தது. கறுப்புதான். ஆனால் மேனியில் ஒரு பொன்னிற கோட்டிங் இருந்தது. கால் மேல் கால் போட்டுச் சாய்ந்திருந்த லாகவத்தில் இலேசான ஓவியத்தன்மை தெரிந்தது. பக்கத்திலிருந்த வயசாளியிடம் திரும்பி எதற்கோ பளீரென்று சிரித்தபோது எனக்கு கரீலென்றது! சே! என்னமாயிருக்கிறாள்! ஆனந்ததீர்த்தன் லேசுப்பட்ட ஆளில்லை என்று தோன்றியது. எண்ணெய் வியாபாரம் தாண்டி, கிழவனுக்கு

பொன்னைப் போல் கோதுமை
உங்கள் பொன்னான வாழ்வுக்கு !



வாங்கத் தூண்டும் விலை

ஒரு கிலோ
மைதா - ரூ.6.50

ஒரு கிலோ
ரவை - ரூ.6.60

ஒரு கிலோ
ஆட்டா மாவு - ரூ.5.50

- எவ்வயதினருக்கும் எந்தப் பருவத்திற்கும் ஏற்றவை கோதுமைப் பண்டங்கள் மற்றும் கோதுமைப் பொருட்களான மைதா, ரவை ஆட்டா மாவு ஆகியவை:



***கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களை அரசு பொது விநியோக அங்காடிகளில் குறைந்த விலைக்கு வாங்கலாம். விரும்பும் உணவு வகை செய்யலாம்.**

தமிழ் நாடு அரசு
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

TNWPP

தமிழ்நாடு கோதுமை உருளை மாவு ஆலைகள் சங்கம்
129 அ பிரிவு முதல் மாடி, சிவாலாயா கட்டிடம்
119, எத்திராஜ் சாலை, சென்னை - 105.
தொலைபேசி: 8265295, 8225248, 8225236.
தொலை நகல் (FAX): 8234569

அன்றாடம் கோதுமை உண்ணுங்கள்; ஆரோக்கிய வாழ்வை உறுதி செய்யுங்கள்

ஒரு ரசனை இருக்கிறது.

அப்போதுதான் கமென்ட்ரியிலும் சற்று கவனம் செலுத்தினேன். கரகரத்த குரலில் இளைவ் லாயிடோ, மைக்கேல் ஹோல்டிங்கோ கேமரா நகர மறுத்த அந்தப் பெண்ணைப் பற்றி அவசரமாகத் தகவல் சேகரித்து விவரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"மிஸ் ஒட்டாவியா தாம்ஸன்... கரீபியன் களின் கனவுக் கன்னி... ரைடர் சைக்கிள், இரவுப் பருந்து பியர், முரட்டுக் காட்டெருமை ஜீன்ஸ் பேன்ட் விளம்பரங்களில் பார்த் திருப்பீர்கள்... மிஸ் ஒட்டாவியாவின் கிரிக் கெட் காதல் அலாதியானது...."

'ஹுர்ரே' என்று துள்ளிக் குதித்தேன்.

மறுநாள் ஆனந்ததீர்த்தனிடம் விவரம் சொல்லப் போனபோது, "நானும் கமென்ட்ரி கேட்டேன். யோசிச்சுப் பார்! விஷயம் ரொம்ப சுலபமா முடியறது. அவ ஒரு தொழில் முறை மாடல். வெளிதேசத்துக்காரின்னாலும் புடைவை கட்டி ஒரு சவுரி முடி விக் வெச் சால் எப்படி இருப்பான்னு யோசிச்சுப் பார்! பிரமாதம்! ரொம்ப ஹோம்லியா அமைஞ் சுடும். அந்த சிரிப்பு ஒண்ணு சிரிச்சாளே, டெரிஃபிக்! இந்த வயசுல நானே சொக்கிட் டேன்னா பார்த்துக்கோ..."

ஆனந்ததீர்த்தன், ஐஸ் கட்டியாக உருகிக் கொண்டிருந்தார்.

"ஆனால் சார், அவளை எப்படி..."

"பொறு. நான் ஒரு விலாசம் தரேன். தி.நகர் வாடிவால் தெருவுல வேலவன்னு ஒரு ஆசாமி இருக்கார். பாங்க் உத்தியோகத்தை பார்ட் டைமா வெச்சுண்டு, கதை, கவிதை, கம்ப் யூட்டர்னு பல ஜோலி பண்ணிட்டிருக்கார். இன்டர்நெட்டுல சொந்தமா ஒரு வீடு கட்டி, ராத்திரி வேளையிலே பில் கிளின்டன், பிமல்ராய் சவுத்ரி இவங்களோடவெல்லாம் பேசி வாரப் பத்திரிகையிலே வியாசம் எழுதிட்டிருக்கார். அந்த ஆளைப் புடி. இந்தியாவுல வெஸ்ட் இண்டீஸ் எம்பஸி ஏதாவது இருக்கான்னு கேட்டு, அவங்க மூலமா அந்தப் பொண்ணுக்கு இன்டர்நெட் விலாசம் உண்டான்னு விசாரிச்சி, தகவல் அனுப்பி..."

ஆனந்ததீர்த்தன் டிரம்ஸ் வாசித்துக் கொண்டே போனார்.

இரண்டே நாளில் குரங்கு வேலை செய்து, எப்படியோ அந்த ஒட்டாவியாவை இன்டர்நெட்டில் பிடித்து விட்டேன்.

"மிகவும் சந்தோஷம். பாரம்பரியம்மிக்க, கலாசாரப் பெருமைகொண்ட இந்திய தேசத்து விளம்பரப் படம் ஒன்றில் நான் நடிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று அரசியலில் கொட்டை போட்ட நல் லெண்ணத் தூதுவர் போலத் தம் சம்மதத்தை மின் அஞ்சலில் அனுப்பிவிட்டு, அடுத்த ஃப்ளைட்டில் மீனம்பாக்கம் வந்து சேர்ந்தாள்.

முதல் முதலில் அவளை நேரில் பார்த்த போது எனக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு, கிறுகிறுவென்றானது. இப்படியொரு அழகா என்று ஏர்போர்ட் செக்யூரிட்டியெல் லாம் பொறாமைப்பட, அவள் 'ஹலோ' என்று என் கையைப் பற்றிக் குலுக்கினாள். பூந்தென் றல், செம்பூவே, மின்மினியே, கண்மணியே என்று பல சினிமாப்பாட்டு வார்த்தைகள் மனத்தில் ஏக காலத்தில் டிராஃபிக் ஜாம் ஆக, வாழ்க்கையில் முக்கியமானதொரு முடிவை அப்போது எடுத்தேன்.

ஆனந்ததீர்த்தன், அவளுக்கு டிரைடென்ட் டில் ரூம் போட்டு இருந்தாலும் நான் அதைப் புறக்கணித்துவிட்டு, அவளை என் குடிசைக் குக் கூட்டிப் போனேன்.

"மிஸ் ஒட்டாவியா, இது இந்த ஏழை யின் எளிய வாசஸ்தலம்."

"ஓ, நைஸ்" என்று சுவரில் மாட்டியிருந்த ராமர் பட்டாபிஷேகப் படத்து ஆஞ்சநேய ரைத் தொட்டுப் பார்த்தாள்.

"நான் நினைக்கிறேன், டார்வின் தத்து வப்படியே மனிதன் தோன்றியது உண்மை யாயிருந்தாலும் அவன் முதலில் மேற்கிந்தியத் தீவுகளில்தான் தோன்றியிருக்க வேண்டும்."

"நம்ம தலைவர் ஜெயிலுக்குள் இருந்துட்டு வந்ததும் புத்தகம் எழுதறா ராமே? தலைப்பு என்னவாம்?"

'முன் ஜாமீனுக்கு முந்நூறு வழிகள்."

– பொள்ளாச்சி கே. சித்ரா



"நோ!" என்று செல்லமாக முறைத்தவள், ''அங்கெல்லாம் வந்தேறியவர்கள்தான் அதிகம்" என்றாள்.

"நீங்கள்?"

''நானும்தான். என் அப்பா ஓர் அமெரிக்கர். அம்மாவும் அமெரிக்கப் பெண் தான் என்றாலும் அவளது மூதாதையர்கள் இந்தியர்கள்" என்றாள்.

"அதானே பார்த்தேன். இல்லாவிட்டால் இத்தனை அழகு வேறெப்படி சாத்தியம்?"

அவள் தன் பிரசித்திபெற்ற புன்னகையை எனக்காகக் கொஞ்சம் அவிழ்த்துத் தந்தாள். சிந்தாமல் எடுத்து வைத்துக் கொண்டேன்.

பிறகு என்னைப்பற்றி, எடுக்கப் போகிற விளம்பரப் படம் பற்றி, ரேட் பற்றியெல்லாம் விலாவாரியாகக் கேட்டுக் கொண்டாள்.

"எப்போ ஷூட்டிங்?"

"ஏவிஎம்மில் செட் போடச் சொல்லியாகி விட்டது. இன்னும் நாலே நாளில்..."

''எனக்கு இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவேணுமே?"

"அதற்கு ஆனந்ததீர்த்தன் மனசு வைக்க வேண்டும். என்னாலானது, சென்னையைச் சுற்றிக் காட்டுகிறேன்" என்றேன்.

மறுநாள் மாலைதான் ஆனந்ததீர்த்தன் அவளைச் சந்திப்பதாக ஏற்பாடு. திருக் காட்டுப்பள்ளியில் யாரோ அவரது ஒன்று விட்ட மாமனார் மண்டையைப் போட்டு விட்டதாகச் சொல்லிக் கிளம்பிப் போனது எனக்கு ரொம்ப வசதியாகப் போய் விட்டது.

நான், ஒட்டாவியாவைக் கூட்டிக் கொண்டு எம்.ஜி.ஆர். சமாதி, வள்ளுவர் கோட்டம், அஷ்டலட்சுமி கோவில், உயிர் காலேஜ், செத்த காலேஜ், உதயம் தியேட்டரில் மின்சாரக் கனவு, சவுக்கார்பேட்டை வளையல் கடைகள், ஜெயலலிதா வீடு என்று சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் வாடகை டாக்ஸியில் சுற்றினேன்.

வாழ்க்கையில் அதுபோன்ற ஒரு தருணம் எனக்குக் கிடைத்ததில்லை. பார்க்கிறவர் களெல்லாம் திரும்பிப் பார்க்கிறபடியான ஒரு பேரழகியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நாளெல்லாம் ஊர் சுற்றுகிற வாய்ப்புக்குப் போன ஜென்மத்தில் பெரிசாக ஏதாவது புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்திருப்பேனோ, என்னவோ?

ஒட்டாவியா, ஒரு குழந்தை மாதிரி இருந்தாள். குச்சி ஐஸ், மட்டக் குதிரை சவாரி, புளித்தண்ணீர் நிறைய சேர்த்துப் பானிபூரி என்று சின்னச் சின்னதாகவே நிறைய ஆசைப்பட்டாள். கில்ரன்ஸ் பார்க் போன போது, ராட்டினம் ஏறிச் சுற்றினாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.



''குருவே, ஒரு ஆறுமாதத்துக்கு நான் குருவாகவும் நீங்க சீடராகவும் இருந்தால் எப்படி இருக்கும்?''

''வாயை மூடு! இது என்ன ஆஸ்ரமமா? உத்திரப்பிரதேச சட்டமன்றமா?''

– உ. ராஜாஜி

"**கி**ருஷ், உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று கேட்டாள் திடீரென்று.

''என் வீட்டில் பார்த்திருப்பாயே? காலண்டர் பெண்ணைத் தவிர வேறு பெண் வாசனையே கிடையாது!"

"அப்பா, அம்மா?"

"திருவானைக்கோயில் ஸ்ரீனிவாசா நகர் எக்ஸ்டென்ஷனில் ஒரு சிறிய வீட்டில் இருக்கிறார்கள்.' அப்பா, பி.எச்.ஈ.எல்லிலிருந்து ரிடையர் ஆனவர். அது சரி. நீ?"

''ப்ச். எனக்கு இந்த மாடலிங்கே பிடிக்கவில்லை. கல்யாணம் பண்ணிக் கொண்டு, சமைத்துப் போட்டு, துணி துவைத்து... ஆனால்..."

''மைகாட்! சந்தேகமேயில்லை. உன் அம்மாவின் மூதாதையர்கள் இந்தியர்களாகத் தான் இருக்க வேண்டும். ஒருவேளை தமிழர்களாகவும் இருக்கலாம். நான் ஒன்று கேட்டால், பேராசை என்று நினைக்க மாட்டாயே?"

"மாட்டேன், கேள்."

நான் கேட்டதும் அவள் சொன்னதும் பின்னால் உடனே உடனே, ஒரே வாரத்தில் நடந்தேறிய சம்பவங்களும் – வேண்டாம். சொன்னால் நீங்கள் நிச்சயம் நம்பப் போவதில்லை. இரண்டே விஷயங்களை மட்டும் சொல்லி விடுகிறேன்.

1. சுகம் சமையல் எண்ணெய் விளம்பரத் தில் ஒட்டாவியா நடிக்கவில்லை.

2. ஆனந்ததீர்த்தன், என்னை ஆள் வைத்து அடிக்கத் தேடிக் கொண்டிருக்கிறார்.

ப்யூட்டிஃபுல் பாட்டி!



நாலைந்து வயது குறைவாகக் காட்டிக் கொள்வதே பெண்களுக்குப் பெரும்பாடு. அப்படியிருக்கையில் 71 வயதில் 58ன் இளமையுடன் காட்சி அளிப்பதென்பது - அதுவும் மேக்கப்பில்லாமல், - வாவ்!

இந்தக் கலையில் அபூர்வமாகத் தேர்ச்சி பெற்றிருக்கிறார் கமலா சேத்தி!

'டபுள் டயமண்ட் சாய்' குடித்து, 'மில்க்கா பிரட்'டை சாப்பிட்டு, 'பஜாஜ் ஆட்டோ'வில் வந்து, 'அஜந்தா குவார்ட்ஸில்' ஆர்க்கெஸ்ட்ராவை நடத்தி, 'குபேர'த்தனமாய் வாழச் சொல்ல 'கலோனியல் கஸின்'னுடன் இணைந்து, இருப்பனை வேகமாக வந்து உலகைக் காக்க அழைக்கிறாரே... அந்த விளம்பர மாடலழகிப் பாட்டிதான்!

பஞ்சாபிகளுக்கேயுரிய 'க்ளாமர்' எதுவுமில்லாமல் படுசிம்பிளாக, புன்னகை ஒன்றையே ஆபரணமாகக் கொண்டு அன்புடன் வரவேற்கும் கமலாஜியைக் கண்டால், நம் சொந்தப் பாட்டியைக் காணும் வாஞ்சை ஏற்படுகிறது!.

அகத்தின் அழகு முகத்தில் என்பதைத்தான் கமலாஜியும் வற்புறுத்துகிறார். "அழகு என்பது உடலிலா இருக்கிறது? உள்ளத்தில் அல்லவா மலர்கிறது? உயர்ந்த சிந்தனைகள், இனிமையான சொற்களாய் வடிவெடுத்து, சிறிய செயல்களாய் உருமாறும்போது, அங்கே அழகு மிளிர்கிறது. ஆனால், எண்ணத்தால் உயர, தக்க சூழல் அமைய வேண்டும்!

"என் இளமைப் பருவம், இந்திய சுதந்தரப் போராட்ட சூழலில் அமைந்ததால், நாட்டுப் பற்று, தியாகம், நகை, நட்டு- ஆடை ஆபரணங்களில் பற்றின்மை, மனிதநேயம் முதலிய பண்புகள் வேரூன்ற வித்திட்டன. அப்பா கிருஷ்ண காந்த் கோஹ்லி விடுதலைப் போராட்ட வீரராததால், காந்தி, நேரு, நேதாஜி, படேல் போன்ற தலைவர்களின் அண்மை அபரிமிதமாகக் கிடைத்தது. பெரிய தலைவர்கள் எல்லாம் கையெழுத்திட்டிருக்கும் 'ஆட்டோகிராஃப்' புத்தகம் ஒன்று தான் என் பெரிய பொக்கிஷம். என் பேரக் குழந்தைகள் பார்த்து அதிசயிக்கும்!'' எனப் பழைய நினைவுகளில் மலர்ந்தார்.

"என் அம்மாதான் எனக்கு ரோல் மாடல்'' என்றார், கமலா.

"என் அம்மா பேரழகி! ஆனால் மிகவும் எளிமையானவள். உயர்ந்த லட்சியங்கள் கொண்டவள்"

இருவருக்குமிடையே 16 ஆண்டுகள்தான் வித்தியாசம் என்பதால் தோழியராகவே பழகினராம். இவரது தாய் திருமதி கமலா நேரு, கமலா தேவி சட்டோபாத்யாயா போன்றோரின் விசிறி என்பதால், தம் குழந்தைகள் ஆறு பேரில் மூத்தவரான இவருக்கு 'கமலா' என்றே பெயரிட்டிருக்கிறார்.

பத்திரிகையாளரான மாமாவின் தயவில், இவர் டில்லியில் முதன்

முதலாகப் பார்த்தது பாலசரஸ்வதியின் பரதநாட்டியத்தை! அது ஏற்படுத்திய பாதிப்பால், கதக், மணிப்பூரி என நடனக் கலைகளைப் பயின்றிருக்கிறார்.

"என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் 25 வயது வித்தியாசம்" எனச் சிரிப்பவர், "ஆனால் நான் வேத் சேத்தியை மணந்து கொண்டது என்து 27வது வயதில்தான்" என்கிறார். இவரது குடும்பமும் தேசிய ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டுதான். ஒரே பிள்ளை, மணந்து கொண்டது ஒரு மராத்தியப் பெண்ணை. ஒரே பெண் தேர்வு செய்தது ஒரு கேரள மாப்பிள்ளையை!

குழந்தைகளுக்குச் சிறகு முளைத்தபின் இவருக்கு நிறைய சமயமிருந்திருக்கிறது! மும்பை சயானில் உள்ள உடல் ஊன முற்றவர்களுக்கான பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கோரேகான் முதியோர் இல்லத்தில் பணி செய்திருக்கிறார். டி.பி.யினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் விளையாடுவது, கதை சொல்வது, லெட்டர் எழுதுவது போன்ற சேவையில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் வயதாக ஆக, தினமும் அலைவது கடினமாயிருந்திருக்கிறது!

"தீ மிதிச்சதுக்காகக் கோபப்பட்டு தலைவர் என்னை மந்திரி பதவியவிட்டு நீக்கிட்டார்!"
"ஐயய்யோ!... அப்புறம்?"
"திரும்பவும் பதவியை வாங்க 'காவடி' எடுக்க வேண்டியதாப் போச்சு!"
— செல்வன்



உறவினர் ஒருவரின் பார்ட்டியில் ரஜினி பெஹல் எனும் 'ஃபாஷன் ஷோ' நடத்தும் பெண்மணியைச் சந்தித்திருக்கிறார். அவர் பேச்சுவாக்கில் 'மாடல்கள்' அலட்டும் அலட்டலைப் பற்றி நொந்து கொள்ள, கமலா மெதுவாக "என்னை மாடலாக எடுத்துக் கொள்வீர்களா" என்று கேட்க, அவர் ஆச்சர்யப்பட்டுப் போய்விட்டாராம்!

"இந்த வயதில் யாரும் மாடலிங் செய்ய முன் வந்ததில்லை; இருந்தாலும் முயன்று பார்க்கிறேன்" என இவரது ஃபோட்டோக்களைப் பெற்றுச் சென்றிருக்கிறார். அதேசமயம், பஜாஜ் ஸ்கூட்டர் விளம்பரத்திற்கு ஒரு பாட்டி தேவைப்பட, 'கமலா'வுக்கு அந்த சான்ஸ் கிடைத்தது. அரைமணி நேரத்தில் ஷூட்டிங்கும் முடிந்து விட்டது! அதன்பிறகு கடந்த ஐந்து வருட காலமாக கமலா 'பிஸி'தான்!

எல்லோரும் ரிடையராகும் வயதில் இவர் சம்பாதிக்க ஆரம்பித்திருக்கும் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க, ஷூட்டிங்கின்போது நிறைய இளைகளின் மனம் கவர்ந்த சிநேகிதியாய் இருப்பது இவரை ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது!

"பெற்றோரிடம் வெளியிடத் தயங்கும் விஷயங்களை என்னிடம் தயக்கமின்றிக் கூறி, அறிவுரையும் கேட்பார்கள். இளைய தலைமுறையின் அண்மை மனத்தை இளமைப்படுத்துகிறது" என்கிறார்.

அஜந்தா குவார்ட்ஸ் விளம்பரத்துக்குப் பிறகு இவரது மவுசு கூடியிருக்கிறது! (ஸ்க்ரீன் டெஸ்ட் செய்யப்பட்ட ஐம்பது பாட்டிகளில் இவர் மட்டும்தான் பாஸ்!) 'உங்களுக்கு வயலின் தெரியுமா? கிட்டார் வாசிப்பீர்களா என்றெல்லாம் கேட்கிறார்கள்! எனக்கு இசையை அனுபவிக்க மட்டுமே தெரியும்' என்பவர், அகமதாபாத்திலுள்ள பெண் வீட்டிற்குச் சென்றபோது எக்கச்சக்கமாக கூட்டம் கூடிவிட்டதை வெட்கத்துடன் விவரிக்கிறார்.

"இந்த விளம்பரத்தைப் பார்த்தால்தான் என் குழந்தை சாப்பிடுகிறான்" என்று ஒரு தாய் கூறியதை நம்பமுடியாமல் சிரிக்கிறார். இந்த விளம்பரத்துக்காகப் பரிசு பெற்ற காமெரா கலைஞர், இவருக்கு மறக்காமல், 'பொக்கே' அனுப்பியதில் ஆனந்திக்கிறார்.

"ஆண்டவன் என் விஷயத்தில் மிகவும் கருணை மிக்கவனாய் இருந்திருக்கிறான். நல்ல பெற்றோர், என் முயற்சிகளுக்குத் தடை சொல்லாத புகுந்த வீட்டார், ஆதரவான கணவன், அனுசரணையான குழந்தைகள் என்று வளமான சூழலைத் தந்திருக்கிறான்..." என்றார் நன்றிப் பெருக்குடன்.

வருங்கால பாட்டி மாடல்களுக்கு இவர் கொடுக்கும் அட்வைஸ் - "தோழியரே! முதுமை என்பது இலையுதிர் காலமல்ல! அது தளை உதிர்காலம்".

— ஜெயஸ்ரீ ராஜ்

பகுதி – 2

1



முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

குறையொன்றுமில்லை

விச்வம் என்கிற பதத்துக்கு அர்த்தம் சொல்லவே ஒரு வருஷம் போல ஆகிவிட்டது..! விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே அடுத்த நாமா விஷ்ணு: இதைச் சொல்ல மேலும் ஒரு வருஷம் ஆகுமா என்று கேட்டால், ஆகும்! அப்படியே சொல்லிக் கொண்டு போனால் மொத்த சஹஸ்ரநாமமும் முடிய 999 வருஷம் ஆகாதோ!

'உன் திருவடியைச் சேரும் நாள் வராதா? வைகுண்டத்துக்கு நான் போக வேண்டாமா..? இந்த சம்சாரத்திலேயே எத்தனை நாள் உழல்வது..' என்றெல்லாம் கேட்டுவிட்டு, இப்போது 999 வருஷம் இந்த உலகத்திலேயே இருந்து கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால் முரணாக இல்லையோ!

நாம் வேறான காரியத்தை - பகவத் விஷயத்தைத் தவிர வேறான காரியத்தைச் செய்து கொண்டிருந்தால் புறப்பட்டுப் போய்விடத்தான் வேண்டும்; போய்விடத்தான் தோன்றும். ஆனால், சஹஸ்ரநாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால் இங்கேயே இருக்கலாம்.

உரைக்கவல்லாருக்கும் நினைக்கவல்லாருக்கும் வைகுண்டம் ஆகும் தம்மூரெல்லாம்!

நரகத்திலேயே உட்கார்ந்து ஒருவர் பகவானை நினைக்கிறார்... அந்த நரகமே வைகுண்டமாகுமே!

சுவாமி தேசிகன் என்ன சொல்கிறார் பாருங்கள் :

''வைகுண்டத்திலே இருக்கக்கூடிய ஆனந்தம், உன் பெருமையைச் சொல்லிக் கேட்கும் ஆனந்தத்தைக் காட்டிலும் மேலாகுமோ...?'' என்று கேட்கிறார்.

இன்னொரு ஆழ்வார் - தொண்டரடிப் பொடியாழ்வார் சொல்கிறார் :

'அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்..'

இப்படி உன் நாமத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிற ஆனந்தம் இருக்கிறதே.. இந்த ரசம்... அதற்கு ஈடு உண்டோ! இந்திர பதவி கொடுத்து ஐராவதத்தின் மேல் ஊர்வலம் வரச்சொன்னால் கூட எனக்கு அது வேண்டாம்!

அதனால்தான் ஆண்டாளும் 'வையத்து வாழ்வீர்காள்!' என்று தோழிகளை அழைக்கிறாள். 'வையத்தில் வாழக் கொடுத்து வைத்தவர்களே!' என்று பொருள்.

ஆகவே, பகவான் நாமாவைச் சொல்லிக் கொண்டிருந்தோமானால், அனுபவித்துக் கொண்டிருந்தோமானால், எத்தனை காலம் வேண்டுமானாலும் பூமியில் இருக்கலாம்.

மகான்கள் எல்லோருமே புறப்பட்டுப் போய்விட்டால் உலகம் திருந்துவது எப்படி..? ஒருசிலர் நீடூழி வாழ்ந்து பகவான் நாமாவைச் சொல்வதைப் பார்த்துத்தான் பின்னால் சந்ததிகள் 'நாமும் இதைப் போல் சொல்ல வேண்டும்' என்று அறிவார்கள்.

இதையெல்லாம் உத்தேசித்துப் பார்த்தால் நான் குறிப்பிட்ட 999 வருடம் என்பது ரொம்பக் குறைவு!

விஷ்ணு : என்கிற அடுத்த திருநாமத்துக்கு வருவோம்.

அதற்கு முன்பாக 'ஓம்' என்கிற பிரணவத்தையும், பின்பாக 'நம' என்கிறதையும் சேர்த்து 'ஓம் விஷ்ணவே நம:' என்று சொல்லலாம்.

'விஷ்ணு :' என்று சொன்னால் அது நாமம்.

'ஓம் விஷ்ணவே நம :' என்றால் அதுவே மந்திரமாகப் போய்விடுகிறது.

பிரணவம் ஒற்றை எழுத்து; நம : இரண்டு எழுத்து; விஷ்ணவே என்பது மூன்றெழுத்து - ஆக, மொத்தம் ஆறு அக்ஷரங்களுடன் கூடிய உயர்ந்த மந்திரம் இது.

ஒரு புஷ்பத்தை எடுத்து, 'ஓம் விஷ்ணவே நம:' என்று அர்ச்சனை பண்ணினோமானால் அந்த எம்பெருமான் பரமானந்தத்தை அடைகிறான்.

ஆனால் பண்ணுகிற அர்ச்சனையை முறையாகப் பண்ண வேண்டும். இல்லாது போனால், 'அர்ச்சனை முடியட்டும்; அப்புறம் வருவோம்...' என்று எழுந்து போய் விடுவான் பகவான்! அவன் அங்கேயே இருந்து நம்மை அனுக்கிரஹம் பண்ணுவதற்காகத்தானே அர்ச்சனையே... அதனால் அதை முறைப்படி பண்ண வேண்டும்.

உள்ளுறும் பக்தியுடன் துளசியை எடுத்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

பெருமாளுக்காக துளசியைப் பறிக்கிறார் ஒருவர். சுலோகத்தைச் சொல்லிக் கொண்டே பறித்தாலும்

கையிலே வேகம்! கொத்துக் கொத்தாகச் செடியிலிருந்து பெயர்ந்து வருகிறது துளசி! அப்புறம் அதை அர்ச்சனை பண்ணப் போகிறார்!

அப்படிப் பறிக்கலாமா துளசியை...!? பறிக்கையில் சொல்கிற சுலோகம் என்ன சுலோகம்...?

'துளஸி! அமிர்த ஜன்மாஸி! சதாத்வம் கேசவப்ரியே!'

அம்மா, தாயே! துளசி! நீ அமிர்தத்தின் உறைவிடம் அல்லவா! உன்னிடத்தில் அல்லவா அந்த கேசவனுக்கு ரொம்பப் ப்ரியம். உன்னைச் சாற்றிக் கொண்டு அவன் எத்தனை ஆனந்தப்படுகிறான்! உன்னால் அவனுக்குப் பெருமையா? அவனால் உனக்குப் பெருமையா? அதை நீதான் சொல்ல வேண்டும்!

இந்த தளத்தை எடுக்கப் போகிறேன். அவ்வாறு எடுக்கும்போது உனக்கு நோகும். உன்னை ஹிம்ஸை பண்ணுகிறேன். யாருக்காக...? எனக்காக அல்ல... கேசவனுக்காக.

– இதைச் சொன்னவுடனே துளசிக்கு அவ்வளவு சந்தோஷமாம்! 'கேசவனின் பொருட்டா...? இதோ என்னை அர்ப்பணம் பண்ணுகிறேன்...' என்று ஆனந்தமாய் துளசி கையில் வந்து உட்காருகிறாளாம்!

மூன்று தளங்கள் உடையதாய், அழகான அந்த கிருஷ்ண துளசியை (கருந்துளசி), மேலேயுள்ள குழுசத்தோடு பறித்து பகவானுக்கு அர்ச்சனை பண்ணினால் அவன் மிகுந்த சந்தோஷப்படுவான். கட்டை விரலையும் பவித்திர விரலையும் உபயோகித்து நகம் படாமல், சதை மட்டும் படும்படியாகத் துளசியைப் பறிக்க வேண்டும். நகம் பட்டாலோ, உருவியெடுத்தாலோ பகவான் அதை ஏற்க மாட்டான். இதனால் இரண்டுவித அபசாரங்கள் ஏற்பட்டுப் போகும். துளசிக்கும் அபசாரம்; பகவானுக்கும் அபசாரம்.

எனவே, ரொம்ப ஜாக்கிரதையாக எடுத்து துளசியை அவன் திருவடியிலே அர்ப்பணம் பண்ண வேண்டும்.

புஷ்பத்தையோ, துளசியையோ எடுதது ஹ்ருதயத்துக்கு நேரே வைத்து, இந்த என் ஹ்ருதயம் அமிர்தமயமானது. இந்த ஹ்ருதயத்தை உனக்குச் சமர்ப்பிக்கிறேன்; என்னையே உனக்குச் சமர்ப்பிக்கிறேன் என்று அர்ப்பணிக்க வேண்டும்.

ஹ்ருதய சமர்ட்பணம் என்பது 'தடா'லென்று' நிகழ்ந்து விட முடியுமா...? இப்படி ஹ்ருதய ஸ்தானத்தில் புஷ்பத்தை வைத்து சமர்ப்பிக்கிறேன், என் ஹ்ருதயத்தை ஏற்றுக் கொள் என்று புஷ்பார்ச்சனை மூலமாக நிகழ்கிறது.

நெஞ்சமெல்லாம் கொள்ளை கொண்ட பெருமான்; நெஞ்சில் நிறைந்தவன் அவன்!

'நெஞ்சு நிறைய வந்து புகுந்தாய்' என்கிறார் ஆழ்வார்.

'இனிமேல் இந்த நெஞ்சுக்குள்ளே நுழைய வேறு எதற்கும் இடம் இருக்கிறதா...? நீயே



அருள்வாக்கு

"**A**rise, awake- எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள்" என்று, விவேகானந்தர் எல்லாரையும் தட்டி எழுப்பி, ராமகிருஷ்ணா மிஷனுக்கு motto-வாக (லக்ஷ்ய வாசகமாக) வைத்தது, கடோபநிஷத்தில் வருகிற மந்திரம்தான். இப்போது நிறைய மேற்கோள் காட்டப்படும் அநேக வாசகங்கள் இந்த உபநிஷத்தில் வருகிறவையே. உதாரணமாக, "படிப்பாலோ, மேதாவித்தனத்தாலோ ஆத்மாவை அடைய முடியாது" (நாயமாத்மா) என்கிற மந்திரம்; ஜீவன் என்ற தேர்க்காரனுக்கு சரீரம் தேர், புத்தி ஸாரதி, மனஸ் கடிவாளம், இந்திரியங்கள் குதிரைகள் என்ற விஷயம்; ஹ்ருதய குகையில் பரமபுருஷன் அங்குஷ்டப் (கட்டை விரல்) பிரமாணமாக ஜோதி ரூபத்திலிருக்கிறான் என்ற ஸமாசாரம்; தீபாராதனை செய்கிறபோது சொல்லும் 'ந தத்ர ஸூர்யோ பாதி' மந்திரம் ('பரமாத்மாவின் ஸந்நிதானத்தில் சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், அக்னி எல்லாமே ஒளிமழுங்கி விடுகின்றன. அதனால்தான் இவற்றுக்கெல்லாம் பிரகாசமாதலால் இவற்றால் அவனை விளக்கிக் காட்ட முடியாது' என்று அர்த்தம். நம் அறிவெல்லாம் அந்தப் பேரறிவிலிருந்தே உண்டானதால், இந்த நம் சிற்றறிவால அவனை விளக்க முடியாது.) பிற்பாடு கீதையிலும் பகவான் சொல்லும் ஸம்ஸாரம் என்ற தலைகீழ் அச்வத்த விருக்ஷத்தைப் பற்றிய பிரஸ்தாவம்; ஹ்ருதயத்தில் குடி கொண்டுள்ள ஆசைகளை எல்லாம் ஒழித்துவிட்டால், இங்கேயே மனிதன் அமிருதனாகி பிரம்மத்தை அநுபவிக்கிறான் என்ற விஷயம் – இப்படி அநேக சமாசாரங்கள் இன்று quote பண்ணப்படுவதெல்லாம் கடோபநிஷத்தில் வருபவைதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

நிரம்பி வழிகிறாயே...!' – ஹ்ருதயம் பூர்த்தியாக நிரம்பி வழியும்படியான இந்த நிலையில் புஷ்பத்தை எடுத்து பகவானுடைய திருவடியிலே அப்படி அர்ச்சனை பண்ண வேண்டும்.

அர்ச்சனை என்கிற காரியத்தில், இந்த்ரியம் வேலை செய்கிறது. வாக்கு, நாமாவைச் சொல்கிறது; கண்கள் பகவானுடைய திருவடியைப் பார்க்கின்றன; கை அர்ச்சனை செய்கிறது. அந்தப் புஷ்பம் போய் பகவானுடைய திருவடியிலே விழுகிறது.

ஆத்மார்ப்பணம் என்கிற காரியம் நடக்கிறது. அதோடு கூட என்ன நடக்க வேண்டும்...?

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம்
புஷ்பம் இந்த்ரிய நிக்ரஹ :
சர்வ பூத தயா புஷ்பம்
க்ஷமா புஷ்பம் விசேஷத :
சாந்தி புஷ்பம் தவம் புஷ்பம்
ஞானம் புஷ்பம் ததைவச :
சத்யம் அஷ்ட விதம் புஷ்பம்
விஷ்ணு : ப்ரீதி கரம்பவேத்

('சம்போ : ப்ரீதி கரம்பவேத்' என்றும் முடிக்கலாம்)

விஷ்ணுவுக்குப் ப்ரீதியான புஷ்பம் இதுதான். நந்தியாவட்டை, இருவாக்ஷி, மல்லிகை... இப்படிப் பலவிதமான புஷ்பங்களை நாம் அர்ப்பணம் பண்ணுகிறோம். அந்தப் புஷ்பங்களுடன் நாம் எதையெல்லாம் சேர்த்து அர்ச்சனை பண்ண வேண்டும்...?

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம். – சாஸ்திரம் சொல்கிறது – இதர பிராணிகளைத் துன்புறுத்தாதே...

எந்த ஜீவனுமே நமக்கு எந்த வகையிலும் குறைந்துபோய்விடவில்லை. ஆதி சங்கர பகவத்பாதாள் சொல்கிறார் : 'ஜன்துனாம் நரஜன்ம துர்லபம்'! நாமெல்லாம் கூட ஜந்துக்கள்தான்! நம்மையெல்லாம் ஜந்து கோஷ்டியிலேதான் சேர்த்திருக்கிறார்.

கொசுவாக இருக்கட்டும், மனிதனாக இருக்கட்டும்... எல்லாமே ஜந்துதான். இன்னொரு ஜீவனை அழிக்கவோ, அது எதற்கு உண்டானது என்று கேட்கவோ நமக்கு அதிகாரம் கிடையாது!

ஒருத்தர் 'யானை ஏன் படைக்கப்பட்டது? பூனை ஏன் படைக்கப்பட்டது' என்று கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தார்! "இந்த பகவத் சிருஷ்டி ரொம்ப மோசம்! இந்தக் கொசுவை ஏன் சிருஷ்டி பண்ணினான் பகவான்? தட்டினால் பிராணன் போகிற அல்பமான ஒன்று! இதிலே கொசுவும் நானும் ஒன்று என்று உபன்யாசம் வேறு கேட்க வேண்டியிருக்கிறதே...!"

– இப்படி அலுத்துக் கொண்டு சிருஷ்டியை நிந்தித்தவருக்குக் கொசுவின் மகிமை புரிந்த கதை ஒன்று இருக்கிறது... அதை அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)



"தலைவரே, உங்க அறிக்கைக்கு இந்த கதி ஏற்படும்னு நான் நினைக்கவேயில்லே!"

"ஏன், என்னாச்சு...?"

"வாரப் பத்திரிகைக்கு நீங்க அனுப்பின அறிக்கையை கதைன்னு நினைச்சு நல்லா இல்லைன்னு திருப்பி அனுப்பிட்டாங்க!"

– வந்தவாசி பா. ஜெயக்குமார்



''இயற்கையோடு ஒன்றி வாழணும்னு நினைக்கிறவர் எங்க மானேஜர்.''

''அதுக்காக கோழி கூவுறதை ரெக்கார்டு பண்ணி வச்சுக்கிட்டு தினமும் சாயந்திரம் ஐந்து மணிக்கு அந்த கேஸட்டைப் போட்டு ஆபீஸ்ல எல்லாரையும் எழுப்பணுமா என்ன?''

– சீர்காழி வி. ரேவதி



''என்ன தரகரே, அந்தப் பொண்ணு டீவி நாடகத் தயாரிப்பாளர்னு முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாது?''

''ஏன், என்னாச்சு?''

''பொண்ணு பார்க்கப் போன அன்னிக்கு காலி தம்ளரைக் கொடுத்து காப்பி சாப்பிடச் சொன்னா!''

– வலங்கைமான் நூர்தீன்

சிரிப்பழகு க்ரீம் கிடைக்குமா...?

சிவப்பழகு க்ரீமை வேண்டுமானால் கடையில் வாங்கிப் பூசிக் கொள்ளலாம்... சிரிப்பழகு...? எதிரே இருப்பவர் ரசிக்க வேண்டுமானால், நம் சிரிப்பு உயிர்த் துடிப்புடன் அமைவது அவசியம். அழகாகச் சிரிப்பது எப்படி? படங்களைப் பாருங்கள்.



இதைத்தான் இயல்பான ஸ்மைல் என்பார்கள். ஆனாலும் கண்ணைப் பாருங்கள். லேசான விஷமத்தனம் தெரியவில்லை? இந்த மாதிரியான சிரிப்பும் அத்தனை சிலாக்கியமானதில்லை. கொஞ்சம் நேர்மை குறைந்த சிரிப்பு இது என்கிறார்கள் 'சிரிப்பியல்' வல்லுநர்கள்.



முகம் முழுக்கச் சிரித்தாள் என்று எந்தக் கதாசிரியராவது வர்ணித்தால் அது இப்படித்தான் இருக்கும் என்பதறிக. (கண்கள் கூட என்னமாய் சிரிக்கின்றன?)




இதெல்லாம் ஒரு சிரிப்பா என்று கேட்கத் தோன்றுகிறதா? கோபம், வலி இருக்கும்போது சிரிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் நீங்களே இப்படித்தான் சிரிப்பீர்கள்! முகத்தசைகளின் இறுக்கமே உங்கள் மனச் சுமையைக் காட்டிக் கொடுத்துவிடும்!

இந்தப் படம் தவறான சிரிப்பு. இறுக்கமான பாவத்துடன் மேலுதடே விரியாமல் — கடனே என்று சிரிப்பது இதுதான். பொதுவாக இப்படிச் சிரிப்பதை யாரும் விரும்ப மாட்டார்கள்!





இது ஒரு மாதிரி ரொமான்டிக் சிரிப்பு. 'லவ் சீனுக்குத் தயார்' என்பது போல் அழைப்பு விடுக்கிறது!



இதைப் பாருங்கள். கோபமாய் அழுகிற குழந்தையைச் 'சிரி' என்று வற்புறுத்தினால் வலிந்து வரவழைத்துச் சிரிக்குமே... அப்படி!



அடடா! இதைப் பாருங்கள்! இயல்பான, அழகான, உயிரோட்டமுள்ள சிரிப்பு என்பது இதுதான். மகிழ்ச்சிப் பெருக்கை மிகைப்படுத்தாமல் அறிவிக்கிற அழகுப் புன்னகை இதுதான். அந்தக் கண்களில் தெரிகிற பரவசத்தை வருணிக்க ஒரு கல்கி போதாது!

நன்றி : **The Secrets of Attraction**

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1997

கல்கி விலை உட்பட விலைவாசியெல்லாம் எக்கச்சக்கமாக ஏறிவிட்டது! சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகை மட்டும் ஏறாவிட்டால் எப்படி? ஆகவே

முதல் பரிசு

ரூ. ~~1500~~ 2500.

இரண்டாவது பரிசு

ரூ. ~~1000~~ 2000

மூன்றாவது பரிசு

ரூ. ~~500~~ 1500

ஆக மொத்தம் ரூ. 6000 பரிசுகளாக வழங்கப் பெறும்.



தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 200 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு!

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய

கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலை ஒட்டிய, சுயவிலாசம் எழுதிய உறையைக் கதையுடன் கூடவே அனுப்ப வேண்டும். பின்னால், தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள், கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமனவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.

இந்திரா சௌந்தர்ராஜன்

"நீருக்கு...
தவழும்போது ஒரு பெயர்
விழும்போது ஒரு பெயர்
உருளும் போது ஒரு பெயர் - என்று
இடத்துக்கு ஏற்ப பெயர் மாறுகின்ற மாதிரி சுசீலாவுக்கும் ஆசிரமத்தை அடைந்ததும் பெயர் மாறி விட்டதே!"

14

வெளியே மொய்க்கும் கூட்டம். எதைப் பற்றியும் கவலைப்படாமல் சரக் இல்லை என்று கடையை மூடிவிட்டான் ரேஷன் கடைக்காரன்.

"பத்து பேருக்குக் கூட மண்ணெண்ணெய் ஊத்தலை... அதுக்குள்ள தீர்ந்து போச்சுன்னு மூடுறியே..."

"மண்ணெண்ணெய் தான் தீர்ந்து போச்சு. மத்ததுமா தீர்ந்து போச்சு?" சிவந்த முகத்துடன் முன்செல்கிறான் மோகன்ராம்.

ஐய்யய்யோ!


இதைப் பயத்துடன் பார்க்க ஆரம்பிக்கிறாள் பானு. மோகன்ராமை பார்க்கவும் பில் போடுபவனிடம் துளி இணக்கமான சிரிப்பு.

"சாரி தம்பி... புது ரேஷன் கார்டுக்கு மனு தரணும் - ஸ்டாக் வேற எடுக்கணும். சரக்கு போட்டுக்கிட்டிருந்தா இதைப் பாக்கறது எப்படி? வேணும்னா உனக்கு மட்டும் போடச் சொல்றேன். வாங்கிக்கிட்டுப் போ..."

- ஏதோ பெரிதாக உதவி விட்டது போல் அவனிடம் ஒரு பாவனை வேறு.

"ஜனங்களுக்கு சப்ளைதான் முதல் விஷயம். நீங்க சொல்ற விஷயங்களில்ல. இப்ப எல்லாருக்கும் சரக்கை சப்ளை செய்யப் போறீங்களா இல்லை..."

குரலில் கடுமை தொனிக்க மார்பை நிமிர்த்துபவனை பில் போடுபவன் கூட்



சற்று கோபத்துடன்தான் பார்க்கிறான்.

"போடாட்டி...?"

"அந்தக் கேள்விக்கே இடமில்லை..."

"நீ என்ன இவங்களுக் கெல்லாம் ரெப்ரசென்டே டிவா...?"

"எப்படி வேணா வெச் சுக்கோ."

"வேணாம். எங்க சிக்கல் உனக்குத் தெரியாது."

"நான் அதைக் கேக்க வரலை. பொருள் வாங்க வந் துருக்கேன்."

"ஆமா... நாங்க பொருள் வாங்க வந்துருக் கோம். அவர் கேக்கறதுல என்ன தப்பு?" முதல் தடவையாக வெளியேயிருந்து ஒரு ஆதரவுக் குரல்! கொடுத்தவள் பானு. கடைக்காரன் அவளையும் ஒரு பார்வை பார்க்கிறான்.

"எல்லாரும் சொல்லுங்க. இதை இப்படியே விடக்கூடாது. இதுக்கு ஒரு முடிவு கட்டியே தீரணும்" - பானு கூட்டத்தின் பக்கம் திரும்பு கிறாள்.

"அதானே... இதை இப்படியே விடக் கூடாது..." - மோகன்ராம் பற்றவைத்த நெருப்பு, பானு மூலமாக கூட்டத்திடமும் பற்றுகிறது. தொடருகிறது. கடைக்காரன் இறுக்கம் தளருகிறான்.

சம்மதித்து விட்டதற்கு 'அடையாளமாக தூக்கிப் போட்ட பில் புக்கை எடுக்கிறான்.

"ராசா நீ நல்லா இருக்கணும்!" என்று ஒரு கிழவி முதல் அட்சதையைப் போடுகிறாள் மோகன்ராம் மீது. பானுவுக்குப் பெருமிதமாக இருக்கிறது.

"வாழ்த்தறது அப்புறம். இந்த ஒத்துமையை எப்பவும் விட்டுடாதீங்க. ஏழை களோட ஒரே பலம் அது தான்..." - சொல்லிவிட்டு ரேஷன் கார்டை நீட்டு கிறான். கடைக்காரன் முகத்தில் 'உன்னை கவ னித்துக் கொள்கிறேன்' என்பது போல ஒரு தீர்மானம்.

சரக்குடன் திரும்பும்போது பானுவை முதல் தடவையாக ஆழமாய் ஒரு பார்வை பார்க்கிறான். சற்று கனிந்த பார்வையும் கூட!


ரேஷன் கடையின் கசகசப்பிலும் அவள் ஒரு வித்தியாசமான இன்பத்தை அனு பவிக்கத் தொடங் கினாள்!


ஆசை நெசவ

ஆளாளுக்கு தலையைச் சொரிகிறார் கள். வார்டுபாயிலிருந்து நர்ஸ் முதல் டாக்டர் வரை! தாமுவும் சளைக்காமல் எல்லோருக்கும் ஐம்பது நூறாகவே வெட்டுகிறான்.

சாராயக் காசு. சர்வ சகஜமான புழக்கம். தாமுவிடமும் தாராளம். உடனிருக்கும் சகா வுக்கோ எரிச்சல் தாளவில்லை.

"அண்ணே சீக்கிரம் கிளம்புங்க. உங்க பெட்டுக்கு மேலே ஒரு பல்லி ரொம்ப நேரமா உங்களையே பார்த்துக்கிட்டிருக்கு. அது ஒரு





"தலைவரே! திடீர்னு சிகரெட் பிடிக்கிறதை நிறுத்திட்டீங்களே, எப்படி?"

"சிகரெட்டை பிடிச்சிட்டு, மிதித்து அணைக்கும்போது யாராவது பார்த்துட்டா, நான் நெருப்பு மிதிச்சேன்னு தலைவர்கிட்டே போட்டுக் கொடுத்துடுவாங்கன்ற பயம்தான்!"

— செங்குன்றம் ரமேஷ்ராமன்

ஐம்பது ரூவா கேட்டு வெக்கப் போவுது" - என்று தாமுவைத் தூண்டுகிறான்.

தாமுவிடம் இடக்குச் சிரிப்பு.

"ஒரு ஊறல் டின்னுல எல்லாத்தையும் திரும்ப எடுத்துட மாட்டேன்" என்கிறான் பதிலுக்கு. உடம்பு முழுக்க காயம் சுமாராக ஆறி விட்டிருக்கிறது. தேமல் போல அங்கங்கே மட்டும் வெள்ளையாய் சற்று அரூபமாய்த் தெரிகிறது.

போகப் போக சரியாகி விடுமாம். நன்றாய் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றால் தனது டிஸ்பென்சரிக்கு வரச் சொல்லியிருக்கிறார் டாக்டர்.

அந்த பதிலிலேயே, இங்கெல்லாம் சுமார் லட்சணத்தில்தான் பார்க்க முடியும் என்கிற நிஜத்தின் ஒளிவு.

பட்டாளத்தோடு வாசலுக்கு வருகிறான்.

"ஆட்டோ வேணுமா?" - என்றபடி ஒரு காக்கிச் சட்டை.

"அத்த வாங்கிப் போட்டு நான் என்னத்த பண்ண?" - என்கிற இடக்கு பதில் தாமுவிடம். ஆட்டோக்காரன் முகம் சூம்பிப் போகுமுன் அந்த ஆட்டோவிலேயே ஏறி அமருகிறான்.

சகாக்கள் மற்ற ஆட்டோக்களில் ஏறிக் கொள்கின்றனர்.

மீட்டர் என்கிற ஒன்று ஏதோ ஒரு வேண்டாத உறுப்பாக ஓடாமல் நிற்கிறது. அதைப் போட வேண்டும் என்கிற பிரக்ஞையும், தாமுவிடம் இல்லை.

நடுவழியில் டிராஃபிக்கில் ஒரு சின்ன திணறல். கான்ஸ்டபிள் ஆட்டோக்காரனை பார்க்க, "என்ன அண்ணா டூட்டி இன்னிக்கு இங்கியா?" என்கிற சினேக பாவம் ஆட்டோக்காரனிடம்.

"ஒரு சிகரெட் இருந்தாக் கொடு..." என்கிற பதில் சினேக பாவம் கான்ஸ்டபிளிடம். உள்ளே தெரியும் தாமுவைப் பார்க்கவும் கான்ஸ்டபிள் முகத்தில் பலத்த பிரகாசம்.

"அட வாத்யாரா?"

"ஆமாஞ் சார்... சௌக்யமெல்லாம் எப்படி?"

"நான் என்ன உன்னை மாதிரி பத்தாயிரம் இருபதனாயிரமா என்ன? டி.ஏ. பேசிக்குன்னு வாரி வழிச்சா நாலு நோட்டு தாண்டாது..." என்று பேச்சே திசைமாறுகிறது கான்ஸ்டபிளிடம். இதற்குள் சிக்னல் விழ ஆட்டோக்காரன் கிளப்புகிறான்.

சகலவிதமான மனிதர்களும் ஆசை மனிதர்களாகவே இருக்கிறார்கள். தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்கிற மாதிரி தெரிகிறார்கள். இவர்களுக்கு நடுவே சலவை நோட்டுக்கு மட்டுமே கதவு திறக்கிறது. இருந்தும் மோகன்ராம் போல் ஒன்றிரண்டு பேர் பிழைக்கத் தெரியாமல் நெருடுவதை என்னவென்று சொல்வது?

தாமுவின் சிந்தனை மோகன்ராமைத் தொட்டு தேசிகாச்சாரி, சுசீலா வரை போகிறது. குறிப்பாக தேசிகாச்சாரி ஜவஹரை வர்மத்தில் கட்டிப் போட்டதில் மையம் கொள்கிறது.

மோகனை விடவும் இந்தக் கிழவன் பெரிய வில்லனாக இருக்கிறானே என்கிற கவலைக்கு நடுவே வெளியே பார்க்கிறான். நழுவும் அக்ரஹாரத்துப் பட்டு ஜவுளிக் கடைகளெல்லாம் ஏதோ சாதாரண பெட்டிக் கடைகளாகவே தெரிகின்றன தாமுவுக்கு.

இப்படி, ஒரு கடையில் தாமு வேலை பார்த்த நாள் ஒன்று உண்டு.

மாதச் சம்பளம் அறுநூறு ரூபாய். காலை எட்டு மணிக்குக் கிளம்பி வந்து விட வேண்டும். இரவு பத்து ஆகும் திரும்ப. கிட்டத்தட்ட பதினான்கு மணி நேர வேலை. சப்பணமிட்டு சன்யாசி போல அமர்ந்து பட்டு வேட்டிகளைத் திறந்து காட்டி - திரும்ப சிக்கல் சிடுக்கின்றி மடித்து.... ஓ! சுவாரஸ்யமில்லாத வேலை.

சாராயத்துக்கு தொழில் மாறவும்தான் எத்தனை சுவாரஸ்யம். எத்தனை வருமானம்?

நினைத்து முடிக்குமுன் வீடு வந்து விட

கிறது. பள்ளம்மேடில் உண்டியல் காசாய் ஆட்டோ குலுங்குகிறது. ஜவஹர் வீட்டு முன் அமைதியடைகிறது. பம்பாய் மணியம் எட்டிப் பார்த்துவிட்டு ஓடி வருகிறான்.

"வாடா வா..." என்றபடி வாசலுக்கு வருகிறான். ஆரத்தி கரைக்காத குறை. ஆட்டோக்காரன் ஐம்பதை வாங்கிக் கொண்டு வாய்பிளந்து நிற்க, உள்ளே நுழையும் தாமுவை ஜவஹரின் சோர்ந்த முகம் சற்று சிரித்து உள் அழைக்கிறது.

"வா தாமு..."

"வர்றது இருக்கட்டும். எனக்கு ஒரு பொட்டச்சி. உனக்கு ஒரு கிழவன். ஆமா நாம உசுரோடதான் இருக்கணுமா?" விட்டத்துக்கு எகிறுகிறது அதுவரை அடங்கிக் கிடந்த தாமுவின் கோபம்.

"டேய்... ஏண்டா வந்ததும் வராததுமா முண்டா தட்டிக்கிட்டு. அவங்கள பத்தி பிறகு பேசிக்கலாம். இப்ப உனக்கு நல்லாயிடிச் சுல்ல."

"என்னத்த நல்லாயிடிச்சு.... குஷ்டம் பிடிச்ச மாதிரி ஆயிடிச்சு மாமா...!"

"விட்றா விட்றா... ஏதோ உசுர் பிழைச்சு வந்தியே. இனியாச்சும் மூளையோட நடந்துக்கற வழியப் பாரு..."

"என்ன மாமா நீ... நான் வந்ததும் அந்த நாய்ங்களைப் போட்டுத் தள்ள பிளான் சொல்லுவேன்னு பாத்தா மூளையோட நடந்துக்கோங்கறே. இப்ப என்ன முட்டாத்தனம் பண்ணிட்டோம்."

"இனி பண்ணக் கூடாதுங்கறதுக்குன்னு அதை எடுத்துக்கோடா. சும்மா லொட லொடன்னுகிட்டு. மொத இதைக் குடி..."

ஒரு கண்ணாடி கிளாஸில் சாராயத்தைப் பிடித்து நீட்டுகிறான் மணியம். ஒரே மடக்கு. ஊற்றின ஜோரில் மேலும் ஆவேசம் தாமுவிடம்.

ஆசிரம வெளி முழுக்க உதிர்ந்த ஆல மரத்து இலைச் சருகுகள். கூட்டிப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள் சுசிலா. பக்கத்தில் சாணியைக் கரைத்து வைத்திருக்கிறாள். 'கூட்டிய பிறகு மெழுக வேண்டும். ஒரு ஓரமாய் தர்ப்பைப் புல் கட்டு கிடக்கிறது. அதைப் பிரித்து ஒழுங்குபடுத்தி கட்ட வேண்டும். நிறைய மூலிகைத் தண்டுகள், வேர்கள், கொட்டைகள் என்று வெய்யிலில் உலர்த்தி எடுத்து தேசிகாச்சாரி சொன்ன சதவிகிதத்தில் கலந்து பொடிக்க வேண்டும்...'

சரியாக இருக்கும்... ஒருநாள் பொழுது போதாது. சுசிலாவின் வாழ்க்கை இப்படி மாறிப் போனது ஒரு ஆச்சரியம்தான். தாமு



"நீங்க ரெண்டு வருஷமா என்கிட்டே ட்ரீட்மெண்ட் எடுக்க வர்றீங்க, ஒத்துக்கிறேன். அதுக்காக வெயிட்டிங்கில இருக்கிற பேஷண்ட்டுங்ககிட்டே என்ன வியாதின்னு கேட்டு நீங்களே மருந்து சொல்றதை என்னாலே பொறுத்துக்க முடியாது சார்!"

— ஆர்.ஆர். பூபதி

பழைய சுசிலாவை அடித்துப் போட்டு விட்டு – புதிய சுசிலாவுக்கு இப்படி ஒரு வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறானோ?

சுசிலா கர்மஸ்ரத்தையாகக் குப்பை அள்ளுவதைப் பார்த்தபடியே உள்நுழைகிறான் மோகன்ராம். ஏறிட்டு அவனைப் பார்ப்பவள் கண்களிலும் கூட 'எப்படி இருக்கே?' என்னும் கேள்வி. நின்று ஒரு வினாடி அதிசயிப்போடு பார்ப்பவனை தேசிகாச்சாரியின் குரல் அழைக்கிறது.

"வா மோகன்..."

"நமஸ்காரம்."

"உக்கார். எங்க இவ்ளோ தூரம்?"

"உங்களைப் பாக்கலாம்னுதான். ஜவஹர் பாபு விஷயமா கேள்விப்பட்டேன்..." பதிலோடு பாயில் அமருகிறான்.

"நான் என்ன பண்ணட்டும். அவன் பட்டுத் திருந்தற ஜாதியா இருக்கான்."

"அப்ப இனி திருந்திடுவாங்கறீங்களா?"

"திருந்தலேன்னா திரும்பவும் தட்ட வேண்டியதுதான்."

– தேசிகாச்சாரியின் பதற்றமில்லாத பதில்களில் ஒரு பிரமிப்பு தட்டுகிறது மோகன் ராமுக்கு. அடுத்து பேச வேண்டியதில் தடுமாற்றமும் தொற்றுகிறது.

"எங்கிட்ட நீ வேற எதையோ கேக்க வந்துட்டு மத்தவங்க மாதிரியே பேசிக்கிட்டிருந்தா எப்படி மோகன்ராம்?" – தேசிகாச்சாரியே சிடுக்கு நீக்கி விடுகிறார்.



"தலைவருக்கு குழந்தை பிறந்ததும்..."

"ஸ்வீட் கொடுத்தாரா...?"

"கட்சியில மழலை அணி ஆரம்பிச்சி அதுக்கு அவரோட குழந்தையைத் தலைவரா நியமிச்சிட்டார்...!"

— செங்குன்றம் ரமேஷ்ராமன்

"எப்படி உங்களால நான் நினைக்கறதைச் சொல்ல முடியுது...?"

"மந்திரமில்ல மோகன். எல்லோராலையும் முடியும். ஆனா கொஞ்சம் மனசைக் கட்டுப்படுத்தணும். சில பயிற்சிகள் செய்யணும்."

"வர்மஅடி கூட எனக்கு வியப்பா இருக்கு. உங்களுக்கு இன்னும் என்னவெல்லாம் தெரியும்?"

"இதுவரை எதுவும் தெரியலப்பா..."

"ப்ச்ச்ச்..." – அந்த பதிலுக்கான செருமலை தேசிகாச்சாரியும் ரசிக்கிறார். நடுவில் சுக்குமல்லி காப்பியுடன் இடையிடுகிறாள் சுசிலா.

"சாப்பிடு..."

– மோகன்ராம் அவளை வெறித்தபடியே அதை வாங்கிப் பருக ஆரம்பிக்கிறான்.

"சுசிலா வந்துட்டதுல எனக்கு பல பிரச்னை தீர்ந்தது. சில யோகங்களை செய்து பார்க்க முடியாம இருந்தேன். இப்ப அதுல எல்லாம் நான் நுழைய முடியுது..."

தேசிகாச்சாரி இனி சுசிலா ஒழுக்கமுடன் இங்கேயே காலமெல்லாம் இருப்பாள் என்று சொல்லாமல் சொல்லுகிறாரா?

"ஆமாம் மோகன்... இனி சுசிலா விரும்புனா இங்கையே இருக்கலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. இப்ப அவ உடம்புலையும் புது ரத்தம்தான் ஓடிக்கிட்டிருக்கு. அவ ஆசைப்பட்டா அவளை ஒரு நல்ல நாட்டு வைதியர் ஆக்க முடியும்னு நான் நம்பறேன்" – மோகன்ராமின் மனக் கேள்விக்கான பதில் தூரத்தில் தர்பை கட்டை அள்ளப் பார்த்தவள் காதிலும் விழுகின்றன. அவள் கண்கள் கலங்குகிறது. அங்கிருந்தபடியே கைகூப்புகிறாள். சம்மதமோ?

– மோகன்ராமுக்கே புல்லரிக்கிறது.

"எப்படியோ அக்காவுக்கு நல்ல வழி கிடைச்சா சரி..."

அவன் பதிலில் ஒட்டிக் கிடக்கும் பாசமும் கனிவும் சுசிலாவுக்கு சிலிர்ப்பூட்டுகின்றன. 'கடவுளே!'

"ஆமா உனக்குப் பரீட்சை எப்போ?"

"இனிதான் தெரியவரும்."

"கவனமா படி. மத்த விஷயங்கள்ள மனசை அலைய விடாதே!"

"நிச்சயமா."

"இங்க இப்படிச் சொல்லிட்டு ஊர் வம்புக்குள்ள மூக்கை நுழைக்கக் கூடாது... நீ பேசாம படிக்க இங்க வந்துடு. படிச்சுட்டு அப்படியே தியானமும் பண்ணிட்டுப் போகலாம். சில ஆசனங்கள் பண்ணினா ஞாபக சக்தி அதிகரிக்கும். சமயத்துல பூர்வ ஜென்ம ஞாபகமெல்லாம் வந்துடும்..."

– சொல்லிவிட்டு குழந்தை போலச் சிரிக்கிறார். புதிர் மனிதர் சாதாரணமாகப் பேசுவதாகவும் இருக்கிறது. அதில் அசாதாரணமும் தெரிகிறது.

"ஆமா புதுசா மாமா பொண்ணுல்லாம் வந்துருக்கா போல இருக்கே?" – தேசிகாச்சாரியின் அடுத்த கேள்வி அவன் சிந்தனையைக் கத்திரிக்கிறது.

"என்ன கேட்டீங்க?"

"மாமா பொண்ணு வந்துருக்கா போல இருக்கே?"

"ஆமா..."

"ஆமாங்கறதுக்காகவா கேட்டேன். அந்தப் பொண்ணுக்கும் உனக்கும் கல்யாணம். அப்புறமா நீ பரமக்குடி போயிடுவேன்னெல்லாம் கேள்விப்பட்டேனேப்பா..."

"என்ன சொல்றீங்க நீங்க...?" – திடுக்கிட்டுப் போய்விட்டவனை சுசிலா கூட துளி பதற்றத்தோடு பார்க்கிறாள். என்ன சொல்லப் போகிறானோ?

"முதல்ல படிப்பு... அப்புறமா எனக்குன்னு சில ஆசைகள் இருக்கு. அதை எல்லாம் முடிச்சுக்காம கல்யாணம் பத்தி நான் யோசிக்கறதா இல்ல."

"ஒருவிதத்துல நல்ல முடிவுதான். அப்படியே செய்... ஆனா நாம நினைக்கற மாதிரியே நாட்கள் போயிடறதில்லை மோகன் ராம். அதோட இழுப்புலதான் நாம் போறோம்" என்கிறார் இரு பொருள் பட...

(தொடரும்)

ESTD : 1955

ஸ்ரீ

0431 | Ph : 706823 | Ph : 704312



15 நாட்கள் கொண்ட வடதேச எக்ஸ்பிரஸ்

காசி யாத்திரை

சென்னையிலிருந்து 21.6.97-ம் தேதி மாலை 5.30 மணிக்கு வாரணாசி எக்ஸ்பிரஸில் ரிசர்வ் செய்து ஒரே கோச்சில் புறப்படுகிறோம். சென்னை – காசி – கயா – அயோத்யா – அலகாபாத் – அரித்வார் – ரிஷிகேசம் – டில்லியிலிருந்து தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் மூலம் திரும்புகிறோம்.

ரயில் பஸ் – தங்கும் ஹால் வசதி, காலை காபி டிபன் – 2 வேளை போஜனம், உடன்வரும் சிப்பந்திகள், கெய்டு ஊதியம், கம்பெனியாரின் சேவை கட்டணம் உள்பட நபருக்கு ரூ. 4975/- டிக்கெட்டிற்கு ரூ. 2000 வீதம் செலுத்தி ரிசர்வ் செய்து கொள்ள வேண்டும். 40 அன்பர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் உங்கள் சீட்டுகளை முன்கூட்டியே ரிசர்வ் செய்து கொள்வது நலம்.

ஹலோ... நாமகிரி டிராவெல் சர்வீஸா... சார்.

ஆமாம்... யார் வேணும்? எங்கிருந்து பேசறீங்க சார்?

கோவையிலிருந்து ராஜகோபால் பேசறேன்... என்ன சார் நீங்க எப்பப் பார்த்தாலும் பெரிய பெரிய டூராதான் போடுறீங்க. கொஞ்சம் எங்களப் போல வயதானவர்கள் வராப்பல குறைந்த நாளில காசி - கயா - அலகாபாத் - அரித்வார் போன்ற க்ஷேத்திரங்களுக்கு போய் வர்றாப்பல டூர் போட்டா எங்க குடும்பத்தில் 5 நபரும் கோபியில் எங்க சம்பந்தி குடும்பத்தாரும், மேலும் பல வர்த்தகர்களும் வருவதற்கு நல்லா இருக்குமே...


இதுபோன்று தினசரி பல ஊர்களில் இருந்தும் போன்கால்கள் வந்து கொண்டே இருப்பதால் மேற்கண்ட குறைந்த நாட்கள் கொண்ட யாத்திரையை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 15.5.1997-ம் தேதி வரை மட்டுமே புக்கிங் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விவரத்திற்கு ரூ. 2 ஸ்டாம்ப் அனுப்பி, முழு விவரங்கள் பெறலாம்.

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்,

34-A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி - 2.

உரிமையாளர் K. E. நம்பிள்ளை. ஆர்கனைசர் என். சேகர், N.கங்கா



D:\MAR\RASI7-3. MACH. 2 1

குழந்தை இல்லையே என்கிற கவலை வேண்டாம்

- ❖ ஜாதகப்படி குழந்தைச் செல்வம் ஏற்படுவதற்குப் பரிகாரம் என்ன.
- ❖ திருமணப் பொருத்தம் பார்க்கும் போதே குழந்தைப் பேறு தாம்பத்ய ஒற்றுமை, மகிழ்ச்சியான வாழ்க்கை அமைய என்ன செய்ய வேண்டும்.
- ❖ பிரிந்த கணவன் மனைவி மீண்டும் ஒன்று சேர வாய்ப்புள்ளதா.
- ❖ வேலை வாய்ப்பு, பதவி உயர்வு எப்போது கிடைக்கும்.
- ❖ நீண்ட நாள் நோயிலிருந்து நிவாரணம் எப்போது.
- ❖ கடன் தொல்லையிலிருந்து விடுபட என்ன வழி.
- ❖ என்ன வியாபாரம் செய்யலாம், எதில் உயர்வு கிடைக்கும்.

ஆகிய அனைத்துப் பலன்களையும் ஜாதக அடிப்படையிலும், கைரேகை மூலமாகவும், எண் சாஸ்திரப்படியும் அறிந்து பயன்பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

பி.சி. கணேசன் (விஞ்ஞான ஜோதிடர்)

211, இந்திராகாந்தி சாலை, ஆழ்வார் திருநகர், சென்னை - 600 087.

*தொலைபேசி எண் : **424019** தொடர்பு கொண்டு நேரம் குறித்துக் கொண்டு வரவும். குழந்தைப் பேறு கிடைக்க மூலிகை வைத்ய ஆலோசனைகளும் அளிக்கப்படும். தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம்.*

கல்கி கன்ஸல்டன்ஸி - புதிய பகுதி

போதும்! போதும்! டெபாஸிட்!

— நிதி நிறுவனங்களின் அலறல்!

கடந்த சில நாட்களாக அரசியல் நிலவரம் குழப்பமும் கொந்தளிப்பும் நிரம்பியதாக இருந்து வருகிறது. ஆனால் அத்தனை கலாட்டாவுக்கிடையிலும் ஒரு நற்செய்தி :

நமது நாட்டிலுள்ள வங்கிகளின் மொத்த டெபாஸிட் தொகை ரூ ஐந்து லட்சம் கோடியைத் தாண்டி விட்டது! கடந்த ஓர் ஆண்டில் மட்டுமே (ஏப்ரல் 96 முதல் மார்ச் 97) நமது வங்கிகளுக்கு ரூ 70000 கோடிக்கு டெபாஸிட்கள் வந்து சேர்ந்துள்ளன.

இந்த நற்செய்தி மகிழ்ச்சியும் குதூகலமும் ஊட்டுவதற்குப் பதிலாக தொழில் வர்த்தகப் பிரிவினரிடமிருந்து புகார்களைத்தான் வரவழைத்திருக்கிறது. இதற்கு வலுவான காரணமில்லாமலில்லை.

டெபாஸிட்டாகக் கிடைக்கும் ஏராளமான தொகையைக் கொண்டு வங்கிகள், தொழில் வர்த்தகப் பிரிவினருக்கு தாராளமாகக் கடன் வழங்கலாம் அல்லவா... ஆனால் வங்கிகள் அவ்வாறு செய்யவில்லை!

கடந்த சில ஆண்டுகளில் கண்மூடித்தனமாக கடனுதவி செய்த ஓரிரு வங்கிகளின் உயரதிகாரிகள்பேரில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் வங்கி வட்டாரங்களில் உயரதிகாரிகள் பயந்து போயிருக்கிறார்கள். நியாயமான கடன்களை வழங்குவதற்குக் கூட யோசிக்கிறார்கள்!

அரசுப் பத்திரங்களில் வங்கிகள் கட்டாயமாக ஓரளவு முதலீடு செய்ய வேண்டும் என்ற விதி உள்ளது. இதற்கு 13 சதவிகிதம் வட்டி கிடைக்கும். தனியாருக்குக் கடன் கொடுத்தாலோ, சுமார் 24 – 25% வட்டி பெறலாம்.

ஆனால் இப்போது வங்கிகள் தனியாருக்குக் கடன் தர பயந்துகொண்டு, பெரும்பாலும் அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளன. கட்டாய முதலீட்டுத் தொகையைக் காட்டிலும் சுமார் 40,000 கோடி ரூபாய் கூடுதலாகவே அரசுப் பத்திரங்களில் முதலீடாகியிருக்கிறது! இத்தனையும் தனியார் துறைக்குக் கடனாகத் தரப்பட்டால் வங்கிகள் பெறக்கூடிய வட்டித் தொகை எந்த அளவுக்கு அதிகரிக்கும்; லாபம் எவ்வளவு கணிசமாக உயரும்... யோசித்துப் பார்க்க வேண்டும்!

இது ஏதோ வங்கிகளின் நஷ்டம் என்று நாம் ஒதுக்கிவிட முடியாது. பெரும்பாலானவை தேசியமயமான வங்கிகளாகவே இருப்பதால் நஷ்டம் நம்மைப் போன்ற சராசரி மக்களுடையது தான்.

சரி, வங்கிகளின் டெபாசிட் தொகை கடந்த ஓர் ஆண்டில் மட்டும் ஏன் திடீரென்று உயர்ந்தது? – இதற்குக் காரணம் ஷேர் மார்க்கெட்டின் சரிவு. ஆண்டுதோறும் 20,000 கோடி ரூபாய் வரை இந்திய ஷேர் மார்க்கெட்களில் முதலீடாகி வந்தது. இவ்வாண்டு பொதுமக்கள் ஷேர் மார்க்கெட் பக்கமே போகாமல் அந்தத் தொகையை அப்படியே வங்கிகள் பக்கம் திருப்பியிருக்கிறார்கள்.

ஆக, மக்கள் கொடுத்தும், வங்கிகள் அதை தொழில்துறைக்குத் திருப்பி விடவில்லை என்கிற நிலை!

வங்கிகளில் இப்படியெனில், வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களில் வேறு மாதிரி விநோதம்! பல நிதி கம்பெனிகள் ஆட்டம் கண்டுவிட, மக்கள் தங்கள் பணத்தை வங்கிகளல்லாத – நம்பகமான தனியார் நிதி நிறுவனங்களில் (Non Banking Finance Companies) முதலீடு செய்ய முன்வந்தார்கள். இந்த நிறுவனங்கள் தங்கள் வட்டி விகிதத்தை உயர்த்திக் கொள்ள ரிசர்வ் வங்கியும் அனுமதி அளித்தது.

மளமளவென்று முதலீடுகள் குவிய ஆரம்பித்தன. ஒரு நம்பகமான பைனான்ஸ் நிறுவனத்தில் ஒருசில தினங்களுக்குள் 100 கோடி ரூபாய் முதலீடாயிற்று!

சில மாதங்களுக்குள் 'போதும்! போதும்! இனி எங்களுக்கு முதலீடுகள் வேண்டாம்!' என்று இந்த நிறுவனங்கள் அலறும் அளவுக்கு நிலைமை போய் விட்டது!

ஓரிரு நிறுவனங்கள், தாங்கள் வழங்கும் வட்டியைக் குறைக்கக் கூடச் செய்தன. அப்படியும் முதலீடுகள் குவிந்து கொண்டுதான் இருந்தன.

அத்தனை தொகைக்கும் வட்டி கொடுத்து மாளாத நிலை. காரணம்...?

அடுத்த வாரம் அதைப் பார்ப்போம்.

- வி. கோபாலன்

அழகு மொழிகள்!

மரத்தைப் போன்ற அழகு மிக்க
கவிதையை எங்கும் என்றும்
காணுதல் அரிது.
- ஜாய்ஸ்கில்மெர்

அழகும் உண்மையும் அரிதே
அவற்றைத் தேடுவதே ஆயினும்
மதிப்புடைய
செயல்தான்.
- ராபர்ட் வில்லியம்ஸ்

பொறாமை, பேராசை, தீய ஒழுக்கம் இவைகளையெல்லாம் எவன்
அழித்து விட்டானோ, வேரோடு
பறித்து எறிந்து விட்டானோ, எவன்
குற்றமற்ற மேதாவியோ அவனே
உண்மையான அழகு உடையவன்.
- புத்தர்

பதினாறு வயதில் அழகாயிருப்பதில்
உனக்குப் பெருமை ஒன்றும்
இல்லை.
அறுபது வயதில் அழகாய் இருந்தால்
அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட
சாதனை.
- மேரிஸ்டோப்ஸ்

துறவிகள் மெலிவது அழகு
நான்குகால் விலங்குகள்
கொழுப்பது அழகு.
மனிதன் கல்வி கற்பது அழகு.
- பர்மியப் பழமொழி

"தனக்கே தெரியாது தன்னுடலின்
அழகு. பிறருக்குத்தான் தெரியும்.
அதிக சிரமப்பட்டு நிலைக் கண்ணாடி
வைத்துப் பார்த்துக் கொண்டாலும்
தன் அழகைச் சரியாகத் தெரிந்து
கொள்வது துர்லபம்.
- ராஜாஜி.

அழகென்பது ஒரு தேவையின்
பூர்த்தி அல்ல... இதயத்தில் ஏற்றிய தீபம்
அது. ஆன்மாவின் லயிப்பு-
பார்க்கும் உருவமோ கேட்கும்
பாடலோ அழகல்ல...
கண்கள் மூடிய நிலையிலும் தெரியும் உருவமே அழகு. செவிகள் மூடிய
நிலையிலும் கேட்கும் கீதமே அழகு.
- கலீல் கிப்ரான்

இரவு அழகானது
நிலவு அழகானது
எல்லாவற்றையும்விட
நீ அழகானவன்
ஆனால்
உன்னை விடவும்
அழகானது
உன் காதல்!
- கை:ஃபி ஆஸ்மி

இருபது வயதில் அழகாய்
இல்லாதவன்
முப்பது வயதில் வலிமை
இல்லாதவன்
நாற்பது வயதில் செல்வனாய்
இல்லாதவன்
ஐம்பது வயதில் அறிஞனாய்
இல்லாதவன்
என்றைக்குமே அழகு, வலிமை
செல்வம், அறிவு உடையவனாக
இருக்க மாட்டான்.

அங்கும் இங்கும்
அலையும் பெண்களில்
சிலரோ இளமை
சிலரோ முதுமை
இளம் பெண்கள் ஆஹா அழகுதான்
மூத்த மகளிரோ மேலும் அழகு.
- விட்மன்



விழித்த கண்ணும், வளர்ந்த முதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையும் உடைய உடலில் அழகுக் கடவுள் எங்ஙனம் கோயில் கொள்ளும்? அழகென்பது யாது? அழகென்பது நிறத்தில், மயிர் நீவலில் மூக்குக் கண்ணாடியில், கழுத்துச் சுருக்கில், பட்டையில் பிற அணிகளில் அமைந்திருப்பது அன்று. மூளை, இதயம் நுரையீரல், மண்ணீரல், முதலிய பேருறுப்புக்கள் செழிய நிலையில் நின்று ஒழுங்குபெறக் கடனாற்றலால் உற்று நரப்புக்கட்டினின்றும், தடை படாக்குருதி ஓட்டத்தினின்றும் முகிழ்க்கும் தசையிடை அரும்புவது அழகாகும்.

— திரு.வி.க.

அழகிலும் சிறந்தவை ஆண்மையும் அறிவுமே. அவைதாம் உண்மை அழகுடையன.

— மில்டன்

கண்ணில் தெரியுதொரு
தோற்றம்– அதில்
கண்ண னழகுமுழு தில்லை
நண்ணு முகவடிவு காணில்– அந்த
நல்ல மலர்ச்சிரிப்பைக்
காணோம்.

— பாரதியார்

அழகென்பது வித்தையும், புதுமையுமான ஒன்று. கலைஞன் தன் ஆன்மாவின் துடிப்பில் உலகின் குழப்பங்களை நாகரிகப் படுத்துகிறான்.

– சாமர்செட்மாம்


எந்தப் பொருளிலும் ஏதேனும் ஓர் அழகு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதை எல்லா மனிதரும் காண்பதில்லை!

— கன்பூசியஸ்

தொகுப்பு: ஆர்.பி. சாரதி

வைட்டமின் கதை-1

இறுக்கமும் சவால்களும் மிகுந்த இன்றைய வாழ்க்கைச் சூழலில் மனத்துக்கு வைட்டமின் இஞ்சக்ஷன் போடும் கதைகளை வாரம் ஒன்றாக பிரபல எழுத்தாளர்கள் வழங்குகிறார்கள்.



பத்தாயிர ரூபாய் பட்டுப் புடைவை

மௌனம் உறைக்க ஆரம்பித்தது.

"மானேஜர் உங்கள வரச் சொன்னாரு" என்று பியூன் வந்து சொன்னபோது கூட விந்தியாசமாய்ப்படவில்லை. ஆனால், கையில், 'பேட்', பால்பாயிண்ட் சகிதம் அவள் பத்து நிமிடங்களாய் எதிரே உட்கார்ந்திருந்தும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கோத்த கைவிரல்களை மோவாய்க்கடியில் அண்டை கொடுத்து வசதியாய் சுழல் நாற்காலியில் சாய்ந்து லேசாக அசைந்தபடி கார்த்திகேயன் புன்னகையோடு அவளையே பார்த்தவாறு அமர்ந்திருந்த நிலையில் மௌனம் அர்த்தம் பெறலாயிற்று.

"டிக்டேஷன் ஆரம்பிக்கலையா சார்?" என்றாள் பானு. மௌனத்தில் கல் எறிந்ததே சிறு ஆறுதலாயிருந்தது.

"ஓ, கட்டாயம்."

"அப்ப, ஆரம்பிக்கறீங்களா?" பால் பாயிண்டை நிமிர்த்திக் கொண்டாள்.

"அதான் எப்படி ஆரம்பிக்கலாம்னு யோசிச்சகிட்டிருக்கேன்!" மானேஜர் புன்னகையை அகலமாக்கினார். நாடு தழுவிய நிதி நிறுவனத்தின் சென்னை அலுவலகத்தில் மேலாளர். ஐம்பதை நெருங்கும் வயது. ஐம்பது என்பது கதைகளில்தான் கிழத்தனமே தவிர நிஜ வாழ்க்கையில், அதுவும் ஓர் ஆணுக்கு, அதுவும் வளமான வாழ்வு நிலையில் சூட்டும் டையுமாய்க் காட்சி தரும் வாட்டசாட்டமான அதிகாரிக்கு, இளமையின் உச்சம்தான் என்று தோன்றியது. அவர் பார்வை அவள் உடலைத் துளைத்தது.

"அப்போ, இன்னிக்கு யோசிச்சிட்டு நாளைக்கு டிக்டேட் செய்யறீங்களா?"

"நோ நோ, மிஸ் பானு. இன்னிக்கே முடிச்சிடலாம்... நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க."

பானு ஒரு லேசான கலவரத்தை உணர்ந்தாள். அதற்கு இடம்கொடுப்பது ஆபத்து என்று உள்ளுணர்வு எச்சரித்தது.

எளிய, அடக்கமான அலங்காரத்திலும் அவள் முகத்தின் ஒளியோ உடலமைப்பின் நேர்த்தியோ குறைப்படவில்லை. இருபத்தெட்டு வயதுப் பெண்மையின் அநாயாச அழகு. வியந்து போற்றலாம், அல்லது இச்சித்து இளிக்கலாம். கார்த்திகேயன் இரண்டாம் ரகம்.

ஆர். சூடாமணி



இந்தக் காரணத்தாலேயே இவளுக்கு முன் இருந்த ஸ்டெனோ வேலையை விட்டு விட்டுப் போய் விட்டாள்.

இயல்பான நடப்புத்தான் இந்த சந்தர்ப் பத்துக்குச் சரி.

"ஆபீசுக்குள் கொடுக்க வேண்டிய ஏதானும் சர்குலரா சார்?"

"இல்லை."

"லோன் கேட்கிற ஏதானும் புதுக் கம் பெனிக்கா?"

"உன் கம்பெனிக்கு!... ஸாரி, உங்க கம்பெனி எனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்ல வந்தேன்."

"சார்..."

"என் மனைவியால எனக்கு கம்பெனி கொடுக்க முடியறதில்லை. அதான் ப்ராப்ளம். நிரந்தர நோயாளி. நானொண்ணும் ஆசைகள் செத்த கிழவனில்லை. என் கஷ்டத்தை யோசிச் சுப் பாருங்க பானு."

"நான் போய்ட்டு நாளைக்கு வரேன் சார்." அவள் எழுந்திருக்க முனைந்தாள்.

"இருங்க இருங்க, சாரி மேலே கட்டெறும்பு ஊருது."

எப்போது எழுந்தார்? எப்போது அணு கினார்? இமை நேரத்தில் அவள் நாற்காலியின்

அருகில் நின்றிருந்தார். அவள் தோள் புடைவை மேல், இல்லாத ஒரு கட்டெறும்பைத் தட்டி விட்டார். கை தோள் மீதே நிலைத்தது.

அவள் நெஞ்சில் பயம் பற்றியது. ஏஸி அறைக்குள் வேர்வை கட்டது. மறுகணம் கோபம் மேலெழ, அடக்கிக் கொண்டாள். இப்போது பயமோ கோபமோ பயன் தராது. நிதானம் தேவை. இந்த அறையிலிருந்து வெளியேற வேண்டும்.

"எறும்பு போயிடிச்சு சார்." தோளை மெல்ல நெளித்து விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

"கைத்தறி சேலைதானே இது?" புடைவையின் தன்மையைச் சோதிப்பது போல் மீண்டும் தோள் மேல் கை போட்டார்.

"ஆமாம்" அவள் நாசூக்காய் விலகிக் கொண்டாள். "நாளைக்கு நிதானமா லெட்டர் டிக்டேஷன் வச்சக்கலாமா? எனக்கு வீட்டுக்குப் போனா தேவலை. தலை நோகுது."

"கான்ட்டீன்லேருந்து காப்பி கொண்டு வரச் சொல்றேன். உக்காரு."

"அதெல்லாம் வேணாம் ஸார். லேட்டானா அம்மா கவலைப்படுவாங்க."

"நீ எப்பவும் கைத்தறி, சிந்தடிக், காட்டன் இப்படித்தான் உடுத்தறே, இல்லே? பட்டுப் புடைவை பிடிக்காதா உனக்கு? உடம்பெல்லாம் ஜரிகை போட்டுப் பட்டுச் சேலை பத்தாயிர ரூபாய்க்கு நான் வாங்கித் தரேன். நான் சொல்ற ஹோட்டலுக்கு நாளை சாயங்காலம் வா. ராத்திரிக்கு ரூம் போட்டு வைக்கறேன். பத்தாயிர ரூபாய்ப் பட்டுப் புடைவை தயாராயிருக்கும்."

அறையத் துடித்த கையை, விரல்களை மடக்கிக் குவித்து சிரமத்துடன் பானு அடக்கிக் கொண்டாள்.

"நான் உங்களுக்குக் கீழ வேலை பார்க்கும் சபார்டினேட். அந்த நிலையைப் பயன்படுத்திக்கிட்டு நீங்க என்கிட்டே இப்படிப் பேசறது நியாயமா சார்?"

" 'நான் உங்க மகள் மாதிரி'ன்னு சினிமா ஹீரோயினாட்டம் சொல்லப் போறியா?" கார்த்திகேயன் கறுப்பு - வெள்ளை முடி குலுங்கச் சிரித்தார்.

"இல்லை. ஒரு மனுஷன் தன் மகள்கிட்ட மட்டும்தான் ஒழுங்காய் நடந்துக்கணும்னு நான் நினைக்கலை."

"அட, நல்லாப் பேசறியே! உன்னோடு நான் பேசவும் முடியும்கிறது சந்தோஷமாயிருக்கு. என்ன பதில் சொல்றே எனக்கு?"

பானுவின் உதடுகள் துடித்தன. கோபத்திலும் அவமானத்திலும் உடம்பு எரிந்தது. 'இது எனக்கு மட்டும் நிகழவில்லை. வேலைக்குப் போகும் பல பெண்கள் இன்று சந்திக்க நேரும் பிரச்னை இது' என்ற நினைப்பில் தன்னைத் தேற்றிக் கொள்ள முயன்றாள்.

"என்ன பதில் சொல்றே பானு?"

"நான் மறுத்தால்?"

"இப்பத்தானே புத்திசாலின்னு நினைச்சேன்! நீ மாசா மாசம் பிடித்தங்கள் போக வீட்டுக்குக் கொண்டு போறியே மூவாயிரம் ரூபாய், அதை இழக்கறது உன் குடும்பத்துக்குக் கட்டுப்படியாகுமா? உன் குடும்ப நிலை எனக்குத் தெரியும். என்ன சொல்றே பானுக்குட்டி?" அவள் கன்னத்தைத் தட்டினார்.

செயலற்ற ஆத்திரம் உள்ளே கனல, அமைதியை வெளிக்காட்டிப் பேசினாள்.

"இன்னிக்கு புதன் கிழமை. அடுத்த மூணு நாள் எனக்கு லீவ் கொடுங்க. திங்களன்னிக்கு வேலைக்கு வரபோது பதில் சொல்றேன்."

அந்தக் குடும்பத்தில் இரண்டு ஆண்கள். ஒன்று அப்பா, இன்னொன்று அவன்.

திருவல்லிக்கேணி சந்து ஒன்றில் வாசல் திண்ணையும் தெருவிலிருந்து நேரே கொல்லைப்புறக் கிணறு வரை தெரிகிற நடைவழியுமாய் பழங்கால வீடு. அப்பா (ஓய்வுபெற்ற நகராட்சி அலுவலக குமாஸ்தா), அம்மா, தந்தை வழிப்பாட்டி, பானு, மனநிலை பேதலித்த தங்கை சரஸ். அப்பா ஒருவரின் ஓய்வூதியத்தில் இந்தக் குடும்பத்தைத் தாங்க முடியுமா? அப்புறம் வீட்டு வாடகை, மின்கட்டணம், நோய் நொடி வந்தால் மருந்து... இவள் கொண்டு வரும் மூவாயிரம் இந்தத் தேவைக்கடலில் ஒரு துளிதான் என்றாலும் விட முடியாத துளி.

"எங்க தலைவர் பழசையெல்லாம் மறக்காதவர்"

"அதுக்காக, புதுக்கட்டடத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வச்சிட்டு அந்தப் பெரிய 'கேண்டிலை' அணைச்சு ஜிப்பா பாக்கெட்டுக்குள்ள போட்டுக்கணுமா என்ன...?"

— சீர்காழி ரேவதி





"வாங்கின கடனை ஒரு மாதத்தில் திருப்பித் தரேன்னு சொல்லிட்டு இப்படி அலைக்கழிக்கறியே. நல்லாயிருப்பியா?"

"நீ மட்டும் கேட்ட உடனே கடன் கொடுத்துட்டியாக்கும்; சரிதான் போய்யா!"

— வெ. ராஜாராமன்

கார்த்திகேயனின் கணிப்பு தவறில்லை.

கார்த்திகேயன்... நினைக்கும்போதே ரத்தம் கொதித்தது. அன்று வீடு திரும்பியதும் பெற்றோரிடம் விஷயத்தைக் கொட்டித் தீர்த்திருந்தாள். கோபக் குமுறல் அழுகையாய்ப் பீரியிருந்தது.

பெற்றோருக்கு அதிர்ச்சி, ஆத்திரம்.

"அடப்பாவி! உருப்படுவானா? அவன் நாக்கு புழுத்துப் போக! நீ இனிமே அவன் கிட்ட வேலை பார்க்க வேணாண்டி பானு. ஒரு பெண்ணோட மானத்துக்கு உலைவைக்கப் பார்க்கறானே பாவி!" என்று அம்மா அவளை அணைத்துக் கொண்டு படபடத்தாள்.

"ஆமாம். இவனை நம்பிகிட்டா பொறந்தோம்? வேறு வேலை தேடிக்கலாம். நீ நாளைக்கே ராஜிநாமா லெட்டர் எழுதி போஸ்ட் பண்ணிடும்மா பானு. பொறுக்கிப் பய!" என்றார் அப்பா.

பெற்றோரின் வார்த்தைகள் புண்ணுக்கு மருந்தாக அரவணைத்தன. வேலையை விடுவது அத்தனை சுலபமில்லை என்று உணர்ந்தாலும்.

வேலை. பெண்கள் வேலை பார்க்கப் போவது. இது பெண் விடுதலையின் ஒரு வெளிப்பாடல்லவா? ஆணுக்குப் பெண் சமம் என்று குறிக்கும் முன்னேற்றமல்லவா? அதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த முன்னேற்றம் நம் நாட்டில் முறையாக உருப்பெறவில்லை என்று பானு நினைத்துக் கொண்டாள். அஸ்திவாரத்தைப் பலப்படுத்தாமல் கோபுரம் எழுப்ப முனைவதன் விளைவு இது. 'பெண் உனக்குச் சமமான இன்னொரு மனிதப் பிறவி' என்ற கருத்தை ஆணுக்கு ஆரம்ப முதலே உருவேற்றாததால் 'பெண் உத்தியோகம்' என்பதைப் பல ஆண்கள் இயற்கையாகப் பார்க்கவே தெரிந்து கொள்ளவில்லை என்று அவளுக்குத் தோன்றியது. சராசரி ஆணின் உள் மனசில் 'படி தாண்டாப் பத்தினி' பிம்பமே இன்னும் நிலைத்திருப்பதால் படி தாண்டி வெளியே போய் வேலை பார்ப்பவளை மலிவுச் சரக்காய் எண்ணி விடுகிறான். ஒரு பட்டுப் புடைவையைக் காட்டினால் வந்து விடுவாள் என்று கணித்து விடுகிறார்கள் கார்த்திகேயன் போன்றோர்.

இரவு முழுவதும் தூக்கமில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்? வேலையை விட்டு விடலாமா? அது கோழைத்தனமில்லையா? ஆனால், இணங்கா விட்டாலும் வேலை போய்விடும். மேலிடத்தில் புகார் செய்யலாம். கடைசியில் நியாயம் கிடைப்பதாகவே வைத்துக் கொண்டாலும் அதுவரை குடும்பம் தாக்குப்பிடிக்க முடியுமா?

தலை வலித்தது. திரும்பிப் படுத்தாள். பக்கத்தில் சரஸு உறங்கிக் கொண்டிருந்தாள். அவளை விட நாலு வயது இளையவள். வெறுமையான முகம். உள்ளேயும் அதுவே.

கண்கள் பனிக்க பானு அவள் தோளை அணைத்தபடி விடியற்காலைக்கு மேல் சிறிது நேரம் கண்ணயர்ந்தாள்.

மறுநாள் மாலைக்குள் பெற்றோர் குரல் மாறிவிட்டது.

"வேலை வேணாம்னு எழுதிப் போட்டுட்டியாடி பானு?" என்ற அம்மாவின் கேள்வியில் சிறு கவலை தொனித்தது.

"இன்னும் இல்லேம்மா."

"ஒண்ணும் அவசரமில்லை. நாளைக்குக் கூட எழுதிக்கலாம்."

அப்பா குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தார். அம்மாவிடம் பேசினார்.

"அந்த மானேஜர் பண்ணது சரின்னு நான் சொல்லலே. ஆனா இந்த நாளில், பெண்கள் வேலை பார்க்க வெளிய போய் ஆணும் பெண்ணும் கலந்து பழகற ஒரு சமூகத்துல இதெல்லாம் ஓரளவு எதிர்பார்க்க வேண்டியதுதான்."

"அது சரி. ஆனாலும்..."

"ஒண்ணு யோசிச்சு பாரு. இவ அந்த ரூம்ல தனியா இருந்திருக்கா. அவன் என்ன வேணாலும் பண்ணியிருக்கலாமே? ஆனா பண்ணலே. அதனால, முழுக்கப் பொல்லாதவன்னு எனக்குத் தோணலே. கொஞ்சம் அவனோட இவ பேசிப் பார்த்து, நல்லதனமாய் எடுத்துச்

சொல்லி... வேலை கிடைக்கறது குதிரைக் கொம்பாய் இருக்கறப்ப, இருக்கற வேலையை அவசரப்பட்டு விடறது விவேகமா?"

"அது சரி. முழுசா மூவாயிரம்."

"ஆதாரச் சம்பளம் நாலாயிரம். பி.எஃப் சேமிப்பு கடைசில கைக்கு வரும். மத்த பிடிப்புகளின் பெனிஃபிட்ஸ் வேற."

"அது சரி."

"வேலைய விடறதுன்னா விடட்டும். அதுக்குச் சொல்லலே. இருந்தாலும் இதையெல்லாமும் யோசிச்சுப் பார்க்கணும்."

அவன் காதில் எல்லாம் விழுந்தது. விழ வேண்டும் என்றே பேசினார்கள் போல் தோன்றியது.

பானு தன்னை மிகவும் தனியாளாய் உணர்ந்தாள்.

எங்கோ வெறித்தபடி பரப்பிரம்மமாய் உட்கார்ந்திருந்த சரஸியின் கூந்தலை மெள்ள வருடிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தாள்.

கார்த்திகேயனுக்குப் பணியவும் கூடாது, வேலையும் நிலைக்க வேண்டும் - இந்தத் தங்கையின் பாதுகாப்புக்காகவாவது.

அன்றிரவு படுக்கச் சென்றபோது ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

செவ்வாய்க்கிழமை மாலை ஆறரை மணிக்குக் கார்த்திகேயன் அந்த அடையாறு மூன்று நட்சத்திர ஹோட்டல் காம்பவுண்டில் தம் எஸ்கார்ட்டை நிறுத்தினார். கவனத்தைக் கவரக்கூடிய பெரிய ஹோட்டல்களைத் தவிர்த்திருந்தார். உடையும் சூட்டும் டையுமாய் உத்தியோக தோரணையில் இன்றி சாதாரண பான்ட், ஸ்லாக். தனியாய்த் தெரியாமல் கூட்டத்தோடு கலந்து விடுவது அவர் வந்துள்ள நோக்கத்துக்கு மிகவும் முக்கியம்.

மனம் உற்சாகத்தின் உச்சியில் இருந்தது. பானு நேற்றுக் காலை வேலைக்கு வந்தபோது ஒரே ஒரு புன்னகையால் தன் சம்மதத்தை உணர்த்தி விட்டாள். மற்ற ஏற்பாடுகளை அவர் கவனித்துக் கொண்டார். தம் வீடு இருந்த நுங்கம்பாக்கத்திலிருந்தும் ஆபீஸ் இருந்த அண்ணா சாலையிலிருந்தும் தொலைவாக உள்ள அடையாறு ஹோட்டலில்தான் அறை எடுத்தார்.

"உன்னை உங்க தெருக்கோடியில் நானே காரில் பிக்-அப் பண்ணிக்கறேனே! ஏன் வீணா பஸ்ஸில் சிரமப்படறே?" என்றபோது பானு மறுத்து விட்டாள். தாம் சொல்லியிருந்த இந்த முகவரியைச் சரியாய்ப் புரிந்து கொண்டு அவள் வந்து சேர வேண்டுமே என்ற கவலை லேசாய் இருந்தது.

பக்கத்தில் பாஸஞ்சர் இருக்கை மீது வைத்திருந்த அட்டைப் பெட்டியை மேல் உறையை நீக்கித் திறந்தார். ஹோட்டல் முகப்பு விளக்குகளிலிருந்து தெறித்த ஒளிச் சிதறல்களில் மயில் கழுத்து வர்ணப் பட்டுப் புடைவையின் உடலெங்கும் இழைத்திருந்த ஜரிகைப் பின்னல்கள் ஜொலித்தன. நேற்று மாலை அவரே நல்லிக்குப் போய் பானுவுக்காக வாங்கி வந்தது. பத்தாயிரத்துச் சொச்சம் விலை.

புன்னகை செய்து கொண்டார்.

இறங்கி, காரைப் பூட்டிக் கொண்டு கையில் உறைக்குள் அட்டைப் பெட்டியுடன் ஹோட்டலில் நுழைந்தார். லாபி கூட்டமும் குளங்களுமாய்க் கலகலப்பாயிருந்தது. கூரை நெடுக நட்சத்திரங்களாய்ப் பதிந்த விளக்குகள். சற்றைக்கொருதரம் எங்கேயோ லிஃப்ட் கதவுகள் திறப்பதும் மூடுவதுமான சப்தம்.

பெயர்ப் பதிவு செய்துவிட்டுக் காத்திருந்தார். இவளை என்ன இன்னும் காணோம்? கவனம் வாசலிலேயே இருந்தது. மணி ஏழு.

அவள் உள்ளே நுழைந்தாள்.

வெண்ணிற நைலக்ஸ் சேலையில் ஒரு மல்லிகை போல் மலர்ந்திருந்தாள். தூக்கிக் கட்டிய கூந்தல் அவள் கம்பீரத்தை மிகைப்படுத்துவதாய் இருந்தது. உயரமான மெல்லிய உடலில் பெண்ணழகு பூனை வடிவம் பெற்று வந்தது போல் அங்கு தோன்றினாள் பானு.

கார்த்திகேயன் உடம்பில் உஷ்ணம் ஏறியது.

"இந்த டாக்டர் இதுக்கு முன்னாடி ஓட்டல்லே சர்வரா வேலை பார்த்திருப்பார்னு நினைக்கிறேன்"

"எப்படி சொல்றே?"

"ட்ரீட்மெண்டுக்குப் போன உடனே, 'என்ன சாப்பிடறீங்க, தலைவலி மாத்திரை, அனாசின், சாரிடான், ஆஸ்பிரின், இருமல் சிரப், மெடாசின்' அப்படீன்னு பட்டியல் போடறாரே!"

— வெ. ராஜாராமன்



அருகில் வந்து பெட்டியை நீட்டினார்.

"பட்டுப் புடைவை, பத்தாயிரம் விலை. உனக்குத்தான். நான் சொன்ன மாதிரியே."

"இருக்கட்டும்."

''வாங்கித் திறந்து பாரேன்! அழகான புடைவை."

"அழகாய்த்தானிருக்கும்."

"மாடியில் நம்ப ரூமுக்குப் போகலாமா?"

"என்ன அவசரம்? முதல்ல ஏதானும் சாப் பிடலாம்."

"அதெல்லாம் ரூம் சர்வீஸ்ல வரவழைச்சுக்க லாம். நீ வா மாடிக்கு. மிஸ்டர் அண்ட் மிஸஸ் செல்லப்பனோட ரூம் ஃபர்ஸ்ட் ஃப்ளோரில் தான் இருக்கு!" சிரித்தார். "வா."

"ஃபர்ஸ்ட் ஃப்ளோரில் எந்த ரூம்?"

குரல் கேட்டுக் கார்த்திகேயன் அப்படியே திரும்பினார். அதிர்ச்சியில் உறைந்தார்.

''மிஸ்டர் கார்த்திகேயன், மீட் மை ஃப்ரெண்ட் மிஸஸ் கார்த்திகேயன்" என்றான் பானு.

சிவந்த நிறமும் வாளிப்பும் நல்ல ஆரோக் கியமுமாய்ப் பச்சை புட்டா சேலையில் நின்றிருந்தவளுக்கு நாற்பத்தைந்து வயது இருக் கலாம். களையான முகம். ஆழ்ந்து நோக்கும் கண்கள். நெற்றியிலும் வகிட்டின் தொடக்கத் திலும் பளிச்சிடும் குங்குமம். கார்த்திகேயனை ஒருகணம் மௌனமாய் நோக்கி விட்டுக் கூறினாள் :

"மிஸ் பானுமதி போன வெள்ளிக்கிழமை யன்று நம்ம வீட்டுக்கு வந்து என்னை சந்திச்சாங்க. நடந்த விஷயம் மொத்தமும் சொன்னாங்க'' நிதானமாய்ப் பேசினாலும் குரலில் அடியிழையாய் சோகம் தொனித்தது.

கார்த்திகேயன் முகஞ்சிவந்தார். அந்தச் சிறுக்கி! நேரே அவர் மனைவியிடமே போய் விட்டாளா?

"இன்னிக்கு இங்கே நான் பானுமதி யோச னைப்படி வந்தப்ப கூட எனக்கொரு நப்பாசை, என் புருஷன் அப்படிப்பட்டவரில்லை, இந்தப் பெண் எதையோ தப்பா புரிஞ்சுகிட்டு பயந்து போயிருக்கு. எல்லாம் விளக்கமாயிடும் அப்படின்னு. விளக்கமாயிடிச்சு.'' அவள் மௌனமானாள்.

"டாமிட்!" ஆத்திரமும், மனைவியின் முன் முகத்திரை கிழிந்து நிற்கும் அவமானமும் கார்த்திகேயன் உடம்பில் படபடப்பாய், நெற்றி மேட்டில் வேர்வையாய், வெளிப்பட்டது. பானுவை எரித்து விடுவது போல் பார்த்தார்.

இப்போது அவர் மனைவி தெளிவாய்க் கூறினாள் :

"இத பாருங்க கார்த்தி? உங்க எண்ணம் பலிக்கலைங்கற கோபத்தில் இந்தப் பெண்ணை நீங்க வேலையை விட்டு நீக்கினாலோ, அல்லது மறுபடியும் இவங்க கிட்ட வம்பு பண்ணாலோ,



''உங்கள் காதுகளில் ஒன்றை வெட் டினால் உங்களுக்கு என்ன நேரும்...?''

''வலிக்கும்!''

''இரண்டு காதுகளையும் வெட் டினால்...?''

"என்னால் நன்றாகப் பார்க்க முடியாது!"

''அதெப்படி பார்க்க முடியாமல் போகும்...?''

"மூக்குக் கண்ணாடியை எப்படி மாட்டிக் கொள்றதாம்...?''

பிரெஞ்சு நகைச்சுவை நூலிலிருந்து : சி.மணி

உங்க நடத்தையைப் பத்தி நானே தில்லியில் உங்க எம்.டி.க்கு லெட்டர் எழுதித் தெரி விப்பேன். இது வெறும் மிரட்டலில்லை."

பானு அவளிடம் வந்தாள். "தாங்க்யூ மிஸஸ் கார்த்திகேயன்! ஒரு நெருக்கடியான நிலையில் நம்பிக்கையோடு உங்ககிட்ட வந்தேன். என் நம்பிக்கையைக் காப்பாத்திட்டீங்க. உங்க உதவிக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரி யலை. இது பொது இடமாய் இல்லாட்டி உங்க காலைத் தொட்டு கும்பிடுவேன்...'' தொண்டையைச் செருமிக் கொண்டாள். "நான் கிளம்பட்டுமா? சார், அந்தப் புடை வையை இவங்ககிட்ட கொடுங்க. அதை உடுத் தற உரிமை இவங்களுதுதான். வரேம்மா. வரேன் சார். நாளைக்கு ஆபீசில் பார்க்கலாம்."

அவள் சென்றாள்.

கார்த்திகேயனின் முகம் வெளிறியிருந்தது. ரிசப்ஷனில் யாரோ "ஜி. சபாபதி என்கிறவர் எந்த ரூமில் தங்கியிருக்கார்?" என்று விசாரிப் பது கிணற்று ஒலியாய்க் காதைக் கடந்து போயிற்று. மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. பிறகு ஒருவாறு தலையை உயர்த்தினார்.

"விமலா... நான் வந்து..."

"இங்கே வேணாம். அதான் நமக்காகவே மிஸ்டர் அண்ட் மிஸஸ்னு ரூம் எடுத்திருக்கீங் களே, அங்க போய்ப் பேசலாம். உங்ககிட்ட பேச எனக்கு நிறைய இருக்கு."

□ ரூ. ~~25~~ 50 பரிசு பெறுபவர் :
பி. பாலாஜி கணேஷ்,
111/எ, வேளாளர் தெரு,
கோவிலாம்பூண்டி,
அண்ணாமலை நகர் (வழி)
சிதம்பரம் வட்டம் - 608 002.

● எம். பிரபு,
குமராட்சி.

? ஜெ. மதிக்கிற மனிதர் இன்று யார்...?

! ஜூ.வி., தினமணி, எக்ஸ்பிரஸுக்குத் தப்புச் செய்தியுடன் புகைப்படம் தந்து, அதன் மூலம் வண்டி வண்டியாக மக்களின் அனுதாபத்தைத் தாம் சம்பாதித்துக் கொள்ள உதவிய மர்ம மனிதர்தான், இன்று 'ஜெ'யின் மதிப்பில் உயர்ந்து நிற்பவராக இருக்க முடியும்! அது சரி, யார் அந்த மர்ம மனிதர் என்கிற விஷயத்தை இன்னும் அந்தப் பத்திரிகைகள் மர்மமாகவே வைத்திருப்பதன் மர்மம் என்ன...?

● எஸ். நாகராஜன், மேல்பாடி.

? 'சந்தன வீரப்பன் என்னுடன் தனியாக ஒண்டிக்கு ஒண்டி துப்பாக்கிச் சண்டைக்கு வரத் தயாரா?' என்று தேவாரம் கேட்டிருப்பது குறித்து...?

! ஓர் ஐ.பி.எஸ். அதிகாரிக்கு இப்படியெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக சவால் விடுகிற நிலை வந்து விட்டதற்காக வருந்துகிறேன்.

● சி. பூங்கோதை, சென்னை – 78.

? பாலஸ்தீன் அதிபர் அராஃபத், இலங்கை அரசுக்கும் – புலிகளுக்கும் சமரசம் செய்து வைக்க முன்வந்தபோது சந்திரிகா மறுத்து விட்டாரே... அப்படியானால் இலங்கை அரசு சமரசத்தை விரும்பவில்லை என்று தானே பொருள்...?

! எந்த காரியத்தை யார் செய்வது; எந்தத் தகுதியின் அடிப்படையில்... என்று ஆராய வேண்டாமா? துண்டுக்குள் துப்பாக்கி ஒளித்து வைத்திருப்பவரின் 'உதவி'யை ஏற்க தயக்கம் இராதா? புலிகள் இயக்கத்துக்கு அராஃபத்தின் பி.எல்.ஓ. நிறைய உதவியிருக்கிறது.

● எல். எம். மங்கை, மதுரை.

? தமிழக சட்டமன்றக் கேள்வியின் நாயகன் யார்...?

! அழகிரிக்கும் சொக்கருக்குமிடையே போட்டி...

● எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் – 6.

? அரிசிக்குப் பெயர் போன தமிழகத்தில் கோதுமை உணவுகளைச் சாப்பிடச் சொல்லும் பிரசாரம் வலுத்து வருகிறதே?

! பற்றாக்குறையைச் சமாளிக்கத்தான். ஆனால், பற்றாக்குறை இல்லாத போதும் இந்தப் பிரசாரம் செய்யப்படுவது நல்லதே. ஒருவேளை கோதுமை உணவு உண்பது உடம்புக்கு ஆரோக்கியம்.

● ஆர். ஆர். தமன்,
சென்னை – 83.

? தீ மிதி காட்டுமிராண்டித் தனமான செயலா?

! ஒரு கட்சியின் உறுப்பினராக இருப்பவர், அந்தக் கட்சியின் கொள்கைகளைப் புரிந்து கொண்டு அதன்படி நடக்கத்தான் வேண்டும். அந்த அளவில் முதல்வரின் கண்டனத்துக்கு அமைச்சர் உள்ளானது சரியே. ஆனால், தீ மிதிப்பதையே காட்டுமிராண்டித்தனம் என்றெல்லாம் வர்ணிப்பது லட்சக் கணக்கான பக்தர்களின்

• பலமான...




• .... போட்டி!




முதல்வர் ஒரு சூப்பர் கம்ப்யூட்டராமே?





• தீ மிதிப்ப...



உள்ளங்களைப் புண்படுத்தும். 'பக்தி என்பது இதுவல்ல; எது பக்தி...' என்று பாஸிடிவ் அணுகுமுறையுடன் பேசினால் அது ஆரோக்கியம். முதல்வர், மக்களின் மனங்களை மிதித்து விடக்கூடாது.

● டி. பசுபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? தமிழகத்தில் விலைவாசி இப்போது எப்படி...?

! ஏற்கெனவே தாறுமாறு! போதாக்குறைக்கு லாரி வேலை நிறுத்தத்தால் ஏப்ரல் பட்ஜெட் ஏறுமாறாகி விட்டது!

● பஞ்சவர்ணமகன், கருப்பம்புலம்.

? 'பாரதீய ஜனதா – பகுஜன் சமாஜ் கூட்டணி ஆட்சி மூலம் உ.பி. மக்களைக் காப்பாற்றி விட்டோம்' என்கிறாரே வாஜ்பாய்...?

! ஜனநாயகம் நடைபெற்றால் மட்டுமே மக்களைக் காப்பாற்றியதாகி விடாது. எத்தகைய ஜனநாயகம் என்பதும் முக்கியம். நேற்று வரை பாம்பும் கீரியுமாக இருந்தவர்கள் இன்று இணைவது முதல்தர சந்தர்ப்பவாதம் தவிர வேறு இல்லை. பதவி ஆசை யாரை விட்டது! இந்த மாதிரி அரசியலால் மக்களுக்கு நன்மை விளையாது.



• ஐயோ, பாவம்!



• துண்டுக்குள் துப்பாக்கி!



• பிருதியாய் மதிப்பவர்...

● பா. அச்சுதன், சேத்துப்பட்டு.

? உங்களுக்குப் பிடித்த ஓவியர்...?

! ராமகிருஷ்ண விஜயத்தில் அவர் படங்களைப் பார்த்துவிட்டு கல்கிக்கு அழைத்து வந்தோம். 'குறையொன்றுமில்லை' தொடரின் மாபெரும் வெற்றியில் அவர் பங்கு கணிசமானது.

● வி.எஸ். கணேசன், சென்னை – 78.

? வருகிற பிரதமர்களெல்லாம் முத்திரை பதிக்கும் வித்தகர்களாக இருக்கிறார்களே... ராவ் சிரித்ததுமில்லை; கௌடா விழித்ததுமில்லை... நமக்கெல்லாம் விடிவு காலம்...?

! வரப்போவதுமில்லை!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? 'முதல்வர் ஒரு சூப்பர் கம்ப்யூட்டர்' என்று அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளாரே...?

! அமைச்சர்கள் சூப்பர் 'ஜுஸர்'களாக மாறாமல் இருக்க வேண்டும் என்று அந்த 'கம்ப்யூட்டரே' கேட்டுக் கொண்டிருக்கிறது!

● பி.பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி.

? தி.மு.க. ஆட்சியிலும்தான் நிறைய வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன... இப்போது மட்டும் ரஜினி கண்டனம் தெரிவிக்கவில்லையே...?

! ஆண்டவன் சொன்னால்தான் அருணாச்சலம் செய்வான்!

● எஸ். இலங்கேஸ்வரன்,
வாலாஜாபேட்டை.

? சித்துவின் இரட்டைச் சதம் எப்படி?

! நிதானமாக ஆடினாலும் பிரமாதமாக ஆடினார் – மெய்தான்! ஆனால், முக்கியமாகத் தேவைப்படும் சமயத்தில் நமது ஆட்டக்காரர்கள் 2, 3, 4 என்று ரன்களில் அவுட் ஆவதுதான் சோகம்! கைக்கெட்டிய வெற்றிக் கனியை வெஸ்ட் இண்டீஸ் அணி தட்டிப் பறித்து விட்டதே!

● ப. இராம்முருகன், சிவகங்கை.

? 'கடவுளை மற; மனிதனை நினை' என்பதை எல்லோரும் கடைப்பிடித்தால் மதக் கலவரமே ஏற்படாது என்கிறாரே சத்யராஜ்?

! பாதி உண்மை! எந்த மதமோ கடவுளோ மனிதனை மறக்கச் சொல்லவே இல்லை.

● எம். கதிஜா ஹனீஃபா, ஸ்ரீரங்கம்.

? 'சட்டப் பேரவையில் என்னைப் பற்றி உறுப்பினர்கள் வர்ணிப்பதை சபாநாயகர் அனுமதிக்கக் கூடாது...' என்று பேசினாலும், முதல்வர் அந்த வர்ணனைகளை விரும்பி ரசிப்பதாகத் தோன்றுகிறதே...?

! அப்படித் தோன்றவில்லை. சிவகங்கையில் புறம்போக்கில் கலைஞர் மன்றம் கட்டிவிட்டார்கள் எனக் கோபப்பட்டு, இடித்துத் தகர்க்கச் சொல்லி விட்டாரே! – ஸ்டாலின் திறந்து வைத்திருந்தும் கூட...

● பி. பிரகாஷ், மதுரை – 16.

? இந்தியாவின் சுதந்திர தினப் பொன் விழாவையொட்டி நாம் குடும்பத்துக்கு ஒரு மரம் நட்டால் என்ன...?

! • ஒரு மரம் நடலாம்.

• ஒருத்தருக்கு எழுத்தறிவிக்கலாம்.

• நம் இலக்கிய/கலை ரசனையை இன்னொருவர் புதிதாய்ப் பெற உதவலாம்.

• ஊழலுக்கு எதிராக ஒன்று படலாம்.



• பாதி உண்மை!



• புனித நீரைத் தலையில் ஏந்தி...

உலக அழகுகள் அனைத்தும் உமையிடம்!

கும்பகோணத்திலிருந்து அரசலாற்றங்கரையோடு செல்லும் சாலையில் பசுமைச் சூழலை ரசித்துக் கொண்டே சில கிலோ மீட்டர்கள் போனால் கருவேலி என்ற ஒரு குக்கிராமத்தை அடையலாம். அது இன்று திருவிழா கோலம் பூண்டிருக்கிறது! சுற்று வட்டாரத்து கிராம மக்களெல்லாம் வண்டி கட்டிக் கொண்டு குடும்பம் குடும்பமாக வந்து சேர்கிறார்கள். திடீர் கடைகளும் தண்ணீர்ப் பந்தல்களும் தோன்றியுள்ளன. அனைவரது முகங்களிலும் பெருமிதப் பூரிப்பு காணப்படுகிறது!

காரணம் என்ன என்று விசாரித்தால் தங்கள் மண்ணின் மைந்தர்கள் பற்றிய பெருமிதம்தான் என்று தெரியவருகிறது. வைத்தியநாதன், கிருஷ்ணமூர்த்தி என்ற சகோதரர்கள் எங்கோ சென்னையிலும் புதுதில்லியிலும் குடியேறியிருந்தாலும் சொந்த கிராமத்தை மறவாமல் அங்கு சிதிலமான கோயிலுக்குத் திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் நடத்தி வைக்க முன்வந்தார்கள். அவர்களே கணிசமான பணம் தந்ததுடன் பலரிடமும் வசூலித்து அளித்திருக்கிறார்கள். சுமார் எட்டு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி நடந்திருக்கிறது.

கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க திருவாவடுதுறை இளைய சந்நிதானம் சீர்மிகு காசி விசுவநாததேசிகர் வந்திருக்கிறார். யாகசாலையில் முறைப்படி எல்லா யக்ஞங்களும் நடந்து முடிந்து அபிஷேக தீர்த்தத்தைத் தலையில் சுமந்து கோயிலை வலம் வந்து கோபுரத்தின் மேல் சாரங்கள் வழியே ஏறுகிறார்கள். இனிய நாதசுவர இசை வெயிலைக் கூட மறக்கச் செய்கிறது. "ஹர ஹர மகாதேவா" என்ற பக்தர்களின் பரவச கோஷத்துக்கிடையில் கலசாபிஷேகம் நடக்கிறது.

கோயில் பிராகாரம், கோபுரம் எல்லாம் புதுக்கருக்குடன் பளிச்சிடுகின்றன. இத்தனை சிறப்பாகத் திருப்பணியை நடத்திக் கொடுத்திருக்கும் சிவப்பிரகாச ஸ்தபதியை வாழ்த்தாதவர்கள் இடையாது. 'இவர் ஸ்ரீரங்கம் ராஜகோபுரத் திருப்பணியையே நடத்தி வைத்தவராக்கும்' என்று பேசிக் கொள்கிறார்கள்.

பணம் வசூலித்து விடலாம்; ஸ்தபதி வந்து திருப்பணியை மேற்பார்வையிட்டு நடத்திக் கொடுத்து விடலாம்; ஆனால் ஊர் மக்கள் ஒத்துழைப்பு இன்றி என்ன செய்துவிட முடியும்? அவர்கள் ஒரு கணிசமான தொகையைத் தாங்களே திரட்டித் தந்தது பெரிய விஷயமல்ல; திருப்பணி நடந்து முடிந்த கோயிலை நன்கு பராமரித்து நித்திய பூஜைகள், உற்சவங்கள் எல்லாம் குறையின்றி நடத்தி வருவதாக உத்தரவாதம் அளிக்கிறார்கள்.

கும்பாபிஷேகம் காண வந்தவர்களை விழுந்து விழுந்து உபசரிக்கிறார்கள். பக்கத்துக் கூந்தலூர் கிராமத்தில் இரண்டு மூன்று வீடுகளில் தொடர்ந்து



• சர்வாங்கநாயகி

நாலைந்து நாட்களுக்கு மூன்று வேளையும் விருந்துபசாரங்கள்!


எங்கேயிருந்து பெற்றார்கள் இந்த நற்குணத்தை என்பது சுவாமி சந்நிதியில் நுழைந்ததுமே புரிந்து போகிறது. சற்குணம் என்பது எவ்வளவு பரந்து உயர்ந்தது என உணர்த்தும்விதமாக சற்குணநாதர் நெடிதுயர்ந்து கம்பீர சிவலிங்கமாகக் காட்சி தருகிறார். அம்மன் பெயர் அதைவிட அழகானது; சர்வாங்கநாயகி. புறஅழகும் அகஅழகும் இணைபிரியாதிருக்க வேண்டும் என்று உணர்த்துவது போன்று அம்பாளும் இறைவனும் திருப்பெயர் பூண்டிருக்கிறார்கள். இதை அப்பரும் உணர்ந்து பாடுகிறார் :



• சற்குணநாதர்

மட்டிட்ட குழலார் சுழலில்வலைப்
பட்டிட்டு மயங்கிப் பிரியாது நீர்
கட்டிட்ட வினைபோகக் கருவிலி
கொட்டிட்டை உறைவான் கழல்கூடுமே.

கருவேலி என்று இன்று அழைக்கப்படும் கருவிலி கிராமத்தின் புராதனப் பெயர் கொட்டிட்டை என்பதாகும். சிவபெருமான் ஆடுகின்ற பலவித நடனங்களில் கொடு கொட்டி நடனம் என்பதும் ஒன்று. அப்போது சில ஆபரணங்கள் சிதறி இங்கு விழுந்ததாகவும் புராணக் கதை உண்டு. தட்ச யக்ஞத்துக்குப் பிறகு தேவி பரமசிவனை மீண்டும் கவர்வதற்காக உலகின் சகல அழகுகளையும் தன்னிடம் கிரகித்துக் கொண்டு இங்கு வந்து தவமிருந்து தன் நோக்கத்தில் வெற்றி பெற்றதாக மற்றொரு தல வரலாறு. கருவறையில் சர்வாங்க நாயகியின் உயர்ந்த எழிலுருவம் இந்தக் கதைக்குச் சாட்சியமாக நிற்கிறது.



• கும்பாபிஷேகம் கண்ட சற்குணநாதர் ஆலயம்

சற்குணநாதர் உறையும் இத்தலத்தில் இரண்டு தலைமுறைகளுக்கு முன்னால் ஒரு பெரியவர் இருந்தார். அவர் உள்ளத்தை உணர்ந்து, அதற்கேற்ப 'குழந்தை ஐயர்' என்று ஊர் மக்கள் அன்புடன் அழைத்தார்கள். நிலம் நீச்சு என்று இருந்த போதிலும் வருமானத்தைப் பெரும்பாலும் அன்னதானத்துக்கே செலவிட்டார். பரம பக்தராக விளங்கி, மேரு ஸ்தாபித்து பூஜித்து வந்தார். அவர் காலத்துக்குப் பிறகு இந்த மேருவை பரமாச்சாரியாள் தருவித்து காஞ்சிபுரத்திலேயே ஸ்தாபிக்கச் செய்தார் என்பது குழந்தை ஐயரின் பெருமையை உணர்த்தும். 'அவர் அன்னதானம் செய்து முடித்த பிறகு ஊர்க் குளத்தில் நெய் மிதக்கும்' என்று இன்றும் கருவேலி கிராம மக்கள் சொல்கிறார்கள். சாப்பிட்டு விட்டு கையலம்புவதால் நெய் மிதக்குமெனில் எத்தனை உயர்ந்த உணவு படைத்தார் என்பதை நமது ஊகத்துக்கு விடுகிறார்கள்! இந்தக் குழந்தை அய்யரின் பேரன்கள்தாம் இன்று கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தி வைக்கும் வைத்தியநாதன், கிருஷ்ணமூர்த்தி சகோதரர்கள் என்பதில் ஊர் மக்களுக்கு நியாயமான பெருமிதம்.

இந்தப் பெருமையில் கல்கி வாசகர்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறது! சகோதரர்களில் மூத்தவரான வைத்தியநாதன், இந்த நிறுவனத்தின் தொடக்க காலத்தில் "கல்கி" அவர்களுக்கும் சதாசிவம் அவர்களுக்கும் உறுதுணையாக வந்து சேர்ந்து, பலவாறும் இதன் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு, இன்று இந்த நிறுவனத்தின் சேர்மனாக விளங்குகிறவர். எனவே, கருவேலி உறையும் சர்வாங்கநாயகி உடனாய சற்குணேசுவரரின் அருள் நம் அனைவருக்குமே உண்டு. வணங்கிப் பெறுவோம்.

- கி. ராஜேந்திரன்

சற்று ஒடிசலான கையெழுத்தில் 'மாதவி கிருஷ்ணன்' என்று எழுதிய வாழ்த்து தபாலில் வந்திருந்தது.

எங்கள் திருமண நாளைப் பத்து வருடமாய் ஞாபகம் வைத்திருக்கிற ஜீவன். அலுவலகத்திலிருந்து திரும்பியவனிடம் புவனா காப்பியும் வாழ்த்தையும் கொடுத்தாள்.

"காலைல தபால்ல வந்திச்சு."

"வேற போஸ்ட்?" என்றேன்.

"இல்லே."

அலுப்பில் காப்பிக்கு முதல் உரிமை கொடுத்தேன். குடித்த சுறுசுறுப்பில் வாழ்த்தைப் பிரித்தேன்.

'அன்புடன்.. மாதவி கிருஷ்ணன்!'

"மறக்காம அனுப்புறா..." என்றேன் வியப்புடன்.

"அவங்களுக்கு எப்ப மேரேஜ் டே?"

இது புவனாவின் கேள்வி.

"ஞாபகம் இல்லே. ஜூன்லயா... ப்ச்... தெரியலே..."

"பத்தாவது வாழ்த்து இது..."

வருடம் முழுவதும் வேறு கடிதப் போக்குவரத்தே இன்றி இந்த ஒரு நாளை மட்டும் அர்த்தப்படுத்தத் தவமிருக்கும் பிற முன்னூற்று அறுபத்து நாலு நாட்கள்.

"நான் ஒரு தேங்க்ஸ் கூட எழுதினது இல்லே!" என்றேன் குற்ற உணர்வுடன்.

"இதுல அட்ரஸ் இல்லே."

"டைரில எழுதி வச்சிருக்கேன்...."

என்னவோ தோன்றியது. இந்த தடவை 'தேங்க்ஸ்' என்று எழுத வேண்டும் போல். டைரியில் ஏதேதோ விலாசங்கள். சில தாள்கள் இடையே கிழிபட்டு. பாபுவின் கிறுக்கல்கள் வேறு.

"ஏய்.. புவனா.. இதுல பேப்பர் கிழிக்காதேன்னு எத்தனை தடவை சொல்றது?"

மணநாளில் ஏன் எரிச்சல் காட்டுகிறேன் என்று உடனே சுதாரித்தேன்.

"இல்லே. பாரேன். அட்ரஸைத் தேட முடியலே..."

"இங்கே கொண்டாங்க."

புவனாவிடம் நான் அடிக்கடி ரசிக்கிற விஷயம் அவள் நிதானம். வாங்கிப் பிரித்துப் பார்த்துக் கொண்டே வந்தவள் ஒரு பக்கத்தைக் காட்டினாள்.

"இதுவா... பாருங்க?"

'திரு. கே. எம். கிருஷ்ணன், நெ.பத்து. பாரதி நகர்.

"ஆமா. இதுதான். நான் அவ பேர்ல தேடினேனா..."


புவனாவிடம் இன்னொரு ரசனையான விஷயம்... திரும்பி மடக்க மாட்டாள். போய் விடுவாள் பேசாமல்.

ஒரு இன்லண்டைத் தேடி எடுத்து அமர்ந்தேன். என்னவென்று எழுதுவது...

"புவி... நீ ஏதாச்சும் எழுதறியா."

"நானா..."

ஒற்றை வார்த்தையில் குறுகத் தரித்த அர்த்தங்கள் நிமிட நேரம் எதிரே நின்று ஜாலம் செய்தன.



"இல்லே... என்னன்னு எழுதறது?"

"என்ன மனசுல வருதோ... அதை எழுதுங்க. எனக்கு உள்ளே வேலை இருக்கு."

போய் விட்டாள்.

கூப்பிட்டுக் கேட்க வேண்டும் போல் தோன்றியது. புவனா... உனக்குப் பொறாமையே வராதா? யாரோ ஒருத்தி உன் கணவனுக்கு மணநாள் வாழ்த்து அனுப்புகிறாளே...

'அன்புள்ள மாதவி...'

எழுதி உடனே 'கிருஷ்ணனையும்' சேர்த்

வாழ்த்து

ரிஷபன்

தேன்.

அன்புள்ள மாதவி கிருஷ்ணன். ச்சே...

ஏதோ அன்னியப்பட்டு நின்றது போல ஒரு பிரமை. இனி 'கிருஷ்ணனை' அடித்தால் அசிங்கமாகி விடும். விட்டாலோ... மனசு உறுத்தல்.

தனித்தாளில் எழுதி, பிறகு 'காப்பி' செய்து விடலாமா... அவசரத்திற்கு அதே டைரிதான் கிடைத்தது. என் பங்கிற்கு ஒரு தாளைக் கிழித்தேன்.

'நம் சின்ன வயசு நட்பு இன்னமும் உன்னால் ஜீவிக்கிறது. வாழ்க்கைப் பாதை நமக்காய் வெவ்வேறு வழித் தடங்களைக் காட்டியிருந்தாலும் அன்பால் நாம் பிணைக்கப்பட்டு நிற்கிறோம்.

சின்னக் குருவிக் கூட்டை விளையாட்டாய் நான் கலைத்த அந்தப் பழைய தினம்... உனக்கு நினைவில் நிற்கிறதா...

நீ அழுதாய். ஏனென்று எனக்கு அப்போது புரியவில்லை. 'போடீ... என் இஷ்டம்' என்று வாதித்தேன். கூடிழந்த குருவி சற்று நேரம் கீச்..கீச்சென்று சிறகடித்தபோது வேடிக்கை பார்த்தேன். திரும்பக் கட்ட இயலாத போது எனக்கு அழிக்கவும் உரிமையில்லை என்று உன் அழுகை பின்னொரு நாளில் உணர்த்தியது.

என் மண வாழ்வின் ஆரம்ப நாட்களில் ஒரு நாள் என் வீட்டிற்கு வந்தாய். புவனாவும் நீயும் சந்தித்த முதல் நிமிடம்.

ஏனோ உள்ளுக்குள் நடுங்கினேன்.

நாம் நிறைய நேரங்கள் ஒன்றாய்ச் சுற்றியிருக்கிறோம். ஆனால் உன்னை நான் முழுமையாய்ப் புரிந்து கொண்டதாய் உணர்ந்ததே இல்லை. புரிந்து கொள்ளவும் முயற்சித்தது இல்லை.

ஆனாலும் நீயும் புவனாவும் பார்த்துக் கொண்டபோது ஏன் மிரண்டு போனேன்?

உன்னில் எனக்குப் பிடித்துப் போன பல விஷயங்கள்- புவனாவுடன் ஒப்பு நோக்கி ஏன் என் மனம் அதிர்கிறது?

நீங்கள் இயல்பாய்ப் பேசிக் கொண்டீர்கள்.

அப்போது சமையல் ஆகவில்லை. நீ காய் கறி நறுக்க உதவினாய். இருந்தவற்றில் எனக்குப் பிடித்ததை மட்டும் அரிந்து கொடுத்தாய்.

பேசாமல் நீ பேசிய அந்த நிமிடம்.

புவனா ஏனோ படபடப்பாய் இருந்தாள்.

நீதான் முழுச் சமையலும் செய்தாய். என்னையும் உன் கணவரையும் அமர வைத்துப் பரிமாறினாய். பின்பு நீயும் புவனாவும் எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட்டீர்கள்.

அவ்வளவுதான். அதன் பிறகு நாம் நேரில் சந்திக்கவே இல்லை. எனக்கு மாற்றலானது. ஆறு வருடங்கள். பின்பு திரும்பி வந்தேன். இத்தனை வருடமாய் உன் வாழ்த்து மட்டும் தவறவே இல்லை.

மாதவி...(ஸாரி... கிருஷ்ணனற்று பிரயோகித்ததற்கு...) உனக்கு நான் ஏதோ ஒரு வகையில் கடன் பட்டு நிற்கிறேன். உன் பாசம்.... இல்லை... கருணை... சரி. ஏதோ ஒன்று. என்னைத் திக்கு முக்காட வைக்கிறது.

மாதவி.... எனக்கு அழுகை வருகிறது. என் தாம்பத்யம் சில நேரம் வானவில் ஜாலமாய்... சில நேரம் இடி, மழையுங்கூட. ஆனாலும் இந்த வாழ்த்து என்னை... என் வாழ்நாளை அர்த்தப்படுத்தி நிற்கிறது.

நான் நன்றி சொல்லப் போவதில்லை.

ஏன் சொல்ல வேண்டும்?

எந்த எதிர்பார்ப்புமற்று நீ காட்டும் அன்பிற்கு நான் கடன்படுகிறேன்.

இதுவே எனக்குப் பிடிக்கிறது.

உன் கணவரைக் கேட்டதாய்ச் சொல்.

குழந்தைகளுக்கு...

"ஏய்... புவனா..."

இரைச்சலிட்டேன்.

"என்ன?"

வெளியே வந்தாள்.

"அவ... குழந்தைங்க பேரு... என்ன?"

"பெரியவன் ரமேஷ்... சின்னவன் சுரேஷ்... லெட்டர் எழுதிட்டீங்களா."

கொடுத்தேன். படிக்கட்டும்.

படித்து விட்டு நிமிரும் வரை நிச்சலனமாய் நின்றிருந்தேன்.

"இப்படியேவா அனுப்பப் போறீங்க..."

திகைப்புடன் அவளைப் பார்த்தேன்.

"ஏன்... எதுக்கு கேட்கறே..."

"வேணாம்... இன்னொரு தடவை நீங்களே நிதானமாப் படிங்க."

லெட்டரை என்னிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டாள்.

மனசு திமிறியது. வேண்டாம். காலையில் படிக்கலாம். வைத்து விட்டேன்.

'அன்புள்ள மாதவி கிருஷ்ணன்,

உன் வாழ்த்து பார்த்து சந்தோஷம். உன் கணவரை விசாரித்ததாகச் சொல். குழந்தைகள் ரமேஷ், சுரேஷுக்கு என் அன்பு.

அன்புடன்
சங்கர்

இதுதான் மறுநாள் நான் போஸ்ட் செய்தது.

பாலம்

●● குடிசைத் தொழில் அல்லது சிறு தொழில் செய்ய விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

ஆர்.கே. மூர்த்தி,
16 C, இரண்டாவது லேன்,
வடக்கு ஸ்டேஷன் ரோடு,
கொரட்டூர், சென்னை - 76.

●● George Orwell எழுதிய The Animal Farm புத்தகம் தேவை. விலை, விவரம் கூறி எழுதவும்.

எம்.ஏ. பிரபாகர்,
8/13, சுபாஷ் தெரு, திருவிளந்தூர்,
மயிலாடுதுறை 609 001.

●● இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியுள்ள மலையாள எழுத்தாளர்களை ஒன்றிணைத்து ஓர் அமைப்பு உருவாக்க எண்ணம். தொடர்பு முகவரி :

சழும் மலர்மன்னன்,
இடும்பு வயல்,
சருகணி (அ) 623 405,
இராமநாதபுரம் (மாவ).

●● கும்பகோணம் ஜி.வி. கணேச அய்யர் எழுதியுள்ள "கடாக்ஷ சதகம்" நூல் தேவை. முப்பது வருஷங்களுக்கு முன் உரையுடன் வெளியிடப்பெற்றது.

ஏ.எஸ். பத்மநாபன்,
2G, ஜமால்ஸ் பார்க் அவென்யு,
67, மக்நிக்கல்ஸ் சாலை,
சென்னை - 600 031.


●● நேஷனல் பேனஸோனிக் வீடியோ ப்ரொஜெக்ஷன் டிவி மாடல் டிசி 4000 ஈ, ஃபினை பேக் டிரான்ஸ்ஃபார்மர் உதிரியாக எண்: டிஎல்.எஃப். 14415 எஃப் தேவைப்படுகிறது.

இரா. ராதாகிருஷ்ணன்,
த.பெ.எண்.759,
7-வது தளம், ஃபெனன்டென் ப்ளாசா,
பாந்தியன் சாலை, சென்னை - 8.

●● ஸ்ரீமதி சகுந்தலாபாலு எழுதிய Living Divinity என்ற ஸ்ரீ சத்யசாயிபாபா பற்றிய புத்தகம் விலைக்குக் கிடைத்தால் சந்தோஷப்படுவேன்.

கமலா வேங்கடராமன்,
Flat 20, ஸ்வாகதம் அபார்ட்மெண்ட்,
23, ஷெனாய்ரோடு, சென்னை - 600 034.

●● சிறிய அளவில் ஆங்கில நர்சரிப் பள்ளி தொடங்க விரும்புகிறேன். சொந்த வீடு, காலிமனை உள்ளது. விதிமுறைகள், அடிப்படைத் தகுதிகள் என்பன போன்ற தகவல்கள் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.



எம். கோபால்,
34, சேலாங்கேணித் தெரு,
நாகல்நகர், திண்டுக்கல் - 3.

●● ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய "வீரமா நகர்" வைத்திருப்பவர்கள் விலை குறிப்பிட்டு எழுதவும்.

வை. பாலசுந்தரம்,
வாழைக் குடியிருப்பு, அழியாநிலை,
அறந்தாங்கி (அ) 614 616.

●● ரஷ்யா சென்று மரைன் இன்ஜினீயரிங் படிக்க உள்ளேன். அங்கு படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது ஏற்கெனவே அங்கு படித்தவர்களின் அறிவுரை தேவைப்படுகிறது.

இரா. சிவகுமார்,
78/3 எல்.ஐ.ஜி. பிளாட்,
இந்திரா காலனி,
அசோக்நகர்,
சென்னை - 83.

●● மு.வ., கல்கி, சாண்டில்யன், கண்ணதாசன், அண்ணாதுரை ஆகியோர் எழுதிய நூல்களைப் பாதி விலைக்கு வாங்கிக் கொள்ள விருப்பம்.

ஜெ. எத்திராஜன்,
72, கிருஷ்ணா நகர்,
(மூவரசம்பட்டு அருகில்),
மடிப்பாக்கம் (அ) சென்னை - 91.


●● 1953-54ல் நெல்லை அப்பர் கிளாப்டன் பள்ளியில் படிக்கும்போது சக மாணவனை பெல்ட்டால் அடித்து விட்டேன். அதன்பின் அவன் பள்ளிக்கே வரவில்லை. மன்னிப்பு கோர விரும்புகிறேன். விலாசம் தெரிவிக்கவும்.

ஏ. நாயகம்,
Postal Electrical Circle,
113/71, S.C.Road,
Bangalore 560 009.

●● இராயபுரத்திலிருந்து வெளிவந்த "மலர்" என்னும் இலக்கிய மாத இதழில், 1956ல் நான் எழுதிய "அவரே அருமருந்து" என்ற கட்டுரை இடம் பெற்றிருந்தது. அந்த இதழை அனுப்பி வைத்தால் நன்றி.

இரா. கோபால்ராசன்,
268, உதயம் காலனி,
சென்னை
- 600 040.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது - ஆர்.)



சாவித்திரிக்குப் பதிலாக சரோஜா தேவியைப் போட்டுப் படத்தை முடித்து விடலாம் என்று சிவாஜி சொன்ன யோசனை நடைமுறை சாத்தியம் இல்லாத ஒன்றல்ல. பிரச்னை வரும்போது சினிமாத் துறையில்



அவ்வப்போது கையாளப்படும் உத்திதான இது. ஆனால் சில மனக்கசப்புகளைச் சந்திக்க வேண்டி வருமோ என்பதில் எனக்குத் தயக்கம் இருந்தது.

எதற்கும் என் பார்ட்னரான ஏ.பி.நாகராஜனிடம் கலந்து பேசிவிட்டு ஒரு முடிவுக்கு வரலாம் என்று ஆபீஸுக்குத் திரும்பி, நாகராஜனிடம் விஷயத்தைச் சொன்னேன்.

சொன்னதுதான் தாமதம். "லட்சுமி பிக்சர்ஸுக்கு நாம் முதலாளியா? சிவாஜி முதலாளியா? முடிவு எடுக்க வேண்டியது நாமதான்!" என்றார் அதிரடியாக.

எனக்கு பயங்கர அதிர்ச்சி! ஏ.பி.என். இப்படிப் பேசக் கூடியவர் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனாலும் என் அதிர்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளாமல் சமாளித்தேன். ஏ.பி.என்னிடமும் சரி; சிவாஜியிடமும் சரி- அந்த விஷயத்தைப் பற்றி அதற்குப் பிறகு பேசுவதையே தவிர்த்து விட்டேன்.

ஆனால், ஷூட்டிங் நின்றது, நின்றதுதான்!

வி. கே. ராமசாமி

அடுத்தபடியாக என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள் ஏ.பி.என். திடீரென்று, "சாமி! என்னை விட உங்களுக்கு அனுபவம் அதிகம். வயசும் அதிகம். திறமையும் அதிகம். நான் நினைக்கறேன்; உங்க அனுபவத்துக்கு, என்னைவிட நீங்க நல்லா கதை எழுதலாம்!"

இது என்ன கேலியா? கிண்டலா? சவாலா? அல்லது உண்மையிலேயே ஏ.பி.என் என்னால் கதை எழுத முடியும் என்று நம்புகிறாரா?

ஒரு நாளல்ல; இரண்டு நாளல்ல... அன்றிலிருந்து கிட்டத்தட்ட தினமும் என்னிடம் இதையே கேட்க ஆரம்பித்தார்.

ஒரு கட்டத்தில் 'சரி, எழுதித் தான் பார்ப்போமே' என்று தோன்ற, ஒரு நாள் இரவு பத்து மணிக்கு ஊர் அடங்கினபின் உட்கார்ந்து, 'நல்ல இடத்து சம்பந்தம்' என்று தலைப்பிட்டு, விறுவிறுவென்று ஒரு கதை எழுத ஆரம்பித்தேன்.

நாடக ஸ்கிரிப்ட்களைப் படித்த அனுபவம். ஒரு கதையை எப்படி சினிமாவுக்கு ஏற்றாற்போல அமைப்பது என்று ஏவி.எம்.மிலும் மாடர்ன் தியேட்டர்ஸிலும் வேறு பல நிறுவனங்களிலும் பயின்ற பாடம்.. ஒரே மூச்சில் விறுவிறு



• படம் ஸ்ரீஹரி

வென்று எழுதத் தொடங்கினேன்.

பாண்டி பஜாரில் அப்போது என் அலுவலகம் இருந்தது. கோடைக் காலமாதலால் புழுக்கத்துக்கு பயந்து, அறையில் உட்காராமல் வெளியே வாசல் போர்டிகோவில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தேன்.

அதிகாலை நான்கு மணி இருக்கும். என் பழைய நாடக ஆசிரியர் யதார்த்தம் பொன்னு சாமிப் பிள்ளை, என்னைத் தேடி வந்தவர், போர்டிகோவில் உட்கார்ந்து நான் ஏதோ தீவிரமாக எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு அசந்து விட்டார். கம்பெனி கணக்கு வழக்கு களைத் தான் நான் பார்த்துக் கொண்டிருக் கிறேன் என்று நினைத்து விட்டார் பாவம்!

ஏன் பிரிந்தார் ஏ.பி.என்?

"அடடே, ராமசாமி! நீ எவ்ளோ பொறுப் புள்ள மனுஷனாயிட்டே! ஒரு முதலாளின்னா இப்படி இல்ல இருக்கணும்! உடையவன் பார்க்கலைன்னா ஒரு முழம் கட்டைம்பாங்க. நான் ஒரு நாள் கூட இப்படிக் கணக்கு வழக்கு களைப் பார்த்ததில்லைப்பா!" என்று பேசிக் கொண்டே போனார்.

"அண்ணே, இது கணக்கு இல்லைங்க. கதை" என்றதுதான் தாமதம்...

"என்னது? கதையா? நீ எப்ப கதை எழுத ஆரம்பிச்சே? என்ன கதை?"என்று ஆர்வம் தாங்க மாட்டாதவராகக் கேட்டார்.

ஏ.பி.என். என்னைக் கதை எழுதச் சொல்லி நச்சரித்ததையும் ஒரு வேகம் வந்து நான் முயன்றுதான் பார்ப்போமே என்று தொடங்கியதையும் விரிவாகச் சொல்லி, "திட்டத்தட்ட எழுதி முடிச்சுட்டேன். இன் னும் ஒரு மணி நேரம் இருந்தீங்கன்னா முழுக் கதையையுமே படிச்சிப் பார்க்கலாம்!'' என்றேன்.

அவருக்குப் பொறுக்கவில்லை. எழுதிய வரை வாங்கி, விறுவிறுவென்று படித்து முடித்தவர், "அற்புதம் ராமசாமி! கதையும் நல்லா இருக்கு! நீ அங்கங்கே குடுத்திருக்கிற காட்சி விவரங்களும் பிரமாதமா வந்திருக்கு. எனக்கு சங்கரதாஸ் சுவாமிகள் ஞாபகம் வருது! எனக்குத் தெரிஞ்சி அவர் ஒருத்தர் தான் ஒரே ராத்திரியிலே ஒரு முழு நாடகம் எழுதக் கூடியவர். சினிமாவுல நீதான் அதை முதல்முதல்ல செய்திருக்கே!'' என்று பாராட்டியபோது பெருமிதமாக இருந்தது.

அவரைக் கூட்டிக் கொண்டு கீதா கபே சென்று டிபன் முடித்து விட்டு வந்து, படுத்தோம்.

மறுநாள் ஏ.பி.நாகராஜன் என் கதையைப் படித்துப் பார்த்தார். அவருக் கும் கதை பிடித்துப் போக, உடனே அதைப் படமாக எடுப்பது என்று முடிவா னது.

'வடிவுக்கு வளைகாப்பை' அப்படியே விட்டுவிட்டு, இந்த 'நல்ல இடத்து சம்பந்தம்' கதையை எடுக்கத் தொடங்கினோம். எம்.ஆர்.ராதா, சௌகார் ஜானகி நடித்த இந்தப்படம் ஒரு எழுத்தாளனாகவும் எனக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தது.



அதை விட விசேஷம், எம்.ஆர். ராதாவுக் குத் தொழிலில் ஒரு மறுமலர்ச்சி வந்ததே இந்தப் படத்தினால்தான்.

அதுவரை யாரும் செய்யாத வேடம். நினைத்துப் பார்க்க முடியாத அற்புதமான நடிப்பு.. உண்மையைச் சொல்வதென்றால், அந்தக் காலத்தில் வில்லன்-குணசித்திர

வேடங்களில் நடித்து வந்த பலரை ராதா ஓரம் கட்டி விட்டுத் தம் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்யத் தொடங்கியது இந்தப் படத்தில் தான்!

இதன் விளைவாக சிவாஜி, எம்.ஜி.ஆர். இருவரது படங்களிலும் தொடர்ந்து நடிக்கிற வாய்ப்பு அவரைத் தேடி வந்தது!

எம்.ஆர்.ராதாவைப் புகழின் உச்சிக்குக் கொண்டு போன படத்தின் கதாசிரியர், தயாரிப்பாளர்– நான் என்பதில் இன்றைக்கும் எனக்குப் பெருமிதம் உண்டு. அந்தப் படத்தைப் பார்த்து விட்டு, ஆர்.எஸ். மனோகர் என்னைத் தேடி வந்தார். "என்னண்ணே, நம்மைப் போட்டு ஒரு படம் எடுக்கக் கூடாதா?" என்று நேரடியாகக் கேட்ட அவரது சுபாவம் எனக்குப் பிடித்திருந்தது. ராதாவைப் போலவே மனோகரும் ஓர் அற்புதமான நடிகர். ஒரு சரியான படம் மாட்டினால் மனிதர் பெரிய நிலைக்கு உயரக் கூடியவர் என்று தோன்றியது.

'அந்தக் காரியத்தையும் நாமே செய்யலாமே' என்று 'தாயைப் போல பிள்ளை' என்ற படத்தை எடுத்தேன்.

அது நாலு தலைமுறைக் கதை. நட்புக்காக சிவாஜி அதில் ஓர் ஓரங்க நாடகம் (பொற்கைப் பாண்டியன்) நடத்திக் கொடுக்க, படம் நல்லபடியாக ஓடி வசூலானது. மனோகருக்கும் நல்ல பெயரும் நிறைய வாய்ப்புகளும் வரத் தொடங்கின.

இதற்கிடையில் சாவித்திரி குழந்தை பெற்று, திரும்பி வந்தார். பாதியில் நிறுத்தி வைத்திருந்த 'வடிவுக்கு வளைகாப்பு' படத்தை மீண்டும் தொடங்கி, சில நாட்களில் முடித்தோம். அந்தப் படமும் வெற்றி காண, ஒரு தயாரிப்பாளராக – வெற்றிப் படங்களைத் தொடர்ந்து கொடுப்பவன் என்கிற பெயர் எனக்கு வந்தது.

'கடவுளே, இந்த நல்ல பெயரும் புகழும் நீடித்து நிலைக்க வேண்டும்... என்று வேண்டிக் கொண்டு, அடுத்த படத்தைத் தொடங்கி, 'நவராத்திரி' என்று டைட்டிலையும் சேம்பரில் பதிவு செய்து விட்டோம்.

வந்தது பிரச்னை.

முந்தைய படங்கள் அனைத்தையும் விட மிகச் சிறப்பாகவும் மக்கள் பிரமிக்கும் விதமாகவும் இந்தப் படத்தை எடுக்க வேண்டும் என்று முதலிலேயே முடிவு செய்து விட்டேன்.

ஸ்கிரிப்ட் எல்லாம் தயாராகி விட, பைனான்ஸுக்காக அலைய ஆரம்பித்தோம், நானும் ஏ.பி.என்னும்.

அப்படித்தான் ஒரு நாள் முழுக்க பைனான்சியர்களைத் தேடி அலைந்து, பேசிக் களைத்து, திரும்பி வந்தோம். மாலை மயங்குகிற நேரம். அலுவலகத்தில் என் தம்பி மட்டும் இருந்தான்.

ஊரில் மளிகை வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்த அவனை சென்னைக்குக் கூட்டி வந்து, அலுவலகக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொள்ள வைக்க, யோசனை சொன்னதே ஏ.பி.என்.தான்!

களைத்து வந்த ஏ.பி.என். ஏதோ காரணமாக அவனிடம், "ஏம்பா, கேஷ் என்ன இருக்கு உள்ள?" என்று கேட்க சட்டென்று, "எல்லாம் நீங்க செலவழிச்சது போக பாக்கி தான்!" என்றான் என் தம்பி.

அதிர்ந்து விட்டோம். ஏ.பி.என்னோ, நானோ இதை எதிர்பார்க்கவில்லை.



கோபம் பொங்க, நான் என் தம்பியைத் திட்டித் தீர்த்து விட்டேன். "பெரியவர்களிடம் இப்படியா பேசுவது? அவர் யார் தெரியுமா? உன்னை இங்கே நான் வரவழைச்சதே அவரால் தான்! மன்னிப்புக் கேள் அவரிடம்" என்று உச்சக்குரலில் கத்தினேன்.

அந்தச் சம்பவத்தை விதி என்றுதான் சொல்ல வேண்டும். என்னவெல்லாம் நடக்கக் கூடாதோ அதெல்லாம் அடுத்தடுத்து வேகமாக நடந்தேறின.

"சாமி! உன் தம்பிக்கு என்னைப் பிடிக்கலை. நீயும் நானும் நண்பர்களா இருக்கறது வேற விஷயம். ஆனா, என் பொருட்டு, நீங்க அண்ணன் தம்பி அடிச்சிக்கறதுல எனக்கு



உடன்பாடு இல்லை. நான் விலகிடறேன்'' என்றார் தீர்மானமாக!

எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. மறைத்துக் கொண்டு, "அட என்னப்பா, சின்னப்பையன் தெரியாம என்னவோ சொல்லிட்டான். இதைப் போய் பெரிசா எடுத்துக்கிட்டு. நாளைக்கே அவனை ஊருக்கு அனுப்பிச்சிடறேன்'' என்று சமாதானம் செய்யப் பார்த்தேன்.

ஆனால் ஏ.பி.என் தம் முடிவில் உறுதியாக இருந்தார்.

'மரியாதைங்கறது சொல்லி வாங்கறது இல்லை, சாமி! இந்த எடத்துல என் மரியாதையை இனியும் நான் காப்பாத்திக்கணும்னா, நான் விலகிடறதுதான் சரி!'' என்றார் உடைந்த குரலில்.

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. உடல் நடுங்கியது. வெண்ணெய் போல வழுக்கிக் கொண்டு வெற்றிப் பாதையில் நடை போடத் தொடங்கிய சமயம் இப்படியொரு சரிவா என்று கலங்கினேன். ஏ.பி.என்.னிடம் எத்தனையோ விதமாக கெஞ்சிக் கேட்டுப் பார்த்தேன். அவர் சம்மதிக்கவில்லை. பிரிவது உறுதி என்றாகிவிட்டது.

அந்தக் கொடுமை என் எதிரிக்குக் கூட வரக்கூடாது. எத்தனை வருடப் பழக்கம்! எப்படியெல்லாம் இருந்திருக்கிறோம்! பிறர் பார்த்துப் பொறாமைப்படும் விதமான நட்பல்லவா எங்களுடையது?

எந்த வேணுவிடமிருந்து அவர் பிரிந்து வர நான் காரணமாயிருந்தேனோ, அதே எம்.ஏ. வேணுதான் நேரில் வந்து எங்களைச் சுமுகமாகப் பிரித்து விட்டார்! தொழில் அடிப்படையில் பிரிந்தாலும் நட்பு ரீதியில் இணைந்தே இருப்பது என்று தான் நான் மனத் தில் நினைத்துக் கொண்டேன். அவரும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பார்.

பிரிவுக்கு முன்பே, சேம்பரில் பதிவு செய்து விட்ட 'நவராத்திரி' டைட்டில் இப்போது யாருக்கு சொந்தம்?

"அந்த டைட்டிலை மட்டும் எனக்குக் கொடுத்து விட முடியுமானால் சந்தோஷம்'' என்று ஏ.பி.என் சொன்னார். ஒருகணம் கூடத் தயங்கவில்லை. "டைட்டில்தானே? அது உன்னுடையதுதான்!'' என்றேன் உடனே.

ஏ.பி.என். மிகவும் நெகிழ்ந்து போனார். ஆனால் என் உடன் இருந்தவர்கள், என்னைப் போட்டுத் துளைக்க ஆரம்பித்து விட்டார்கள். 'டைட்டிலை ஏன் கொடுத்தீர்கள்? பிரிந்து போகிற மனுஷனுக்கு டைட்டில் மட்டும் வேண்டியிருக்கிறதா? எனப் பலவாறாக அவரை இடித்துப் பேசத் தொடங்கினார்கள்.

நான் தீர்மானமாக இருந்தேன். 'உயிருக்கு உயிராக உடனிருந்த நண்பனே போகிறபோது, கேவலம் ஒரு டைட்டில் பெரிய விஷயமா?' இதுகுறித்துப் பேச வந்தவர்களை நிர்தாட்சண்யமாக விலக்கினேன்.

இப்போது யோசித்தாலும் வருத்தம் வருகிறது. ஏ.பி.என் என்னை விட்டுப் பிரிந்ததற்கு என் தம்பி கேட்ட அந்த ஒரு கேள்விதான் காரணமா?

அதுவும் ஒரு காரணம்.

அந்தக் காரணத்தைவிட முக்கியமான. சில காரணங்கள் இருந்தன. அவை....


(அடுத்த வாரம்)

அக்கிரமம்!

19.3.97 அன்று '11 H' என்ற பஸ்ஸில் ஏறி, ஆபீஸ் வரும் போது பாண்டிபஜார் தாண்டி சிறிது தூரத்தில் (அது பஸ் நிறுத்தம் கூட இல்லை) நிறுத்தி, "டயர் பங்க்சர்; எல்லோரும் இறங்கி வேறு பஸ்ஸில் செல்லுங்கள்'' என்று கண்டக்டர் கூறியதைத் தொடர்ந்து, அலறி அடித்து ஆட்டோ பிடிக்க ஓடினோம். ஆனால் 20 – 25 பேர் இறங்கியதும் கண்டக்டர் விசில் கொடுக்க அதே பஸ் சீறிக் கொண்டு புறப்பட்டது! போதாக் குறைக்கு பஸ்ஸை விட்டு வெளியே நிற்பவர்களைப் பார்த்து கிண்டலாகச் சிரிப்பு வேறு!

இந்த அக்கிரமத்தை யாரிடம் சொல்லி அழுவது?

– சந்திரா ஜானகிராமன்



தஞ்சை பெரிய கோயில்.
இங்குதான், **உங்கள்** வருங்கால **ரகசியம்** ஒளிந்திருக்கிறது.

மலைகளற்ற தஞ்சை மண்ணில் மலைபோல் உயர்ந்து நிற்கும் 11ம் நூற்றாண்டு பிரகதீஸ்வரர் ஆலயம். இதன் விமானம் விண்ணை முட்டி நிற்கும். அதன் நிழலோ தரையைத் தொட மறுக்கும் - உலகில் எவருக்கும் அடிபணியாத ராஜ ராஜ சோழனைப்போல். இதைப் போல், இந்தியப் பாரம்பரியத்தின் சான்றாய் விளங்கும் சின்னங்கள் எத்தனையோ! இந்த வரலாற்றுச் சின்னங்கள் தான் உங்கள் வெற்றிச் சின்னங்கள்.

சித்திரைத் திருவிழா
உலகோர்க்கும் உற்சாகம்!
ஏப்ரல் 5-14, 1997

* அறிமுகப்படுத்துவோர் பரிசு தற்போதைய சந்தாதாருக்கு மட்டுமே. *

எப்படி என்றறிய ஆவலாயிருக்கிறதா?

தமிழ்ப் புத்தாண்டையும், இந்திய நாட்டின் 50ம் விடுதலையாண்டையும் கொண்டாட ஸ்ரீராம் சிட்ஸ் எண்ணியுள்ளது.

இந்த தமிழ்ப் புத்தாண்டில் ஸ்ரீராம் சிட்ஸின் சந்தாதாரர் என்கிற முறையில் உங்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது. அது தவிர அடையாள பரிசுக் கூப்பன் ஒன்றையும் பெற்றிருப்பீர்கள். உங்கள் உறவினரையோ, நண்பரையோ, சக அலுவலரையோ ஸ்ரீராம் சிட்ஸின் புதிய சந்தாதாரராக அறிமுகப்படுத்தும்போது அந்த அடையாளக் கூப்பனை எடுத்து வாருங்கள். அறிமுகம் செய்த பின், பரிசுக் கூப்பன் அடங்கிய உறை ஒன்றை கிளை மேலாளரிடம் பெற்று கோடிட்ட பகுதியில் சுத்தரியுங்கள். தாஜ்மகால்,மகாபலிபுர கோயில் போன்ற பாரம்பரியச் சின்னத்தின் பெயர் ஒன்றையோ அல்லது 1000 என்ற எண்ணையோ காண்பீர்கள். அப்பெயருக்கு இணையான அறிமுகப்படுத்துவோர் பரிசினை, கிளை மேலாளரிடம் பெற்றிடுங்கள். SS பௌல் முதல் தங்க நெக்லஸ் வரை பரவசமூட்டும் பரிசுகளை* பெறவிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல! நீங்கள் அறிமுகப்படுத்தும் நண்பருக்கும் ஓர் அழகான சந்தாதாரர் பரிசு காத்திருக்கிறது.

நேரடியாய் சேரும் சந்தாதாரர்களுக்கும் பரிசு உண்டு.

பரிசுகளைப் பெற்று, எதிர்காலம் பற்றிய உறுதியான கனவுகளோடு வெற்றி நடை போடுங்கள்!

ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்.
'சுப்ரமணியன் பில்டிங்', 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன் : 8520700, 8522651, 8523932, 8525536, 8520797.

இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீடு.

சீட்டு தொகை *			சந்தாதாரர் பரிசுகள்
1.	250 X 40	10,000	SS பைகோலை பாட்
2.	500 X 30	15,000	SS CB தேக்ஷா
3.	625 X 40	25,000	கும்பகோணம் SS ஃபான்ஸி கன்டெய்னர்
4.	500 X 60	30,000	செல்லோ ஸ்டோர் ஃப்ரெஷ் (3)
5.	1,000 X 50	50,000	SS CB மூடியுடன் கூடிய பருப்புச் சட்டி
6.	2,500 X 30	75,000	ப்ரெஸ்டீஜ் SS CB ப்ரை பேன்
7.	2,500 X 40	1,00,000	காஸி SS CB ஸ்கில்லெட் - 200 ml
8.	5,000 X 30	1,50,000	ப்ரெஸ்டீஜ் ஹாட் பேன் (மூடியில்லாமல்) - 200 ml
9.	5,000 X 40	2,00,000	ஹாக்கின்ஸ் நான் ஸ்டிக் லாட்டுவன் தவா
10.	10,000 X 30	3,00,000	ஜெமினி கிட்செட்
11.	20,000 X 25	5,00,000	4 கிராம் தங்க காசு

* முன் அனுமதி பெறப்பட்டது.

* நுழைவுக்கட்டணம் தனி

24

பூக்கள் நாளையும் மலரும்

வள்ளிக்குப் புதிய பொறுப் பொன்று ஏற்பட்டிருந்தது. அவள் அலுவலகம், புதிய வியாபாரத்தில் நுழைந்திருந்தது. வீட்டை அலங் கரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அதை நிறைவேற்று வதாகிய வியாபாரம். இந்தப் பொறுப்பை, வள்ளியிடம் ஒப்படைத்தான், சண்முகம்.

இது எனக்குப் பரிச்சயம் இல்லை என்று சொல்லி விடலாம் என்று முதலில் நினைத்தாள் வள்ளி. இந்தப் புதிய வியாபாரம் தனக்குத் தெரியாது என்று அதை ஒப் படைத்த முதலாளி சண்முகத் துக்கும் தெரியும். அப்படி இருந்தும், ஏன் ஒப்படைத்தான்? அவள் அதைக் கற்றுக் கொள் வாள் என்று அவன் நம்பியே, அதைச் செய்திருந்தான். அந்த நம்பிக்கையைப் பாழடையச் செய்யலாமா என்று யோசித் தாள் வள்ளி. கூடாது. ஒரு ஊழியர் என்ற முறையில் அது சரியில்லை. மேலும், எந்த வேலையைத்தான், ஒருத்தர் கருவிலேயே கற்றுக் கொண்டு வருகிறார்? இல்லை.

வானொலியில் ரவிசங்கர் சிதார் வாசித்துக் கொண்டிருந் தார். உருக்கிக் கொண்டிருந் தார் உயிரை! அவரது விரல் கள் கூட, கருவாசலைக் கடந்து வருகையில், மடங்கியபடி தான் இருந்தது. வித்தை படியப் படியத்தானே, அவருக்கும் விரல்களில் சிறகு முளைத்தது? வள்ளி, அந்தப் பொறுப்பைத் தைரியமாக ஏற்றுக் கொண் டாள்.

"இந்த வியாபாரத்தில் 'கஸ்டமர்கள்' யார்?" என்று தொடங்கி வள்ளி, சண்முகத்துடன் விவாதித்தாள்.

"மத்தியதர வர்க்கம். சென்னை தலைமைச் செயலகத்தில் பணிசெய்து கொண்டு, திருவல்லிக்கேணியில் ஒண்டுக்குடித்தனவாசம் பண்ணிக் கொண்டு (ஆபீசுக்குப் பக்கம் சார்) எதிர்காலத்தில் சௌக்கியமாக, பிக்கல் பிடுங் கல் இல்லாமல் இருக்கலாமே என்று பணம் கடன் வாங்கி, வீடு கட்டி, வாடகைக்குக் கொடுத்து விட்டு, நிகழ்காலத்தை இழந்து விடுகிற மத்தியமர் கள். இவர்களின் விசேஷ மான குணம் ஒன்று உண்டு. கட்டிய வீட்டில், ஒரு வருஷமாவது குடி இருக்க வேண் டாமோ என்று குடி இருக்கிற பாவப்பட்ட



மனுஷர்கள். இவர்களே நம் கஸ்டமர்கள். அவர்களைத்தான் நாம் சந்திக்க வேண்டும். அவர்கள் கஷ்டத்தையும் குறைக்க வேண்டும். நாமும் சம்பாதிக்க வேண்டும்..."

"எனக்குத் தோன்றுகிறது. இவர்கள் சோப்புக் கட்டி தயாரிக்கிற மிஷின்கள். மிஷின்கள் சோப்பு போட்டுக் குளிப்பதில்லை..."

சண்முகம் சிரித்தான்.

"இது இவர்களது பிரச்னை மாத்திரம் இல்லை. மனிதகுலப் பிரச்னை. நாம் நடக்கும் போது நடக்கிறதில்லை. வாழும் போதும் வாழ்கிறதில்லை..."

வள்ளி, கொடுங்கையூரில் ஒருவரைச் சந்தித்தான். தலைமைச் செயலக, சின்ன 'ஓட்டுகளில்' அவர் ஒருவர். அவருக்கு வீடு; ஒரு கனவு. பாரதியாருக்கு இருந்தது போல. வீட்டுக்கு முன்னால், நாலைந்து தென்னை மரம். கட்டாயம் ஒரு வேம்பு. வேப்பமரக் காற்றுக்கு பல மருத்துவப் பலன்கள். சென்னைக்கு மிக "அருகே" இருந்த கொடுங்கையூரில், தனி வீடொன்றைக் கட்டிக் கொண்டார்.

"மேடம். நீங்களே பார்த்துக் கொண்டிருங்கள். அடுத்த நூற்றாண்டில், மதுராந்தகம், மரக்காணம் தொடங்கி, திண்டிவனம் கடந்து சென்னையின் டவுன் ஷிப் வளரப் போகிறது. பாருங்கள்..." என்றார். அவரது சகதர்மிணி அந்தக் கனவு காண்பவராக இல்லை.

"ஊருல இருக்கிற திருடர்கள், முகமூடிக் கொள்ளைக்காரர்கள், தீவிரவாதிகள், எல்லாரும் இருக்கிற ஊராமாம் இது. பக்கத்து வீட்டு மாமி சொன்னாளே..." என்றாள்.

வீட்டு உரிமையாளரான, பட்டாபியோ, தத்துவமாகச் சொன்னார்.

"அசடு... ஊரில், நாட்டில் யார்தான் திருடர் இல்லை?" என்று சொன்ன பட்டாபி, வள்ளியின் பக்கம் திரும்பி, "என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். பட்டாபி எங்கு குடியிருப்பது நல்லது என்பது



பிரபஞ்சன்

குறித்து, வள்ளி சொல்வதற்கு ஏதும் இல்லை. பட்டாபியின் காதோரம் நரைத்து இருந்தது. நிச்சயம், அது வீடு கட்டத் தொடங்கிய பிறகு ஏற்பட்டதாக இருக்கலாம் என்று வள்ளிக்குத் தோன்றியது.

"உண்மையில், நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் பட்டாபி.

"நாங்கள் உங்கள் வீடுகளை அலங்காரம் பண்ணுகிறோம். பங்களாவோ, சாதாரண வீடோ, அது அழகாக இருக்க வேண்டும். அதை அழகாக இருக்கும்படியாக, நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம்."

"வீட்டுக்கு வெள்ளை அடிக்கிறோம். அதுக்கும் மேலே என்ன அழகு?"

"பட்டாபி, நிச்சயம், கல்லூரியில் படித்து, அரசின் சின்னக் கடையாணியாகவும் இருக்கிறார்... அவருக்கும் கூட, அழகு குறித்த பிரக்ஞை இல்லையே..." என்று இந்தச் சந்திப்பிற்குப் பின் சண்முகத்திடம் சொன்னாள் வள்ளி.

''ஆம்'' என்று சொன்னவன், ''நாம் தொலைத்துவிட்ட சமாசாரங்கள் இவை. நம் மூதாதையர்கள் பூக்களோடு வாழ்ந்தவர்கள். நாம் வாழ்ந்த நிலங்களுக்குக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பூக்களின் பேரை இட்டுச் சிறப்பித்தவர்கள். அவர்களின் வாரிசுகளாகிய நமக்கு அழகு தெரியலை. காதலைப் பாடாத கவிதைகளோ, பேசாத சினிமாவோ கூட இல்லை. ஆனால், நமக்குக் காதல் தெரியவில்லை. நம் கோவில்கள் சிற்பத்துக்கு நிகரற்றவை. நம் தெருவில் நிற்கிற சிலைகள், சிற்பக் கலையையே இழிவுபடுத்துபவை. நாம் அழகை இழந்து போனோம். ஆகவே வாழ்க்கையையும் இழந்து போனோம்.''

அண்ணா நகரில், ஓர் அழகிய திருமண மண்டபத்தில், ஜனனி - ஆல்பர்ட்டின் திருமண வரவேற்பு நிகழ்ந்தது. ஜானு மாமி, என்றோ ஒரு யுகத்தில் எடுத்திருந்த பட்டுப் புடைவையைக் கட்டிக் கொண்டு நின்றாள்.

வள்ளி, மாமியிடம் சொன்னாள்.

"மாமி. உங்களைப் பார்க்கறச்சே, தபால்காரரைப் பார்ப்பது மாதிரி வித்தியாசமாக இருக்கு."

"அது என்ன தபால்காரரைப் பார்ப்பது?"

"தபால்காரரைக் காக்கி உடையோடேயே பார்த்துக் கொண்டு இருந்து விட்டு, அவரை வேட்டி சட்டையோடு பார்த்தால், நமக்கு அடையாளமே தெரியாமல் இருப்பார். அது மாதிரி இருக்கு. நீங்களும் உங்க புடைவையும். இது என்ன, நீங்க திரண்ட போது எடுத்ததா?"

''சீ...'' என்றாள் மாமி. ''இருந்து சாப்பிட்டுட்டுப் போ... அந்த 'மெஸ்' சோத்தை நீதான் மெச்சுக்கணும்'' என்று விசனமுடன் சொன்னாள் மாமி.

"மாமி. இந்த தேசத்துல, இந்தச் சோறு கூட சாப்பிட முடியாது..."

"போதும்.. லெக்சர் வேணாம். வந்து சமத்தா பெண் பக்கத்திலே நில்லு. அனு இப்படி வராமே ஏமாத்திட்டா, பாரு. நீதானே ஜனனிக்கு ரொம்ப நெருக்கம்."

"ஐயோ நானில்லை மாமி, நெருக்கம்."

"பின்னே, வேறு யார்?"

''ஆல்பர்ட்''

உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த சண்முகம், வாய்விட்டுச் சிரித்தான்.

"என்ன சிரிப்பும், கும்மாளமும்?" என்றபடி வந்தாள், பிந்து. சண்முகம், பிந்துவிடம் கேட்டான்.

''பிந்து, சொல்லுங்க. ஒரு பெண்ணுக்கு யார் ரொம்பவும் நெருக்கம்?''

''மாப்பிள்ளைன்னு சொல்வேன்னு நினைக்கறீங்களா? ஒருத்திக்கு நெருக்கம், அவளுக்கு



அவள்தான். அவளே அவளுக்கு நெருக்கமாக இல்லைங்கிற போதுதான், மற்றது எல்லாம்."

வள்ளிக்கு இது புரிபடாமல் இருந்தது.

"எப்படி பிந்துக்கா? என்னை நான் நேசிக்கிறேன். நான், இன்னொருத்தரை நேசிக்க முடியாதா?"

"உன் அளவுக்கு, நீ வேறு யாரையேனும் நேசிக்க முடியுமா? சண்டை, சச்சரவு என்று எப்படி வருகிறது? என்னை இன்னொருத்தர் குறைத்து நேசிக்கிறார் என்று நான் புரிந்து கொண்டதால்தானே?"

வள்ளி, உடனே சொன்னாள்.

"எனக்கு மேலே போன விஷயம் இது" என்று கழன்று கொண்ட வள்ளி, ஜனனியின் அருகில் போய் நின்றாள். ஜனனியின் முகம், மகிழ்ச்சியில் பூரித்து, இரண்டாம் நாள் பௌர்ணமி நிலா போல், ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இது உள்ளத்தில் இருக்கும் ஒளி. அவள் மனம் நிறைந்தது.

"என்ன இவ்வளவு லேட், வள்ளிக்கா?" என்று உரிமையுடன் கோபித்தாள் ஜனனி. ''நீங்கள்ளாம், காலையிலேயே வந்து இருக்கணும்...''

''அதான் வந்துட்டேனே''

கல்யாணப் பெண் அலங்காரம் பண்ணுகிறேன் என்று ஜனனியின் முகமே மாறிப் போயிருந்தது. கரிய புருவத்துக்கு மேலே, வெள்ளை, சிவப்புப் புள்ளிகள். உதடுகள், அநியாயத்துக்குச் சிவந்து கிடந்தன. கண் மையோ, காதுக்கும், கண் ஓரத்துக்கும் பாலம் போட்டிருந்தன. கன்னங்களில் இரண்டு ஆப்பிள் பழம் இருக்கிற மாதிரி அரிதாரச் சிவப்பு. இத்தனை கோரங்களையும் மீறி, ஜனனி அழகாகத் தென்பட்டாள்.

திருமணத்துக்கு வந்தவர்கள், கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து போன பிறகு, வள்ளி கேட்டாள்.

"சந்தோஷம்தானே?"

ஜனனியின் கண்களில் நீர் ததும்பியது, கரைக்குள் மிதக்கும் குளம் மாதிரி.

"ரொம்பக்கா."

"எப்போ, மாப்பிள்ளை வீட்டுக்கு?"

''நம்ம பிரேமதாசன் என்னதான், புது மாப்பிள்ளையா இருந்தாலும், அதுக்காக இப்படியா?''

''ஏன்?''

''காலையில, அட்டெண்டன்ஸ்ல கையெழுத்தைப் போட்டுட்டு, வீட்டுக்குப் போக இன்னும், 'எட்டு மணி' நேரம் இருக்கேன்னு பெருமூச்சு விடறான்!''

— ஆர். வசந்தகுமார்

"இன்று ராத்திரியே. இனி அதுதான் என் விலாசம். நீங்க அடிக்கடி வந்து என்னைப் பார்க்கணும் அக்கா."

''அதுக்கென்ன? கட்டாயம். உன்னூர் தானே? நாம் அடிக்கடி சந்திக்கலாம்...''

ஜனனி, புறப்பட்டுக் காரில் ஏறுகிற போது, தேவகி மகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள். எல்லா வருத்தங்களையும், கோப தாபங்களையும் உதிர்த்துவிட்டு மனுஷியாக மட்டுமே ஆனாள், தேவகி.

ஜானு மாமி தலையிட்டுச் சொன்னாள்.

"வாழப் போற நேரத்துல, அழலாமோடி, அசடே. ஜனனி, எங்கே போறா? தோ நாலு எட்டுலே நடந்து போற தூரம். இதுக்குப் போய் அழறியே..."

ஜனனி எல்லோரையும் பார்த்துக்கொண்டு புறப்பட்டாள்.

பிந்து சொன்னான்.

''சந்தோஷமா இரு. எல்லாத்தையும் சரியாப் பாரு. கோணலா பார்த்தா, எல்லாமே கோணலா தெரியும். எதைப் பற்றியும் சந்தேகப் படாதே..."

"சரிக்கா."

வண்டி புறப்பட்டது.

வள்ளி, கண்களைத் துடைத்துக் கொண்டாள். சண்முகத்துடன் புறப்பட்டாள்.

காரை பூட்டிக் கொண்டு வந்தான் சண்முகம். அவன் அருகில் வள்ளி இருந்தாள். வள்ளி, அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டு வருவதை அவன் பார்த்தான்.

"வள்ளி, எதற்காக அழுகை?"

"எனக்காக."

"உங்களுக்காகவா!"

"என் திருமண நாள் நினைவுக்கு வந்தது. எத்தனைக் கனவுகளோடு.. எத்தனை நம்பிக்கையோடு இவருடன் புறப்பட்டேன். எல்லாம் வீணாகிப் போய் விட்டதே? ஏன்? என மேல் தப்பா? ஏன் இப்படி நடக்க வேணும்?"

பதில் சொல்லாமல், காரைச் செலுத்திக் கொண்டிருந்தான், அவன்.

"இன்ஜினியர் மாப்பிள்ளை என்றார்கள். மாப்பிள்ளை படிப்பு, உத்தியோகம், சம்பளம், சாதி, குலம், கோத்திரம் எல்லாம்தான் பார்த்தோம். அவன் மனுஷனா என்பதை மட்டும் பார்க்காமல், அவனிடம் ஒப்புக் கொடுக்கும் படியாகி விடுகிறதே, பெண்கள் பிழைப்பு?"

"மனிதப் பொருத்தம், அதிர்ஷ்டத்தில் இருக்கிறதுதான் துரதிருஷ்டம். லாட்டரி மாதிரி ஆகிவிட்டது வாழ்க்கை. ஏழு லட்சம் பேரில், ஒருத்தருக்குப் பரிசு விழுகிறா மாதிரி, ஆயிரம் பேரில் ஒருத்தர் சந்தோஷமாக இருக்கும்படி ஆச்சு."

"பெண்ணே கணவனைத் தேர்ந்தெடுக்கிற நிலை இருந்தால், நன்றாக இருக்கும்."

"வள்ளி, ஒரு விஷயம். கோபிக்காமல் பதில் சொல்லுங்கள். அர்த்தநாரி சாரை நீங்கள் சந்தித்துப் பழகி இருந்தால், அவரை நீங்கள் கல்யாணம் பண்ணி இருப்பீர்களா?"

"சந்தித்த சில நாட்களில், அவர் முகம், அசல் முகம் தெரிந்திருக்கும். நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு இருக்க மாட்டேன்."

''அப்படியானால், காதல் திருமணங்கள் எல்லாம் வெற்றி பெற்று இருக்க வேண்டுமே, ஏன் அவை தோற்கின்றன?"

வள்ளி, சிரித்துக் கொண்டு சொன்னாள்.

"காதலர்கள், காதலிக்கும் போதும் பொய்யாகவே காதலித்து இருப்பார்கள். அல்லது உடம்புக் கவர்ச்சியைக் காதலாக அவர்கள் நினைத்து இருக்க வேண்டும். காதல் என்பது ஒருத்தரை ஒருத்தர் அறிந்து கொள்கிற ஆர்வமாக இருக்கணும், எல்லா வகையிலும்..."

அவர்கள், விடுதியை நெருங்கினார்கள். வாசலில் இறங்கிக் கொண்டாள், வள்ளி.

"வார்டன் ஏதாவது சொல்வாரா?"

"மாட்டார். கல்யாணப் பத்திரிகையைக் காட்டி 'லீவ்' சொல்லிக் கொண்டேன்."

"நல்ல மாணவி நீங்கள்."

அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

வார்டன், எதிர்பட்டவன் சொன்னாள்.

"உங்களிடம் நான் பேச வேண்டும். என்னுடன் வாருங்கள்."

அறைக்குச் சென்றவள், சொன்னாள்.

"நீங்கள் சாயங்காலம் வெளியே போனதும், மிஸ்டர் அர்த்தநாரி என்பவர் வந்தார். அவர் மனைவிதான் நீங்கள் என்றார். அவரை விட்டு ஏதோ கோபத்தில் நீங்கள் வந்து விட்டதாகச் சொன்னார்."

"சரி"

"சண்முகம்..."

"சொல்லுங்கள்."

''தப்பாக நினைக்க வேணாம், வள்ளி. இங்கு வந்த இந்தச் சில மாதங்கள் உங்களை நான் 'வாட்ச்' பண்ணினேன். ரொம்ப நல்ல பெண்ணாய் இருக்கிறீர்கள். எனக்குத் தப்பாக எதுவும் தோணலை. உங்கள் கணவர் கூட

உங்கள் மேல், எந்தப் புகாரும் சொல்லவில்லை. மாறாக, நீங்கள் எப்போ வந்தாலும் உங்களைச் சேர்த்துக் கொள்ளத் தயார் என்கிறார்..."

"சரி..."

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பது உங்கள் சொந்த விஷயம். எனக்கென்னமோ, அது சரி என்று படுகிறது. இப்படிச் சொல்ல எனக்கு எந்த உரிமையும் இல்லைதான். இருந்தாலும், நாம் மனுஷர்கள். சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்வது தப்பு இல்லையே..."

"யோசிக்கிறேன்."

வள்ளி, தன் அறைக்குத் திரும்பினாள். அவளுக்குத் தலை 'விண்விண்' என்று தெறிக்கத் தொடங்கிற்று. அலைச்சல். அதோடு, இந்த மாதாந்திரச் சனியன். வந்தால் இரண்டு நாட்களுக்குத் தலைவலி விடாது. தலையின் ஒரு பகுதி, இல்லாதது போல் ஆகும்.

உடை மாற்றிக் கொண்டாள். கைக்குக் கிடைத்த 'கேசட்டை'ப் போட்டுக் கொண்டு படுத்தாள்.

பர்வீன் சுல்தானா. கரைந்தாள். கஜல், அதற்கே உரிய கவிதை ஆழங்களுடன் மிதக்கத் தொடங்கியது.

"அலைகள் தாலாட்டும், அங்கும் இங்குமாய்

இந்தக் கட்டையின் பயணம், கடல் ஆழத்துக்கா?

அல்லது கரைக்கா?

மிதக்கும் கட்டை அறியும் அதன் துன்பம்..

கடல் அறியுமா., அலை அறியுமா,

அல்லது அதைக் கடலில் எறிந்த

கை அறியுமா, அதன் அவலம்?"

வள்ளி, தனிமை கொடுத்த சுதந்தரத்தில், அழுதாள்... அப்படியே உறங்கிப் போனாள்.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டே, கண் விழித்தாள்.

மணி, ஏழரையைத் தாண்டி இருந்தது. கதவைத் திறந்தாள். பிந்து வந்து அவள் எதிரில் அமர்ந்தாள்.

"உறக்கம் கலைந்ததா?"

"என்ன பிந்து.. வா... வா.. உடம்பு சரி இல்லை. ராத்திரி ரொம்ப நாழி கண் விழித்தேன்."

"விஷயம் தெரியுமா?"

"என்ன?"

"அர்த்தநாரி கைது செய்யப்பட்டு விட்டார்."

"ஐயோ... எப்போ...?"

"இன்னிக்கு அதிகாலை. காலனியிலே நடந்தது. பெரிய கூட்டமே கூடிவிட்டது..."

வள்ளி சிலை போல அமர்ந்திருந்தாள்.

(தொடரும்)

மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள். "ஸ்வயம்வரம்" இதழில் இருபது வார்த்தைகளுக்குள் இலவச விளம்பரம் பிரசுரிக்க ஜாதக நகலுடன் விண்ணப்பிக்கவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	: ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	: ரூ. 150/-
கல்யாண பொருத்தம்	: ரூ. 50/-

CONSULT DIVINE ASTROLOGER
THETIYUR V. MAHADEVAN
WITH PRIOR APPOINTMENT



தனாகர்ஷண எந்திரங்கள்/ரக்ஷைகள்

சர்வசக்தி வாய்ந்த முறைபடி தயாரிக்கப்பட்ட இந்த எந்திரங்கள் தங்கள் இஷ்ட சித்தியை உடன் பூர்த்தி செய்கின்றன. ஜோதிட ஆகம சாஸ்திர முறையில் தயாரிக்கப்படும் இந்த எந்திரங்கள்/ரக்ஷைகளுக்கு உலகளவில் பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ளது. உங்கள் தேவைக்கு உடன் எழுதி பயன் பெறுங்கள்.

	ரக்ஷை ரூ.	எந்திரம் ரூ.
1. திடீர் லாபம் குபேர தனாகர்ஷணம்	1000/-	1500/-
2. வியாபாரம் ஜனாகர்ஷணம்	1000/-	1500/-
3. திருமணம் ஸ்வயம்வரா	750/-	1250/-
4. புத்திரபாக்கியம் சந்தான கோபாலம்	750/-	1250/-
5. கல்வி அபிவிருத்தி வாகீஸ்வரி	750/-	1500/-
6. மகாசூலினி	750/-	1500/-
7. தோஷ நிவர்த்தி தன்வந்திரி	750/-	1500/-
8. அதிகாரி வச்யம் ப்ரத்யங்கிரா	1000/-	1500/-
9. மகா சுதர்சனம்	750/-	1500/-
10. மஹாலக்ஷ்மி ஸ்ரீ சக்ரா டாலர்	200/-	1500/-


தங்கள் பெயர் நக்ஷத்திரம் தெளிவான விலாசத்துடன் MO/DD SWAYAMVARALAYA (ஸ்வயம்வராலயா) பெயரில் சென்னையில் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். வெளிநாட்டு அன்பர்கள் 300% கூடுதல் தொகை அனுப்பி பெற்றுக் கொள்ளவும். அதிகச் சக்தி வாய்ந்த (SUPER POTENCY) ரக்ஷை/எந்திரங்கள் விலை தனியாகத் தெரிந்து கொள்ளவும்.

ஸ்வயம்வராலயா

(GOVT REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 33. போன் : 425822, 4846427.
மைலாப்பூர் போன் : 4984278.
பெங்களூர் போன் : 3340146

ASTROLOGY SOFTWARE FOR SALE



அதிசயமான L.P.G கேஸ் சேமிப்பு சாதனம்

ரூ. 150/- செலுத்தி வருடத்திற்கு
4 சிலிண்டர்களை சேமியுங்கள்

1. **Fuelmax** கேஸ் சேவர் கம்பி வலை நிக்கல், குரோமியம், அலுமினியம், இரும்பு, டங்ஸ்டன் மாலிப்டினியம், டின் போன்ற 7 உலோகங்களால் ஆன உலோக கலவை ஆகும்.
2. **Fuelmax** கேஸ் சேவரை வெப்பப்படுத்தும் பொழுது ஏற்படும் வேதியியல் மாற்றத்தின் காரணமாக வெப்பத்தை (Radiation) அதிகமாக வெளிப்படுத்துகிறது. இதனால் சாதாரணமாக (800°C) கிடைக்கும் வெப்பத்தை விட 35% அதிகமாக (1100°C) கிடைக்கிறது.
3. சாதாரணமாக நீங்கள் சமைக்க 40 நிமிடங்கள் ஆகிறதென்றால் எங்களது **Fuelmax** கேஸ் சேவரை உபயோகப்படுத்தும்பொழுது சுமார் 26 நிமிடங்களிலேயே சமைத்து முடித்து விடலாம்.
   இதனால் உங்கள் சமையல் நேரம் குறைகிறது.
4. சமைக்கும்பொழுது தண்ணீர், பால் பொங்கி வழிந்தாலோ, பருப்பு நுரைப்பட்டாலோ **Fuelmax** கேஸ் சேவர்க்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.
5. இதன் ஜுவாலை சிகப்பு நிறத்தில் எரிந்தாலும் உங்கள் பாத்திரங்களில் கரி படிவதில்லை. பர்னரில் கரி படிந்து கேஸ் அடைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்.
6. 1 வருட திரும்ப பெறும் உத்திரவாதமுள்ள இச்சாதனம் இந்தியா மற்றும் வெளிநாட்டு பர்னருக்கும் பொருந்தக் கூடியது. வேண்டும்பொழுது தண்ணீரில் கழுவி சுத்தப் படுத்திக் கொள்ளலாம்.
7. 2 வருடங்களுக்கு மேல் உபயோகப்படும் இச்சாதனத்தின் விலை ரூ. 150/- மட்டுமே.

Fuelmax கேஸ் சேவருடன் சமையலை துவக்குங்கள் கேஸ் சேமிப்பை காணுங்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு காரணமாய் இருங்கள்.

Super Stockist all over south india

சக்தி எண்டர்பிரைசஸ்,
15, ஈஸ்வரன் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
PAGER No. 9628 - 443536, Ph. 4890326, Fax 4890326

மொத்த விற்பனையாளர்கள் தேவை

SHOPPING PAGE

திருவரசு எழுதிய
புதிய புத்தகங்கள்

	விலை ரூ. பை
மகான்களின் அருள்மொழிகள்	18.00
பிரார்த்தனை	20.00
அமெரிக்க அறிஞர்களின் அறிவுரைகள்	18.00
ஆங்கில அறிஞர்களின் சிந்தனைகள்	35.00
ஷேக்ஸ்பியர், ரஸ்கின், கன்பூஷியஸ், கதே சிந்தனைகள்	15.00
திருநாவுக்கரசர் வாழ்வும் வாக்கும்	20.00
சுந்தரர் வாழ்வும் வாக்கும்	25.00
மாணிக்க வாசகர் வாழ்வும் வாக்கும்	25.00
திருஞான சம்பந்தர் வாழ்வும் வாக்கும்	22.00
அருணகிரிநாதர் வாழ்வும் வாக்கும்	18.00
மூதுரைக் கதைகள் ஆர் பொன்னம்மாள்	25.00

வி.பி.பி.யில் பெற கடிதம் எழுதுங்கள். வி.பி.பி தபால் செலவு தனி. புத்தக வியாபாரிகள் தேவையான புத்தகங்களுக்கு எழுதுங்கள்.

விவரங்களுக்கு

திருவரசு புத்தக நிலையம்
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை – 600 017

பீஷ்மர் ராஜாஜி
புதுமைகள் நிறைந்த
வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் **எஸ்.எஸ். மாரிசாமி**

- குழந்தை விழ கங்காதேவி தாங்கினாள்
- லால்பகதூர் வாழ்வில் அதிசயம்
- இரும்பு மனிதர் சர்தாரின் வாழ்க்கை கண்ணீரை வரவழைக்கிறது
- புலாபாய் தேசாய் அரிய தொண்டு...
- எண்ணற்ற விபரங்கள் கொண்ட வரலாற்றுக் களஞ்சியம்

112 பக்கம்: விலை ரூ. 30/-

தபால் செலவு கல்கி வாசகர்களுக்கு இல்லை. மணி ஆர்டர் அல்லது டி. டி. அனுப்ப வேண்டும்.

லட்சுமி பதிப்பகம்
3, பிரதான சாலை,
ஷெனாய் நகர், சென்னை-30
போன் எண். 613530.

ராணி சாரீஸ்

சகுந்தலா சாரீஸ்

பெங்கால் காட்டன் சாரீஸ், கண்ணைக் கவரும் பாடிக் சாரீஸ், பாடிக் சுடிதார் துணிகள்

மதுரை டெக்ஸ்டைல்ஸ்

2, சிவப்பிரகாசம் சாலை,
பாண்டி பஜார், சென்னை - 600 017.
(அகஸ்தியர் கோவில் அருகில்)
போன் : 433 2197.

அகில உலக அனுஷ்டானத்தில்
உள்ளது எமது அசல் 28 நெ.
பாம்பு பஞ்சாங்கம்



தினசரி திதி நட்சத்திர குறிப்புகள், ஆலய உற்சவ குறிப்புகள், சிறந்த முகூர்த்த தின குறிப்புகள் அடங்கியது.

மனோன்மணி விலாசம் பிரஸ்
26, பாஷ்ய காரலு வீதி,
கொண்டித்தோப்பு, சென்னை - 79.
போன் : 518887

நாராய் நாராய்!

தமிழ் நாடகத் துறையில் 'தியேட்டர்' என்பது பெரிய விஷயம். சாதாரணமான சபா நாடகங்களிலிருந்து சற்றே அல்ல - முற்றிலுமே மாறுபட்ட படைப்புகள் அவை.

இந்த தியேட்டர் குழுக்களில் இரண்டு வகை. மேல் நாட்டு பாணியில் அவர்களின் முயற்சிகளைப் போலவே முயன்று பார்ப்பது ஒருவகை.

தமிழில் தியேட்டர் முயற்சிகள் மரபு சார்ந்த வேர்களிலிருந்தே எழ வேண்டும் என்பது இரண்டாவது வகை.

இந்த இரண்டாவது வகை சிந்தனையைக் கொண்ட சீரியஸ் தியேட்டர் கலைஞர்கள் இது வரை இல்லாத அளவில், தமிழ் நாட்டில் ஒரு புதிய முயற்சியை இப்போது மேற்கொண்டிருக்கிறார்கள்.

ஒத்த சிந்தனை கொண்ட மூன்று குழுக்கள் இணைந்து செயல்படுகின்றன என்பதுதான் அந்த முயற்சி.

இந்த மூன்று குழுக்கள்...?

ஒன்று லண்டனிலிருந்து தாசீசியஸ் தலைமையில் வந்துள்ள 'களரி' நாடகக் குழு.

இரண்டாவது, இலங்கையிலிருந்து நாடக அரங்கக் கல்லூரி குழு.

மூன்றாவதாக சென்னையில் உள்ள 'பல் கலை அரங்கம்' குழுவைச் சார்ந்த கலைஞர்கள்.

நான்கு நாடகங்கள். எல்லாம் சின்னச் சின்ன. ஆனால் பெரிய உணர்வுகளை நெற்றியில் அடித்தாற்போலச் சொல்லும் புதுமை நாடகங்கள்.



• நாடகக் குழுவினருடன் தாசீசியஸ் (நடுவில்)

புதியதொரு வீடு - பொறுத்தது போதும் - எந்தையும் தாயும் - அபசுரம்.

இந்த நான்கில், பொறுத்தது போதும் என்ற நாடகம் இலங்கையில் நான்குமுறை ஜனாதிபதி விருதினைப் பெற்ற சிறப்புக்குரியது. எழுதியவர்: ஈழக்கூத்தன் (தாசீசியஸின் புனைபெயர்)


புலம் பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகள் பலவற்றிலும் பல்வேறு குழுக்களால் மேடையேற்றப்பட்டு வரும் இந்தத் தமிழ் நாடகங்களை நடத்த வந்திருக்கும் வெளிநாட்டுக் குழுவினரோடு சென்னை நாடகக் கலைஞர்களும் சேர்ந்து, பல நாட்கள் ஒத்திகை பார்த்து மகாபலிபுரத்தில் தொடங்கி, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, மதுரை, திருப்பூர், பெங்களூர் என்றெல்லாம் சுற்றி, அங்கு பல்கலைக்கழக நாடகத் துறைகள் மற்றும் தமிழ்ச் சங்கங்களின் துணையோடு கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் கலந்து, வெற்றிகரமாக சென்னை திரும்பி இங்கே ஏப்ரல் 9, 10 தேதிகளில் அந்த நான்கு நாடகங்களின் மேடையேற்றம்.

தாசீசியஸ், உலக நாடக அரங்கில் இது போன்ற தியேட்டர் முயற்சிகளில் பெரிதும் மதிக்கப்படும் ஒரு கலைஞர்.

இந்த நாடகப் பயணத்திற்கு 'நாராய் நாராய்' (சங்கப் பாடலில் தூது போன செங்கால் நாரையின் ஞாபகார்த்தமாக!) என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

'இது ஒரு நீண்ட பயணத்தின் முதற் கட்டம். உலகளாவிய தமிழ் அரங்கத்தைக் கட்டுவதற்கான முதற்கல்!' என்கிறார் தாசீசியஸ்.

— கஸ்தூரி



பாரெங்கும் அழகு!

அதிகாலை கீழ்வானில், மேல்வானில் மாலை
அன்றாடம் நாம் காணும் ஒளிவண்ண இழைகள்!
மதகோடு போராடி வருகின்ற வடிகால்
வயற்காட்டில் காற்றுக்கு வளைந்தாடும் கதிர்கள்!
நதி கானில் நெளிந்தாடி நடைபோடும் பொழுதில்
நகை செய்து தலையாட்டி மகிழ்கின்ற மரங்கள்!
சுதி பாடிப் புரண்டோடிக் கரைமோதும் அலைகள்!
சுடும் வெய்யில் தனில்வெள்ளி முடி சூடும் நிலைகள்!

மழைக்கால இரவிற்கு மயக்கும் மை வண்ணம்!
வானத்தில் அதைக்கீற வாளொன்று மின்னும்!
கழைக்கூத்தில் கயிற்றின்மேல் நடக்கின்ற பாங்கில்
கடல்மீதில் ஓடங்கள் மிதந்தாடும் காட்சி!
விழக்கூடும் தான்வாழும் குடிலென்ற போதும்
விசனத்தில் ஆழாமல் வயற் காட்டை எண்ணி
உழைக்கின்ற விவசாயி மனம் வானைப் பார்க்கும்!
உற்சாக ஒளிக்கீற்று முகவாட்டம் தீர்க்கும்!

மேகத்தின் விளிம்பில் தன் முகம் காட்டும் திங்கள்!
வெண்பற்கள் முளைக்காத குழந்தைப்புன் முறுவல்!
நாகத்தின் படமாடும் ஒரு காட்சி! மண்ணில்
நளினத்தின் வடிவாக நடமாடும் பெண்கள்!
தாகத்தில் கவிவாணன் பண்ணோடு பாடல்
தனையாத்து முடிக்கின்ற தருணத்தின் கருவம்!
பாகொத்த இனிமைக்குப் பாரெங்கும் அழகு!
படர்ந்துள்ள தையள்ளிப் பருகற்குப் பழகு!

— நா.சி. வரதராஜன்

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).


Lalitha
சிறுநகை
சிந்தும் செவ்விதழும்
எழிலாய் பூத்த புது நகையும்
லலிதா ஜுவல்லரி மார்ட் பி. லிமிடெட்.,
123, உஸ்மான் ரோடு, பனகல் பார்க், சென்னை 600 017. போன் : 828 2939, 828 3413.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka





